24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள்: 24
விலை: 30

சுடர் 34 | கதிர் 135 | பங்குனி 28ஆம் நாள் | வெள்ளிக்கிழமை | 12 ஏப்ரல் 2019 | வள்ளுவர் ஆண்டு 2050



மண்டைதீவில்

## காணி சுவீகரிப்பு தடுத்து நிறுத்தம்

### கடற்படையினர் மறுப்பு

யாழ்ப்பாணம், ஏப். 12
யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தீர்மானத்தை மீறி கடற்படைக்கு காணி சுவீகரிக்கச் சென்ற நில அளவைத் திணைக்களத்தை மக்கள் முற்றுகையிட்டு வெளியேற்றிய சம்பவம் மண்டைதீவில் நேற்று இடம்பெற்றது.
வேலணை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மண்டைதீவு கிழக்கு பகுதியில் நிலை கொண்டுள்ள 19

காணி சுவீகரிப்பு விவகாரம் தொடர்பில்

# பாதுகாப்புச் செயலருடன் விரைவில் சம்பந்தன் பேச்சு



யாழ்ப்பாணம், ஏப்ரல். 12
மண்டைதீவு உட்பட வடக்கில் படையினரின் தேவைக்காக சுவீகரிக்கத் திட்டமிட்ட நிலங்கள் தொடர்பில் எதிர்வரும் 29ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சின் செயலர் மற்றும் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோருக்கு இடையில் யாழ்ப்பாணத்தில் சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது. 19

## அசாஞ்சே கைதானார்

லண்டன், ஏப். 12
பிரிட்டனில் உள்ள ஈக்வடார் தூதரகத்தில் தஞ்சம் அடைந்திருந்த விக்கிலீக்ஸ் நிறுவுனர் ஜூலியன் அசாஞ்சேவை பிரிட்டன் பொலிஸார் லண்டனில் நேற்றுக் கைது செய்தனர்.
விக்கிலீக்ஸ் நிறுவனர் ஜூலி 19

## வடக்கில் 4,142 ஏக்கர் நிலம் படையினரின் வசம் உள்ளது

### அரசதலைவரின் கூற்றுக்கு முரணாக அது அமைகின்றது

யாழ்ப்பாணம், ஏப். 12
வடக்கு கிழக்கு மாகாணங்களில் 2 ஆயிரத்து 457 ஏக்கர் தனியார் நிலமே படையினரின் வசமிருப்பதாக அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்த தகவல் தவறானது, உண்மைக்குப் புறம்பானது என்பது மாவட்டச் செயலகங்களின் புள்ளி விவரங்களின் மூலம் தெரியவந்துள்ளது. 19

## ஊர்காவற்றுறை ஏ.எஸ்.பிக்கு எதிராக எம்.பி. முறைப்பாடு!

யாழ்ப்பாணம், ஏப். 12
ஊர்காவற்றுறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு எதிராக யாழ்ப்பாண மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் முறையிட்டார் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.
மண்டைதீவில் கடற்படையினருக்கு காணி சுவீகரிப்பதற்காக நிலம் அளவிடும் முயற்சி நேற்று இடம்பெற்றது. அந்தப் பகுதியின் பொதுமக்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் முயற்சியை அடுத்து அது தடுத்து நிறுத்தப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் சம்பவ 19

## உள்நாட்டு அலுவல்கள் அமைச்சராக பொன்சேகாவை நியமிக்க பரிந்துரை

### அரச தலைவரிடம் விடுக்கிறது ஐ.தே.க

கொழும்பு, ஏப். 12
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சராக பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகாவை நியமிக்குமாறு, அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்குப் பரிந்துரை செய்ய ஐக்கிய தேசியக் கட்சி முடிவு செய்துள்ளது.
தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் அலரி மாளிகையில் நேற்று நடந்த உயர்மட்டக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. சரத் பொன்சேகா உள்ளிட்ட ஆறு புதிய அமைச்சர்களை நியமிக்குமாறு அரச தலைவருக்குப் பரிந்துரை 19

## கோத்தாவினது 'குடுமி' பொன்சேகாவின் வசம்

### புதிய 'செக்' வைக்கிறது ஐ.தே.க

கொழும்பு, ஏப். 12
கோத்தாபாய ராஜபக்சவுக்கு முட்டுக்கட்டை போடும் வகையிலேயே, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவை உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் பதவிக்கு நியமிக்க ஐ.தே.க திட்டமிட்டுள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.
தற்போது, உள்துறை அமைச்சுக்கு 19

## கோத்தாவுக்கு எதிராக பிரிட்டனிலும் வழக்கு!

### சாத்தியம் என்கிறார் சூக்கா

கொழும்பு, ஏப். 12
முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவுக்கு அமெரிக்காவில் தொடரப்பட்ட வழக்கினைப்போல் பிரித்தானியாவிலும் வழக்குகளைத் தொடர்வதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதாக உண்மை மற்றும் நீதிக்கான அமைப்பின் பணிப்பாளரும் மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான யஸ்மின் சூக்கா தெரிவித்தார்.
இலங்கையின் முன்னாள் பாதுகாப்பு செயலர் 19

## மாதகல் பகுதியில் துப்பாக்கிச்சூடு அடியோடு மறுக்கின்றது பொலிஸ்

யாழ்ப்பாணம், ஏப். 12
யாழ்ப்பாணம் இளவாலைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாதகல் பகுதியில் யாழ்ப்பாண பொலிஸாரால் நேற்று மாலை துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு கஞ்சா கடத்தல் காரர் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார் என்று அந்தப் பகுதி பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். எனினும், அவ்வாறு தம்மால் துப்பாக்கிச் சூடு நடத்தப்படவில்லை என்று பொலிஸ் தரப்பு தெரிவிக்கின்றது. வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சித்தன்கேணிப் பகுதியில் வைத்தே தாம் 7.2 கிலோகிராம் நிறையுள்ள கஞ்சாவுடன் ஒருவரைக் கைதுசெய்தோம் என்றும் துப்பாக்கிச் சூடு நடத்தப்படவில்லை என்றும் யாழ்ப்பாணப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-26)

## புத்தாண்டை முன்னிட்டு மதுச்சாலைகள் மூடல்!

கொழும்பு, ஏப். 12
சிங்கள - தமிழ் புத்தாண்டை முன்னிட்டு மதுபானசாலைகள் மூடப்படவுள்ளன. இதன்படி எதிர்வரும் 13ஆம் மற்றும் 14ஆம் திகதிகளில் மதுபானசாலைகள் மூடப்படும் என்று அரசு அறிவித்தது. (ம)

இப்புத்தாண்டு காலத்தில்
பத்து மடங்கு வெகுமதிகள்



DFCC கடனட்டை
உங்கள் DFCC கடனட்டையை ஏப்ரல் மாதத்தில் ஆகக்குறைந்தது 10 நாட்களுக்கு உபயோகித்து
10 மடங்கு மேலதிக CashBack வெகுமதிகளைப் பெறுங்கள்.
உங்கள் கிரெடிட் கார்ட்டைப் பெற்றுக் கொள்ள அண்மையிலுள்ள DFCC வங்கிக் கிளைக்கு வாருங்கள் அல்லது இப்பொழுதே அழையுங்கள்.
24 மணிநேர அழைப்பு மையம்: 0112 350000
www.dfcc.lk
DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

# விகாரி வருட தமிழ்ப் புத்தாண்டு

# பொதுப் பலன்கள் 2019

*மங்களகரமான விகாரி வருடம் கோலாகலமான வசந்த ருதுவில், உத்தராயணப் புண்ணிய காலம் நிறைந்த ஞாயிற்றுக்கிழமை மதியம் 01 மணி 06 நிமிடத்துக்கு 14.04.2019ல் சுக்ல பட்சத்து தசமி திதியில், கீழ்நோக்குள்ள ஆயில்யம் நட்சத்திரம் இரண்டாம் பாதத்தில், கடக ராசியில், கடக லக்னத்தில், நவாம்சத்தில் தனுசு லக்னம், மகர ராசியிலும், சூலம் நாமயோகத்திலும், தைதுலம் நாமகரணத்திலும், சூரியன் ஓரையில், நேத்திரம் ஜீவன் நிறைந்த, பஞ்சபட்சிகளில் ஆந்தை துயிலுறும் நேரத்தில், புதன் மகா தசையில் சூரியன் புத்தியில், குரு அந்தரத்தில் மங்களகரமான விகாரி வருடம் பிறக்கிறது.*

## மேஷ ராசி

அன்றாட வாழ்வில் ஏற்படும் நெளிவு சுளிவுகளை அறிந்து அதற்கேற்ப வாழக் கற்றுக் கொண்டவர்களே! உங்களுடைய லாப வீட்டில் சுக்கிரன் அமர்ந்திருக்கும் நேரத்தில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் பணப்புழக்கம் அதிகரிக்கும். வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். புதிய திட்டங்கள் நிறைவேறும். வீட்டில் அடுத்தடுத்து சுப நிகழ்ச்சிகள் நடக்கும். பிள்ளைகளின் போக்கில் நல்ல மாற்றம் ஏற்படும்.

பழைய நகைகளை விற்று புது டிசைனில் ஆபரணங்கள் வாங்குவீர்கள். உங்கள் ராசிக்கு 4ஆம் வீடான சுகவீட்டில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் இழுபறியாக இருந்த வேலைகள் விரைந்து முடியும். மனக்குழப்பம் நீங்கும். குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பிள்ளைகளின் போக்கில் நல்ல மாற்றம் ஏற்படும். கல்யாணம், காதுகுத்து என வீடு களைகட்டும். கனிவான பேச்சாலேயே காரியங்களைச் சாதிப்பீர்கள்.

இந்த ஆண்டு முழுக்க ராகு பகவான் 3ஆம் வீட்டிலேயே தொடர்வதால் மனோபலம் அதிகரிக்கும். எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். வீண் விவாதங்கள், சண்டையிலிருந்து ஒதுங்குவீர்கள். வராது என்றிருந்த பணம் கைக்கு வரும். கைமாற்றாகவும், கடனாகவும் வாங்கியிருந்த பணத்தைத் திருப்பித் தருவீர்கள். சித்தர்கள், ஆன்மிகப் பெரியோரின் ஆசி பெறுவீர்கள். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். சனிபகவான் இந்த ஆண்டு முழுக்க 9ஆம் வீட்டிலேயே இருப்பதால் தன்னம்பிக்கை பிறக்கும். தோல்வி மனப்பான்மையிலிருந்து விடுபடுவீர்கள். அதிக வட்டிக் கடனைக் குறைந்த வட்டிக்குக் கடன் பெற்று திருப்பிச் செலுத்துவார்கள்.. ஆனால்



இந்த ஆண்டு முழுக்க கேதுவும் 9ஆம் வீட்டிலேயே நீடிப்பதால் செலவுகளைக் குறைக்க முடியாமல் அவ்வப்போது திணறுவீர்கள். கடந்த கால இழப்புகளை நினைத்து அவ்வப்போது கொஞ்சம் சங்கடத்துக்குள்ளாவீர்கள்.

நல்ல வாய்ப்புகளையெல்லாம் பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்று வருத்தப்படுவீர்கள். தந்தையாருக்கு நெஞ்சு வலி, நீரிழிவு, கை கால் வலி வந்து போகும். அவருடன் மனத்தாங்கல் வரும். பிரச்சினைகளில் சட்டத்தரணிகளைக் கலந்தாலோசித்து முடிவெடுக்கப் பாருங்கள். குற்றம் பார்க்கின், சுற்றம் இல்லை என்பதைநீங்கள்உணார்ந்து செயல்படுவது நல்லது.

இந்த வருடம் தொடக்கம் முதல் 18.05.2019 வரை குரு அதிசார வக்ரமாகி 9ம் வீட்டில் நிற்பதால் இக்கால கட்டத்தில் எதிர்பார்த்த வகையில் பணம் வரும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தைத் தந்து முடிப்பீர்கள். வீடு, மனை சேரும். கல்யாணம், மஞ்சள் நீராட்டு, கிரகப்பிரவேசம் எனப் பல விசேஷங்களிலும் உங்களுக்கு முதல் மரியாதை கிடைக்கும். அதிக மைலேஜ் தரக் கூடிய வாகனம் வாங்குவீர்கள்.

ஆனால், 19.05.2019 முதல் 27.10.2019 வரை உங்கள் ராசிக்கு 8ம் வீட்டில் குரு அமர்வதால் எதையோ இழந்ததைப் போல் ஒருவித கவலை, சிலர் மீது நம்பிக்கையின்மை, வீண் அலைச்சல் நேரும். மறைமுக எதிரிகள் முளை ப்பார்கள். வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். முன்கோபத்தால் நல்லவர்களின் நட்பை இழக்க நேரிடும். குடும்பத்தில் நிம்மதியற்ற சூழ்நிலை, மனைவி, பிள்ளைகளுடன் மனம்விட்டுப் பேச முடியாத நிலை வந்து போகும்.

ஆனால் 28.10.2019 முதல் 27.03. 2020 வரை உங்களின் பாக்கியஸ்தானமான 9ம் வீட்டில் குரு நுழைவதால் இடையூறுகளைக் கடந்து வெற்றி பெறுவீர்கள். சில இடங்களில், சில நேரத்தில் அமைதியாக இருந்து காரியம் சாதிப்பீர்கள். பெரிய மனிதர்களின் நட்பு கிடைக்கும். பாதியில் நின்ற வீடு கட்டும் பணியைத் தொடங்குவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. குடும்பத்தில் தள்ளிப் போன சுப நிகழ்ச்சிகளெல்லாம் ஏற்பாடாகும். மகளுக்கு நல்ல வரன் அமையும். மகனுக்கு எதிர்பார்த்த நிறுவனத்தில் வேலை கிடைக்கும். மறைமுக எதிர்ப்புகள் அடங்கும்.

வியாபாரிகளே! பெரிய முதலீடுகள் செய்து மாட்டிக் கொள்ளாதீர்கள். வாடிக்கையாளர்களை அதிகப்படுத்த புதிய சலுகைகளை அறிவிப்பீர்கள். நல்ல வேலையாள்களைப் பணியில் அமர்த்துவீர்கள். நன்கு அறிமுகமானவர்களானாலும் கடன் தரவேண்டாம். தரகு மூலம் ஆதாயம் உண்டு.

உத்தியோகஸ்தர்களே! நேரம் காலம் பார்க்காமல் உழைத்தும் அதற்கான அங்கீகாரம் கிடைக்கவில்லையே என வருந்துவீர்கள். சக ஊழியர்களுடன் மனத்தாங்கல் வரும். மேலதிகாரியுடன் அவ்வப்போது மனஸ்தாபங்கள் இருந்தாலும் அனுசரித்துச் செல்லுங்கள். திடீர் இடமாற்றம் உண்டு.

**பெண்களுக்கு:**

ராகுபகவான் சாதகமாக இருப்பதால் திடீர் யோகம், பணவரவு, அந்தஸ்து உயரும். நாத்தனார் உங்கள் வேலையைப் பகிர்ந்து கொள்வார். குழந்தை பாக்கியம் உண்டு. வேற்றுமதத்தவரால் ஆதாயம் உண்டு. கணவர் மனம் விட்டுப் பேசுவார். உங்கள் ஆலோசனைகளையும் ஏற்றுக்கொள்வார்.

மே முதல் அக்டோபர் மாதம் வரை குரு மறைவதால் வீண் சந்தேகத்தால் நல்லவர்களின் நட்பை இழந்துவிடாதீர்கள். சட்டநிபுணர்களைக்கலந்தாலோசித்து முக்கிய ஆவணங்களில் கையெழுத்திடுவது நல்லது. இந்தப் புத்தாண்டு உங்களுக்கு ஒரு பக்கம் அலைச்சலையும் செலவுகளையும் தந்தாலும் மற்றொரு பக்கம் விடாமுயற்சியாலும், தன்னம்பிக்கையாலும் சாதிக்க வைக்கும்.

**பரிகாரம்:**

அருகிலிருக்கும் சிவன் கோயிலுக்கு பிரதோஷ நாளில் சென்று வணங்குவதுடன். இளநீரைத் தானமாகக் கொடுங்கள். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

*தொடரும்*

## புத்தாண்டு சுபநேரம்

**வாக்கிய பஞ்சாங்கம்**

அறுபது வருடத்துக்குத் தமிழ் ஆண்டு பெயர்ப் பட்டியலில், புதிதாகப் பிறக்கப் போகும் விகாரி வருடம் முப்பத்து மூன்றாவது இடத்தில் உள்ளது. இது 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, (சித்திரை மாதம் முதலாம் நாள்) பிற்பகல் 1மணி 12 நிமிடத்தில் விகாரி வருடம் பிறக்கிறது.

காலை 9 மணி 12 நிமிடம் முதல், மாலை 5மணி 12 நிமிடம் வரை விசேட புண்ணிய காலமாகும். இக் காலத்தில், மருத்து நீர் தெளித்து, சிரசில் ஆலிலையும், காலில் இலவமிலையும் வைத்து நீராடி, வெள்ளை நிற, சிவப்புக் கரை அமைந்த பட்டாடை அணிந்து, வழிபடும் கடவுளைத் தியானித்து, நற்கருமங்களைச் செய்ய உறுதி எடுத்துக் கொள்ளவும்.

கண்ணாடி, தீபம், நிறைகுடம், பெற்றோர்,பெரியோர், மஞ்சள், குங்குமம், சந்தனம், வெற்றிலை, பாக்கு, மலர்கள் போன்ற மங்களப் பொருள்களைத் தரிசித்து, இறை வழிபாடும் செய்யலாம்.

**கை விசேடம்**

சித்திரை மாதம் முதல் நாள் ஞாயிற்றுக்கிழமை (14.04.2019) இரவு 10.31 முதல் 11.15 வரையாகும்.

சித்திரை 4ஆம் நாள் புதன் கிழமை (17.04.2019) பகல் 10.16 முதல் 11.51 வரையாகும்.

**திருக்கணித பஞ்சாங்கம்**

விகாரி வருடம் 14.04.2019 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, பகல் 02.09 மணிக்குப் பிறக்கிறது.

பகல் மணி 10.09 முதல், மணி 06.09 வரை சங்கிரமண புண்ணிய காலமாகும். இப் புண்ணிய காலத்தில் யாவரும், தலையில் இலவம் இலையும், காலில் விளா இலையும் வைத்து, மருத்து நீர் தேய்த்து ஸ்நானஞ் செய்ய வேண்டும்.

சிவப்பு நிறப் பட்டாயினும் சிவப்புக் கரை வைத்த, புதிய வெள்ளை நிற வஸ்திரமாயினும் அணிய வேண்டும்.

இருக்கும் தங்க ஆபரணங்களை அணிந்து, பூரண கும்பத்தைத் தரிசித்து, மேலும் மங்களகரமான பொருட்களைத் தரிசித்து, இஷ்ட, குல தெய்வங்களை வணங்குதல் நலமாகும்.

**கை விசேடம்**

சித்திரை முதலாம் நாள் ஞாயிற்றுக் கிழமை(14.04.2019) காலை 11.00முதல், மதியம் 12.00 வரை.

சித்திரை முதலாம் நாள் ஞாயிற்றுக் கிழமை(14.04.2019) இரவு 08.20 முதல் 09.30வரை.

## பெயர் மாற்றம்

**கனகலட்சுமியம்மா** ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை **கனகலட்சுமி** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **கனகலட்சுமி** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச ஜனநாயக குடியரசிற்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

**கனகலட்சுமி**

## ஆதனப்பெயர்மாற்ற அறிவித்தல்
## வலிகாமம் வடக்கு பிரதேசசபை
## உப அலுவலகம் - மல்லாகம்

**விண்ணப்பதாரர் :- விஸ்வலிங்கம் சண்முகலிங்கம் பெண் சுசிலாதேவி**
**முகவரி :- மாவிலங்கை, அளவெட்டி வடக்கு, அளவெட்டி.**

வலிகாம் வடக்கு பிரதேசசபை மல்லாகம் உப அலுவலகத்துக்கு உட்பட்ட மாவிலங்கை அளவெட்டி வடக்கில் அமைந்துள்ள மாவிலங்கையடி என்ற ஆதனம் ஆதனப்பதிவேட்டில் பதியப்படவில்லை.

குறித்த ஆதனம் ஆனது பிரசித்த நொத்தாரிசு இ.ந.சிவப்பிரகாசம் முகதாவில் 15.07.1968 ஆம் திகதி 5448 இலக்க உறுதியின் மூலம் செல்லப்பா கைம்பெண் செல்லம்மா என்பவர் நாகமுத்து வேலுப்பிள்ளை பெண் மகேஸ்வரி என்பவருக்கு அறுதியளித்துள்ளார். பின்னர் பிரசித்த நொத்தாரிஸ் பொ.சுந்தரலிங்கம் முகதாவில் 18.09.2002ஆம் திகதி 449 இலக்க உறுதி மூலம் விஸ்வலிங்கம் சண்முகலிங்கமும் பெண் சுசிலாதேவியும் பிரகடன உறுதி மூலம் குறித்த ஆதனமானது 1986ஆம் ஆண்டு பங்குனிமாதம் 23ஆம் திகதி நொத்தாரிஸ் வ.தம்பிப்பிள்ளை முகதாவில் 6368 இலக்க சீதன உறுதிப்படி சீதனமாக வந்ததெனவும் அவ் உறுதி கடந்தகால இடப்பெயர்வில் கைதவறி விட்டதென்றும் வெளிப்படுத்தியுள்ளார். குறித்த உறுதியானது கச்சேரியிலும் தொலைந்து விட்டதென்று காணிப்பதிவாளரினால் சான்றுபடுத்தப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

**ஆதன விவரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்கு பிரதேசசபை மல்லாகம் கோவிற்பற்றும் அளவெட்டி இறையும் மாவிலங்கையடி நிலப்பரப்பு நாண்கும் (04) வீடும், கிணறும் வான்பயிர் செய்பயிர்களும், இதன் தென் கிழக்குப் பக்கமாக இருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்காற் பாவிப்புரித்தும் எல்லைகள்.

**கிழக்கு** - செல்லப்பா சரவணமுத்துவின் உரிமைக்காரரின் ஆதனம்
**வடக்கும் மேற்கும்** - ஒழுங்கை
**தெற்கு** - குமாரவேல் பெண் கோசலாதேவியின் ஆதனம்.

மேற்குறித்த ஆதனத்தை விஸ்வலிங்கம் சண்முகலிங்கம் பெண் சுசிலாதேவி என்னும் பெயரில் பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாள்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்குப் பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் வலிகாமம் வடக்குப் பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சோமசுந்தரம் சுகிர்தன்**
**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை,**
**காங்கேசன்துறை. (கொல்லங்கலட்டி)** (CS/24655)(11,17)

## ஆரோக்கிய வாழ்வுக்கான
## இயற்கை உணவு உற்பத்தி விற்பனை நிலையம்
# திறப்புவிழா

**காலம்: இன்று (12.04.2019) வெள்ளிக்கிழமை**
**நேரம் : முற்பகல் 10.00 மணி**
**திறந்து வைப்பவர் :** Dr.G. **ஸ்ரீதரன்**
BSM (S.L).M.PHILL
(JAFFNA) & J.P
**இடம் : இலங்கை முதியோர் சுகவாழ்வு கழகம் தெல்லிப்பழை துர்காதேவி அம்மன் கோயில் முன்பு.**

- இயற்கை முறை உணவு உற்பத்திகள் விற்பனை நிலையத்தில் விற்பனைக்கு வைக்கப்படும் உற்பத்தியாளர்கள் சந்தைப்படுத்த விரும்புபவர்கள் எங்களை தொடர்புகொள்ளவும்.
- கடந்த வருடத்தில் எமது முதியோர் சங்கத்தினால் பாராட்டப்பட்ட வடமகாகணத்தில் 90,100 வயதுக்கு மேற்பட்டவர்கள் விவரங்கள் அடங்கிய முதியோர் மலர் உட்பட சஞ்சிகைகள் எமது நிலையத்தில் விற்பனை உண்டு.

**இலங்கை முதியோர் சுகவாழ்வு கழகம்**
**தலைவர் - 077 606 8656**
**செயலாளர் - 077 663 6596**
**நிலையம் - 021 205 9256**

## பதவி வெற்றிடம்

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்துக்கு நிர்வாக உத்தியோத்தர் பதவிக்கான பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் 35 வயது தொடங்கி 55 வயதுக்கு இடைப்பட்டவராகவும், கணினி மற்றும் Email, Internet போன்றவற்றை கையாளத் தெரிந்தவராகவும், ஆங்கிலத்தில் பேச, எழுத, தொடர்பாடத் தெரிந்தவராகவும், தமிழ், ஆங்கில தட்டச்சு அனுபவமுள்ளவராகவும், அரசசார்பற்ற நிறுவனங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் Project Coordination, Field Coordination, Monitoring அனுபவமுள்ளவராகவும், வெளிக்கள வேலைகளைச் செய்ய தயார் நிலையிலுள்ளவராகவும், நிதி முகாமைத்து வத்தில் பரீட்சயம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

மேற்படி தகைமைகளுள்ள விண்ணப்பதாரிகள் தமது சுயவிபரக் கோவை மற்றும் தமது விருப்பத்தை தெளிவுபடுத்தும் கடிதத்துடன் 19.04.2019 திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும்.

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி :**
**தலைவர்,**
**யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்,**
**இல : 76, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.**
Email: jaffnacngos@gmail.com
Tel. No : 021 222 3668 (m.9898) (13)

## வகுப்பு

பிரெஞ்சு மொழி தகுந்த முறையில் கற்பிக்கப்படும். (CS/24662)(11,17)

**075 836 9253**

**இயற்கை வைத்தியம் 13ம், 14ம் திகதிகளில் யாழில்**

பாலியல் குறைபாடு, ஆண்மை குறைவு, மாதவிடாய் பிரச்சனை முகப்பருவிற்கு 100% பக்கவிளைவுகள் அற்ற வைத்தியத்தை அறிமுகப்படுத்தலும் Ever Sixteen உத்தியோகஸ்தர்களை சந்தித்து சுகம்பெறலாம் **0750 252 141**

## அறை வாடகை (Room For Rent)

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அண்மையில் அமைதியான சூழலில் பணிபுரிகின்ற பெண்கள் அல்லது பல்கலைக்கழகத்தில் கல்விபயிலும் வெளிமாவட்ட மாணவிகளுக்கு மாதாந்த வாடகைக்கு சகல வசதிகளுடன் கூடிய அறை (**Room**) வாடகைக்கு விடப்படும். (CS/24664)(11,17)

**077 945 7705, 077 615 2992**

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நவாலிதெற்கு (அரசடியிலிருந்து கல்லுண்டாயைத் தொடுக்கும் குறுக்கு வீதியில்) நிலப்பரப்பு 03, குழி 13 காணி விற்பனைக்கு உண்டு

தொடர்பு:
**0774 319 735, 0767 930 404**

## பணிப்பெண் தேவை

உரும்பிராயில் வயோதிப பெண் ஒருவரை பராமரிக்க பெண் பராமரிப்பாளர்கள் தேவை.
பகுதி நேர பராமரிப்பாளர்களும் வீட்டில் இருந்து பராமரிக்க விரும்புபவர்களும் தொடர்புகொள்ளலாம்

**இந்திராணி - 077 276 5413**

## மணமகள் தேவை

1987 இல் பிறந்த A/L படித்த தனியார் துறையில் வேலை பார்க்கும் மகனுக்கு மணமகள் தேவை.
R/C சமயம்
ஓரளவு படித்த பெண் தேவை.

**076 300 0894** (CS/24668)(11,17)

# யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

**விசேட விலைக்கழிவு**

## திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்
# இந்தியன் செலக்‌ஷனின்
## சித்திரைப் புத்தாண்டு விசேட தள்ளுபடி

**புத்தம் புதிய ஆடைத் தெரிவுகள்**



| | | |
|---|---|---|
| பட்டுச் சாறி | - ~~15000/=~~ | 7500/= |
| கொட்டன் சாறி | - ~~1800/=~~ | 1000/= |
| கொட்டன் Top | - ~~1500/=~~ | 1000/= |
| டெனிம் Top | - ~~1500/=~~ | 1000/= |
| பார்ட்டி புரொக் (பெரியது) | - ~~5000/=~~ | 3500/= |
| பார்ட்டி புரொக் (சிறியது) | - ~~3500/=~~ | 2500/= |
| கொட்டன் சல்வார் | - ~~5000/=~~ | 2000/= |
| நெற் சல்வார் (பெரியது) | - ~~5000/=~~ | 2000/= |
| நெற் சல்வார் (சிறியது) | - ~~3500/=~~ | 1000/= |



**இன்னும் பல புத்தம் புதிய டிசைன்களில்**

கொட்டன் சாறிகள், பட்டுச் சாறிகள், கொட்டன் சல்வார்கள், நெற் சல்வார்கள், சல்வார் துணிகள், டொப் வகைகள்,பார்ட்டி புரொக்ஸ் , மொடன் சூட்ஸ், சேட், T-சேட், ரவுசர்

**இம் முறையும் சித்திரைப் புத்தாண்டை இந்தியன் செலக்‌ஷனுடன் குதூகலமாகக் கொண்டாடுங்கள்**

**ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்**

# இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்
# காலம் : 14.04.2019 வரை

# நினைவலைகள்

**32 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

**4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

பிறப்பு
14.11.1939



இறப்பு
11.10.1987

திதி:
சதுர்த்தசி

பிறப்பு
04.05.1942



இறப்பு
27.03.2015

திதி:
அட்டமி

## சின்னத்தம்பி தியாகராஜா | தியாகராஜா அம்பிகையம்மா (கண்ணகி)

(நயினாதீவு - 5ஆம் வட்டாரம்)

நெஞ்சமதில் நிலைத்து நின்று எண்ணமதில் என்றும் நிலைத்து
வண்ணமலர் வாசமாக மனதில் நின்றீர்
கண்ணிமைக்கும் காலத்துள் காலனுமைக் கவர்ந்து சென்ற
கொடுமையை எண்ணிக் கலங்குகின்றோம்
முப்பத்திரண்டு ஆண்டுகள் சென்ற பின்னும் என்றும் அழியா நினைவுகள்.

நாள்கள் பல நூறு ஓடி மறைந்தாலும் - எம்
நெஞ்சில் நிலைத்திருக்கும்
பாசதீபம் - உங்கள் நினைவுகள்
என்றும் அழியாது கண்ணின் இமைபோல எமைக் காத்த அம்மா
உங்கள் கனவுகள் யாவும் நிறைவேறும்.

**அம்மன் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**

(CS/24656)(11,17)

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி சத்தியபாமா பாலகிருஷ்ணன்



தோற்றம் 27.11.1940 மறைவு 10.04.2019

திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சத்தியபாமா பாலகிருஷ்ணன் 10.04.2019 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பாலகிருஷ்ணனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராசா - மனோன்மணி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான துரையப்பா - சொர்ணம்மா தம்பதிகளினதும் மற்றும் காலஞ்சென்ற சின்னத்தங்கச்சியின் மருமகளும் , குணநாதன் (ஆஸ்திரேலியா), சறோஜினி தேவி (கனடா), கமலாம்பாள், டில்லியா பரணம் காலஞ்சென்ற வைரவநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சத்தியபாலா (லண்டன்), சைலஜா (Siddha Consultant, Siddha Teaching Hospital, Kaithady ), கிருஷ்ணபாலா (லண்டன்), மீரஜா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சோமாவதி (லண்டன்), சிவராஜா (Siddha Medical Officer, Siddha Teaching Hospital, Kaithady), பிரபாலினி , துளசிகாந்தன் (லண்டன்) ஆகியோரின் மாமியாரும் துவாரகன் (லண்டன்), அஸ்மிதன் (லண்டன்), வினோஜா (கனடா), கிரிகரன் (Software Engineer, Colombo), சர்மினி (ஊவா பல்கலைக்கழகம்), கிருஷ்ணகரன் (லண்டன்), சிந்துஜா (லண்டன்), துஷ்ஜா (லண்டன்), சரண்ஜா (லண்டன்), சரிஜா (லண்டன்), விதுஷ்ஜா (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும் தவமணி (ஆஸ்திரேலியா), வரதராஜா (கனடா), காலஞ்சென்ற இரத்தினசபாபதி மற்றும் சிவதாசன், பியவதி (அனுலா), காலஞ்சென்றவர்களான சிவசுப்ரமணியம், பாலசுப்ரமணியம், ஞானசுப்பிரமணியம் மற்றும் ரஞ்சி, தேவி (கனடா), சந்திரா (கொழும்பு), இந்திரா (கனடா), நிதி (ஜேர்மனி), பாலச்சந்திரன் (சுவிஸ்), ராமச்சந்திரன் (கனடா), சூரியன் (ஜேர்மனி), சிறீ (ஜேர்மனி), ராதா (வவா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் சர்மி, சகிலா, கம்சா, கிசான், ராஜா, மனோராஜ் ஆகியோரின் அத்தையும் உருத்திரா, குமரா, சுனித்திரா, விக்கி, ஆதிரா, அங்கவி, கிருஷ்ணவேணு, யஸ்மினி ஆகியோரின் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2019) வெள்ளிக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் கோண்டாவில் மேற்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்புகள் (லண்டன்)**
**சத்தியபாலா - 0044 7344 083720,**
**கிருஷ்ணபாலா - 0044 786 568 3565,**
**மீரஜா - 0044 742 942 6855**

**தகவல்: குடும்பத்தினர்.**
**021 222 3604,**
**சைலஜா சிவராஜா - 077 666 9962**

## மரண அறிவித்தல்

பிறப்பு
17
.
05
.
1944



இறப்பு
10
.
04
.
2019

### திருமதி சாந்தகுணேஸ்வரி சோமசேகரம்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கொண்டக்கட்டை அ.மி.த.க. பாடசாலை ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சோமசேகரம் சாந்தகுணேஸ்வரி (செல்லக்கிளி) கடந்த (10.04.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி சோமசேகரத்தின் (ஓய்வுபெற்ற தபாலதிபர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற செல்வமாணிக்கம் - வள்ளிக்கண்டு தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தசாமி - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் லக்ஷ்மிதேவி, காலஞ்சென்ற மகாலக்ஷ்மி, அக்ல்யலெட்சுமி, ஏகாந்தன், கிருத்திகா ஆகியோரின் அன்புத் தாயாரும் நீதிராஜா, வாமதேவன், திருத்தேவி, செல்வச்சந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் சபேசன் - சதானந்தி, வர்ணன் - தர்சியா, வாகீசன் - சுகன்யா, நிதர்சனா, நிரோஜன், நிலானியா - மயூரன், பிரணவன், மயூரி, மகிழினி, நிரந்தரிகா, சரண் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கவினாஸ், வர்ஷித், ராகவி, அனன்யா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2019) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று 9.00 மணிக்கு தகனக்கிரியைக்காக ஊறணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**அ.மி. பாடசாலை ஒழுங்கை,**
**வல்வெட்டித்துறை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 23136/15/17)

# உலகத்துக்கு உப்பாய் இரு

ஒரு காலத்தில் இந்திரத்யும்னன் என்று ஒரு மாமன்னன் இருந்தான். அவனின் ஆட்சிக் காலத்தில் மக்கள் போற்றும் வண்ணம் தான தர்மங்கள் செய்து, சிறப்பாக அரசாண்டு, நேரே சொர்க்கத்துக்குப் போனான். சொர்க்கபுரியின் இன்பத்தில் திளைத்துக் கொண்டிருந்த அவனை ஒரு நாள் சொர்க்கத்தின் 'தலை' கூப்பிடுவதாக தேவதூதன் வந்து சொன்னான். மன்னன் சென்று என்னவென்று கேட்டபோது 'உனக்கு சொர்க்க வாசம் முடிந்து விட்டது. பூலோகத்திற்கு நாளை கிளம்பத் தயாரக இரு' என்று கட்டளை போட்டது 'தலை'. ஏனென்று மன்னன் கேட்டான். 'நீ செய்த நல்ல காரியங்களை நினைவில் வைத்திருக்க யாருமே இனிமேல் பூலோகத்தில் உயிருடன் இல்லை. இன்றுடன் அந்த கணக்குத் தீர்ந்து விடும். ஆகவே கிளம்பும் வழியைப் பார்' என்று பதில் வந்தது. 'இதற்குத் தீர்வே இல்லையா?' என்று மன்னன் முறையிட்டான். 'தலை' முகவாயைச் சொறிந்து கொண்டு யோசித்தது. பிறகு 'மன்னா, நீ கீழே போய் உனது நற்காரியங்களால் இன்னும் பயன் பெறும் ஒரு ஜீவனையாவது கண்டு பிடித்தால் உனக்கு சொர்க்கம் நீடிக்கப் படும்' என்று சொன்னது.

மன்னனும் கிளம்பிப் பூலோகம் வந்தான். பல நூறு ஆண்டுகள் கடந்து விட்டிருந்தன. அவன் வாழ்ந்த இடமே தலை கீழாக மாறிப் போயிருந்தது. மக்களில் யாரையும் அவனால் அடையாளம் கண்டு பிடிக்க முடியவில்லை. மனதைத் தேற்றி நம்பிக்கையை ஏற்றிக் கொண்டு விடாமுயற்சியாகத் தேடி, இருப்பதிலேயே வயதான ஒரு மனிதரை சந்தித்தான். அவரிடம் 'ஐயா! உமக்கு இந்திரத்யும்னன் என்று இந்தப் பகுதியை அரசாண்ட மன்னனைப் பற்றித் தெரியுமா?' என்று ஆர்வத்துடனும் மிகுந்த எதிர்பார்ப்புடனும் கேட்டான். வயோதிபர் இடுங்கிய கண்களால் அவனை மேலும் கீழும் பார்த்து விட்டு உதட்டைப் பிதுக்கி விட்டார். 'வேண்டுமானால் என்னை விட வயதான ஆந்தை ஒன்று பக்கத்து மரப் பொந்தில் தூங்கிக் கொண்டிருக்கிறது. இரவில் அது விழித்த பின் அதனிடம் போய்க் கேள்' என்று சொல்லி விட்டார்.

வேறு வழியில்லாமல் இரவு வரை கோயில் நிழலில் உட்கார்ந்திருந்து விட்டு இரவு ஆந்தையைப் பார்த்தான். தலைய்ய முதுகுப் பக்கம் வைத்து ஒரு இரையைக் குறி வைத்துக் கொண்டிருந்த ஆந்தையிடம் இந்திரத்யும்னனைப் பற்றிக் கேட்டான். இரையைத் தப்ப விட்ட எரிச்சலில் ஆந்தை 'எனக்குத் தெரியாது. இங்கே ஒரு கிழட்டு நாரை தினமும் காலைப் பொழுதில் திரியும். வேண்டுமானால் அதைக் கண்டு பிடித்துக் கேள்' என்று சொல்லி விட்டுத் தன் வேலையைப் பார்க்கப் போய் விட்டது. காலையில் அலைந்து திரிந்து நாரையைக் கண்டு பிடித்தான். அதனிடம் கேட்டபோது, 'எனக்கு நினைவில்லை. ஆனால் பக்கத்து ஏரியில் ஓர் ஆமை கிடக்கிறது. அதற்கு நினைவிருக்க வாய்ப்பிருக்கிறது' என்று நம்பிக்கையை வளர்த்து விட்டது.

மன்னன் ஏரியைத் தேடி ஓடினான். அங்கே வயதான ஆமையைப் பார்த்தான். தள்ளாத வயதில் சிரமப் பட்டுக் கொண்டிருந்தது அந்த ஆமை. நம் மன்னன் அதனிடம் இந்திரத்யும்னனைப் பற்றிக் கேட்டான். ஆமை உடனே 'ஆமாம். அவனால் தான் இந்த ஏரியும் இருக்கிறது, அதில் இருக்கும் உயிரினங்களும் நன்றியுடன் உயிர் வாழ்கின்றன' என்று சொன்னது. அப்போது மன்னன் 'நானேதான் அந்த இந்திரத்யும்னன்! எனக்கு இந்த ஏரியை ஏற்படுத்தியதாக நினைவில்லையே. நீ ஏதோ தப்பாகச் சொல்கிறாய்' என்று நம்பிக்கை இழந்து போய் ஆமையிடம் சொன்னான்.

ஆமையும் 'கதை அப்படியில்லையப்பா! நீ அரசாண்ட போது மக்களுக்குத் தினமும் ஏராளமான பசுக்களைத் தானமாக வழங்கினாய். மக்கள் அவற்றையெல்லாம் இந்தப் பகுதியிலுள்ள புல் தரையில் மேய விட்டார்கள். மாடுகள் தினமும் அலைந்து திரிந்து தன் குளம்புகளால் மண்ணைக் கிளப்பி விட்டதால் இந்தப் பகுதி நாளடைவில் பள்ளமாகப் போய் விட்டது. மழை பெய்து நீர் பிடித்ததால் ஏரியாக மாறிவிட்டது. இந்தப் பகுதியின் செழிப்பிற்கே இந்த ஏரி தான் காரணம் என்றும் ஆகி விட்டது. அதைக் கேட்டுத்தான் நான் இங்கே குடியேறினேன். இத்தனை நாள் நன்றியுடன் வாழ்ந்திருக்கிறேன். இன்னமும் பல உயிரினங்களும் வாழ்கின்றன. வாழப் போகின்றன' என்றது.



தூரத்தில் சொர்க்கபுரியில் இருந்து மன்னனைக் கூட்டிப் போக விமானம் வருவது மன்னனுக்குத் தெரிந்தது.

***நீதி: நாம் செய்யும் நல்ல காரியங்களுக்கு பயன் பல நாள்களுக்கும் பல தலைமுறைகளுக்கும் நீட்டித்திருக்கும் படியாக யோசித்துச் செய்வது நல்லது.***

## பொது அறிவு

| | |
|---|---|
| **அதிக நீர் அருந்தும் பறவை எது?** | *புறா* |
| **அடை காக்கும் ஆண் பறவை எது?** | *கிவி* |
| **இந்தியாவின் தேசிய பறவை எது?** | *ஆண்மயில்* |
| **இந்தியாவின் தேசபிதா யார்?** | *மகாத்மா காந்தி* |
| **இளம் நீலநிற முட்டை இடும் பறவை இது?** | *காகம்* |

*ர.தரமி, தரம் 5,*


## சேவைநலன் பாராட்டு விழாவும் விருந்துபசாரமும்



இரணைமடு விவசாயிகள் சமூகம் நடத்தும் கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் எந்திரி

**திரு. நவரத்தினம் சுதாகரன்**

அவர்களின் சேவைநலன் பாராட்டு விழாவும் விருந்துபசாரமும்

*இடம் : இரணைமடு திட்ட முகாமைத்துவ கேட்போர் கூடம், கோவிந்தன் கடைச்சந்தி, திருவையாறு.*

*காலம் : இன்று 12.04.2019 (வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணி*

"தங்களையும் அன்புடன் அழைக்கின்றோம்"

Congrats!

**இரணைமடு கமக்காரர் அமைப்புக்களின் சம்மேளனம்.**

## மரண அறிவித்தல்

**திருமதி பூபதி விஸ்வலிங்கம்**



சிறுப்பிட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் இமையாணனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூபதி விஸ்வலிங்கம் அவர்கள் நேற்று (11.04.2019) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் நாகன் விஸ்வலிங்கத்தின் (சிவக்கொழுந்து - உரிமையாளர் எரிபொருள் நிரப்பு நிலையம், சிறுப்பிட்டி) பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற வர்களான சின்னவன் - சின்னம்மா தம்பதி களின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாகன் - தெய்வி தம்பதிகளின் அன்பு மரும களும் காலஞ்சென்ற பிள்ளையம்மா மற்றும் நாகலிங்கம், இரத்தினம், சுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரியும் கௌதமன் (ஜேர்மனி) கௌசீசன், கௌசலன், (ஜேர்மனி), காலஞ்சென்ற கௌரூபன் மற்றும் கௌசியா ஆகியோரின் பாசமிகு தாயாரும் பிரியதர்சினி (ஜேர்மனி) தாட்சாயினி, கிருத்திகா, (ஜேர்மனி) நிமலன் (ஆசிரியர் மு/மாங்குளம் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் அஸ்வின், றோஸ்வின், பிறனீத், ருதிஷா, பவதாரணி ,ஜரிஸ், ஆருஸ், றனீத் ,ஆருத்ரா ஆகியோரின் அன்பு போர்த்தியும் காலஞ்சென்ற நாகம்மா மற்றும் மகா, திருநாமம் (கடவுள் ), காலஞ்சென்ற மாணிக்கம் மற்றும் அன்னபாக்கியம், தவனேஸ்வரி புஸ்பராணி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் சிறீஸ்கந்தராசா ,நேசமணி ஆகியோரின் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12.04.2019 )வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**021 226 3517, 077 703 1176, 077 956 5757**

## கண்ணீர் அஞ்சலி



எமது வைத்தியசாலையில் கடமைபுரியும்
நிபுணத்துவ வைத்தியர்
**Dr. திருமதி சைலஜா சிவராஜா**
அவர்களின் பாசமிகு தாயாரும்
வைத்திய உத்தியோகத்தர்
**Dr. திரு. க. சிவராஜா**
அவர்களின் அன்பு மாமியாருமான
**சத்தியபாமா பாலகிருஷ்ணன்**
நேற்று முன்தினம் (10.04.2019) இல்
அமரத்துவம் அடைந்தார். அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**பணியாளர் நலன்புரிச் சங்கம்**
**அரசினர் ஆயுர்வேத வைத்தியசாலை, கைதடி.**

# கேள்வி அறிவித்தல்
## பிரதேச செயலகம் - நெடுந்தீவு

1. நெடுந்தீவு பிரதேச செயலகத்தின் பிராந்திய பெறுகைக் குழுவின் தவிசாளர் கீழ்வரும் அட்டவ்ணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான தகவுடையோரும் தகைமைபெற்றவருமான விலைக் கேள்வியாளர்களிடமிருந்து முத்திரைபொறிக்கப்பட்ட மூடிய விலைக் கேள்விகளைக் கோருகின்றார்கள்.
2. இது தேசிய போட்டி விலைக் கேள்வி முறையாக இருந்தாலும் வடமாகாண எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
3. கேள்விகோரல் அறிவித்தலில் குறிப்பிட்ட தரத்துக்கு கேள்விகள் கிடைக்காதுவிடின் அல்லது கிடைக்கப்பெற்ற கேள்விகள் தகுதியற்றதாயின் அதற்கு மேற்பட்ட CIDA தரம் கருத்திலெடுக்கப்படும்.
4. நிர்மாண ஒப்பந்தத்திற்கு தகுதியுடைய ஒப்பந்தக்காரர், நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிர்மாணத்தரத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் மோசடியில் ஈடுபட்ட ஒப்பந்தக்காரர்களின் கறுப்புப் பட்டியலில் இடம்பெறாதவராகவும் இருத்தல் வேண்டும்.
5. அக்கறையுள்ள கேள்வியாளர்கள் பிரதேச செயலக கணக்கு கிளையில் கேள்விப்பத்திரங்களை இலவசமாகப் பார்வையிடுவதோடு மேலதிக விபரங்களையும் பெற்றுக் கொள்ள முடியும். மேலும் ஒரு வேலைக்கு கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகள் மட்டுமே விநியோகிக்கப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள் : 021 221 5201, 021 221 5203 Facsimile – 021 222 5203, Gmail address - dsdelft@gmail.com
6. அக்கறையுள்ள கேள்வியாளர்கள் எழுத்து மூலமான விண்ணப்பத்துடன் மீளளிக்கப்படாத கட்டணமாகிய (Nonrefundable fee) அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையினை பிரதேச செயலகம் - நெடுந்தீவில் உள்ள கணக்கு கிளையின் மூலம் செலுத்தி பற்றுச்சீட்டை சமர்ப்பிக்குமிடத்து 16.04.2019 தொடக்கம் 29.04.2019 வரை மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 03.00 மணிவரை அலுவலக நேரங்களில் கேள்விப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம், முடிவுத்திகதி 30.04.2019 முற்பகல் 10.30 மணி ஆகும்.
7. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்வித்தொகைகளுக்கான கேள்விப்பிணைப் பொறுப்பு (Bid Security) கேள்வி ஆவணங்களுடன் இணைக்கப்பட்டு தவிசாளர், பிராந்திய பெறுகைக்குழு, பிரதேச செயலகம், நெடுந்தீவு என்ற முகவரிக்கு 30. 04. 2019 மு.ப. 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைக்கப்படல் வேண்டும். மேலும் கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் கேள்வி இலக்கத்தினையும் (Bid ID), வேலை விபரத்தினையும் (Description of work) குறிப்பிடல் வேண்டும். கேள்விகள் சமூகமளிக்கும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமாக கிடைக்கும் கேள்விகள் திறக்கப்படாமலே நிராகரிக்கப்படும்.
8. விலைக்கேள்வி செல்லுபடிக்காலம் (Bid Validity) கேள்வி பெறும் இறுதித் திகதியிலியிருந்து அல்லது நீடிக்கப்படும் திகதியிலிருந்து 90 நாட்களும், கேள்விப் பிணைப்பொறுப்பு (Bid Security) கேள்விதிறத்தல் திகதியிலிருந்து 120 நாட்களும் ஆகும்.
9. முற்கேள்விக் கூட்டம் (Prebid Meeting) 24.04.2019. மு.ப 10.30 மணிக்கு பிரதேச செயலகத்தில் நடைபெறும்.
10. பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதி முடிவாக அமையும்.

| S. No | Bid ID. | Description of work | Estimated Amount (million) (Excluding VAT) | Business Registration, Specialty | Required Bid Security | | Non Refundable Fee (Rs.) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Security Amount (Rs.) | Valid Period Until | |
| 01 | DS/D/PRO/ Road/01/2019 | Renovation of Delft West Periyathurai Koruvandu Road | 1.71 | C-9 or Above (Highways) | 18,000 | 28.08.2019 | 1,000 |
| 02 | DS/D/PRO/ Road/02/2019 | Renovation of Delft East Perukkumara Road | 1.71 | C-9 or Above (Highways) | 18,000 | 28.08.2019 | 1,000 |
| 03 | DS/D/PRO/ Road/03/2019 | Renovation of Nelavi to Sharappiddy Housing Scheme Road | 1.41 | C-9 or Above (Highways) | 15,000 | 28.08.2019 | 1,000 |
| 04 | DS/D/PRO/ Road/04/2019 | Renovation of Delft West Sepanayakapuram New Road | 1.71 | C-9 or Above (Highways) | 18,000 | 28.08.2019 | 1,000 |
| 05 | DS/D/PRO/ Road/05/2019 | Renovation of Delft West Thunkalai Road | 1.70 | C-9 or Above (Highways) | 18,000 | 28.08.2019 | 1,000 |
| 06 | DS/D/PRO/ Road/06/2019 | Renovation of Delft West Thunkalai Internal Road | 1.71 | C-9 or Above (Highways) | 18,000 | 28.08.2019 | 1,000 |
| 07 | DS/D/PRO/ Road/07/2019 | Renovation of Veddukkali Cross Road | 1.35 | C-9 or Above (Highways) | 14,000 | 28.08.2019 | 1,000 |
| 08 | DS/D/PRO/ Road/08/2019 | Renovation of Delft South Muthaliyarkula Road | 1.71 | C-9 or Above (Highways) | 18,000 | 28.08.2019 | 1,000 |
| 09 | DS/D/PRO/ Road/09/2019 | Renovation of Delft West Meenadshi Amman Temple Road | 1.71 | C-9 or Above (Highways) | 18,000 | 28.08.2019 | 1,000 |
| 10 | DS/D/PRO/ Road/10/2019 | Renovation of Delft Centre St.Johns Front Road | 1.07 | C-9 or Above (Highways) | 11,000 | 28.08.2019 | 1,000 |
| 11 | DS/D/PRO/ Road/11/2019 | Renovation of Delft Centre Thuraithampi Road | 1.71 | C-9 or Above (Highways) | 18,000 | 28.08.2019 | 1,000 |
| 12 | DS/D/PRO/ Road/12/2019 | Renovation of Delft Centre East Maragathamozhiyal Road | 1.71 | C-9 or Above (Highways) | 18,000 | 28.08.2019 | 1,000 |
| 13 | DS/D/PRO/ Road/13/2019 | Renovation of Delft East Konanthodda Road | 1.71 | C-9 or Above (Highways) | 18,000 | 28.08.2019 | 1,000 |

F.C. சத்தியசோதி
பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம், நெடுந்தீவு.

உதயன்
advt@uthayan.com

## தேவை

ஊர்ச்சேவல் உயிருடன் 1kg
700/= படி எந்நேரமும்
கொள்வனவு செய்யப்படும்.

**தாசன் பாம்**
கோயில் வீதி, யாழ்ப்பாணம்
T.P 077 312 7498

## கண்ணீர் அஞ்சலி



எமது மன்றத்தின் உபதலைவரும் கைதடி சித்த போதனா வைத்தியசாலையின் வைத்திய நிபுணருமாகிய வைத்திய கலாநிதி (திருமதி) **சைலஜா சிவராஜாவின்** அன்புத்தாயார்

**திருமதி சத்தியபாமா பாலகிருஷ்ணன்**

அவரது பிரிவுத்துயரில் பங்கெடுப்பதுடன் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

**வடமாகாண ஆயுள்வேத மருத்துவ நலன்புரி மன்றம்**

## கண்ணீர் அஞ்சலி

மன்ற உறுப்பினர்
**திரு. வே. நகுலேஸ்வரன்** (உரிமையாளர் - யாழ். ரெக்ஸ் சாவகச்சேரி) அவர்களின் பாசமிகு தாயார்
திருமதி
**வேலுப்பிள்ளை வள்ளியம்மை**
அவர்கள் (11.04.2019) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு மன்றம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றது.

**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்**

### சைவ வித்தியா விருத்திச்சங்கம்
## ஆண்டுப் பொதுக்கூட்டம் - 2019


சைவ வித்தியா விருத்திச்சங்கத்தின் 20.04.2019 அன்று காலை 10.00 மணியளவில் நடைபெற விருந்த ஆண்டுப் பொதுக்கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தால் எதிர்வரும் 27.04.2019 காலை 10.00 மணியளவில் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றேன்.

**கலாசாலை வீதி,**
**திருநெல்வேலி.**

**தி. செல்வமனோகரன்**
**செயலாளர்.**

## பிறந்தநாள் நினைவேந்தல்

வைத்திய கலாநிதி
**ந. சிவராஜா**



**அன்புள்ள ஆசைப் பெரியப்பா**

நீங்கள் எங்களை விட்டுச் சென்று ஒருமாதமும் சில நாள்களும் ஆகிவிட்டது. உங்கள் மரணம் எங்கள் இழப்பு மட்டும் இல்லாமல் முழு சமுதாயத்தின் இழப்புமாகிவிட்டது.
என் பெரியப்பாவாக மட்டும் இல்லாமல் எனக்கு ஆசிரியராக, நண்பனாக, வழிகாட்டியாக இருந்தீர்கள். சிறுவயதிலிருந்து உங்களை என் இரண்டாவது அப்பாவாகப் பார்த்திருக்கின்றேன்.
நான் உங்களிடம் பல விடயங்கள் கற்றுக்கொண்டேன். எனக்கு இந்து மதத்தைப் பற்றி விளக்கியது நீங்கள். சமூக சேவை செய்ய ஊக்குவித்தது நீங்கள். உலகம்சுற்றி பயணம் செய்து பலதரப்பட்ட அறிவையும். அனுபவங்களையும் பெறுவதற்கு ஊக்கமளித்தது நீங்கள். எல்லோரையும் அன்பாக சமமாய் மதிக்கும் நல்ல குணங்களை என்னில் உருவாக்கியவர் நீங்கள். இவைபோன்ற பல விடயங்களை நான் உங்களிடமிருந்து கற்றுக் கொண்டேன். எல்லாவற்றுக்கும் மேலாக உங்களிடம் நான் கற்றுக்கொண்டது உங்கள் புன்னகை, பொறுமை, அன்பு, பாசம், சமூக அக்கறை போன்றவை. இன்று (12.04.2019) உங்கள் பிறந்தநாள் பெரியப்பா. உங்களை மனதார போற்றி வணங்குகின்றோம். என் பெரியப்பா சார்பில் அவரது அன்பும், ஆசிகளும் உற்றார், உறவினர்களுடன் அவரால் நேசிக்கப்பட்ட அனைத்து சமுதாயத்துக்கும் கிடைக்க வேண்டுமென இறைவனை வேண்டுகின்றேன்.

**அன்புடன் ரக்சனா**

(CS/24659)(11,17)

## ரஜினியின் 167ஆவது படத்தின் பெயர் தர்பார்

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடிக்கும் 167 ஆவது படத்துக்கு 'தர்பார்' என பெயரிடப்பட்டு, அதன் முதலாவது போஸ்டர் நேற்றுக் காலை வெளியானது. இந்தப் படத்தை ஏ.ஆர்.முருகதாஸ் இயக்குகிறார். 'பேட்ட' படத்தை தொடர்ந்து ரஜினி அடுத்ததாக ஏ. ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் நடிக்க இருக்கிறார். இது ரஜினி நடிக்கும் 167ஆவது படமாகும். இந்த படத்திற்கான முன் தயாரிப்பு பணிகளில் ஈடுபட்டு வந்த படக்குழு. தற்போது படப்பிடிப்புக்கு முழுமையாக தயாராகி விட்டது. இந்தப் படத்தில் ரஜினிக்கு ஜோடியாக நயன்தாரா நடிக்கிறார். ரஜினியின் 'பேட்ட' படத்துக்கும் முருகதாசின் 'கத்தி' படத்துக்கும் இசையமைத்த அனிருத். இந்தப் படத்துக்கும் இசையமைக்கிறார். சந்தோஷ் சிவன் ஒளிப்பதிவு செய்கிறார். படப்பிடிப்புப் பணிகள் மும்பையில் இன்று தொடங்க உள்ளது. இந்த நிலையில், இந்தப் படத்தின் முதலாவது போஸ்டர் நேற்றுக் காலை வெளியிடப்பட்டது.

## மாவட்ட பொதுவைத்தியசாலை, முல்லைத்தீவு
## பெறுகைக்கான அழைப்பு
## மருத்துவ உபகரணப் பொருள்கள் வழங்கல் - 2019

வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பிராந்திய பெறுகைகள் குழுத் தலைவர் தகுதியான, தகைமை வாய்ந்த மருத்துவ உபகரணபொருள்கள் விநியோகஸ்தர்களிடமிருந்து கீழ்வரும் பொருள்களிற்கான முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

| Reference No | Description | Qty | Bid Security |
|---|---|---|---|
| MEP/2019/01 | New Oxygen gas system | 01 | 70000.00 |

- விலைக்கேள்விதாரர் மருத்துவ உபகரணப் பொருள்கள் விநியோகம் தொடர்பில் வியாபார பெயர் பதிவினையுடைய ஒரு நபராக அல்லது நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
- ஒவ்வொரு பெறுகைக்கும் மேலே சொல்லப்பட்ட பொருத்தமான உத்தரவாத முறி (Bid Security) இணைக்கப்படுதல் வேண்டும். உத்தரவாதமுறி இணைக்கப்படாத பெறுகைகள் நிராகரிக்கப்படும்.
- நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இவ் வைத்தியசாலையில் கிடைக்கும் "Application for Bid documents"என்ற படிவத்தினைப் பூர்த்தி செய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 1000/= காசாக செலுத்தி ஆங்கில மொழியிலான பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாள்களில் 12.04.2019 தொடக்கம் 02.05.2019 வரையான காலப்பகுதியில் 09.00 மணிதொடக்கம் 15.00 மணிவரைநேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
- விலைக்கேள்விகள் 03.05.2019 ஆந் திகதி 10.00 மணிக்கு முன்பதாகப் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ மாவட்ட பொதுவைத்தியசாலை, முல்லைத்தீவு நிதிக்கிளை அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைக் கேள்விகள் 03.05.2019 ஆந் திகதி 10.30 மணிக்கு எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் வைத்தியசாலை மாநாட்டு மண்டபத்தில் திறக்கப்படும்.
- தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை அலுவலக நேரங்களில் (T.P:021 2061423 Fax : 021 2061423 ) மாவட்ட பொதுவைத்தியசாலையிலிருந்து முல்லைத்தீவிலிருந்துபெற்றுக்கொள்ளமுடியும்.
- கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒருபகுதியினை மட்டும் ஏற்றுக்கொள்ளவதற்கு இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய்வதற்குப் பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**வைத்திய கலாநிதி.செ.கஜன்**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைகள் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**முல்லைத்தீவு.**

(11.17)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



### திரு. பொன்னையா சண்முகசுந்தரம்
(அகில இலங்கை சமாதான நீதிவான்)

ஓய்வுபெற்ற கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி அதிபரும் யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுச் சபையின் முன்னாள் செயலாளரும் கலட்டி மகாமாரி அம்மன் ஆலய செயலாளரும் திருப்பணிசபையின் பொருளாளரும் வடமாகாண சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கசமாசத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினரும் ஆகிய **திரு. பொ. சண்முகசுந்தரம்** அவர்கள் கடந்த 13.03.2019 அன்று அகில இலங்கை சமாதான நீதிவானாக யாழ். உயர்நீதிமன்ற நீதிபதி **திரு. அ.பிறேம்சங்கர்** அவர்கள் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமையையிட்டு வாழ்த்துவதோடு அவர் மேலும் உன்னதமான சேவைகளைச் செய்ய மனமார பாராட்டுவதுடன் எங்கள் கலட்டி மகாமாரி அம்மனின் அருட்கடாட்சமும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாக சபையினரும் திருப்பணிச்சபையினரும்
கலட்டி எச்சாட்டி மகாமாரி அம்மன்
தேவஸ்தானம், கலட்டி, யாழ்ப்பாணம்




பசிக்குத் தான் சாப்பிட வந்தேனே தவிர, திருடி வசதியாக வாழ வரவில்லை.

கனவிலும் நினைக்கவில்லை
அன்னதானம் செய்து புண்ணியம் தேட நினைக்கும் மனிதன்
இப்படி கொல்லுவான் என்று,

என் எதிரி பூனை என்று நினைத்தேன், துரோகி மனிதன் என்று அறியவில்லை.

*இப்படிக்கு எலி*




**வீடு தேவை**

திருமணமான தம்பதியினருக்கு தளபாடங்களுடன் கூடிய வீடு வாடகைக்கு தேவை. (யாழ் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் விரும்பத்தக்கது)

**தொடர்பு - 077 248 7876**


# நினைவஞ்சலி

முதலாம் ஆண்டு | ஆறாம் ஆண்டு





உதிப்பு 08.10.1926 — உதிர்வு 24.03.2018

அமரர்
## வைத்திலிங்கம் சுப்பிரமணியம்

உதிப்பு 16.04.1922 — உதிர்வு 27.11.2013

அமரர்
## வைத்திலிங்கம் தங்கமுத்து

திதி: 12.04.2019

ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள்
சென்றாலும் உங்களை மறப்போமா....?
அன்பான அப்பப்பாவே !!
நீங்கள் எம்மீது செரிந்த அன்பும்
காட்டிய பாசமும் நிகரில்லாதது
நற்பழக்கங்களைச் சொல்லித்தருவீர்களே
இளம்பருவத்திலிருந்து எமக்கு இறைபக்தியை
ஊட்டி வளர்த்தீர்களே அன்புள்ள அப்பப்பாவே...
உங்களை நாம் எப்படி மறப்போம்
எம் அப்பப்பாவே....
உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றென்றும்
இறைவனைப்பிரார்த்திப்போமாக !!!

டச்சு வீதி,
சாவகச்சேரி வடக்கு
சாவகச்சேரி.

உங்கள் நினைவுகளுடன் வாழும்
பேரப்பிள்ளைகளுடன்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்

# மரண அறிவித்தல்கள்

## செல்லத்துரை தவராஜன்



10 ஆம் வட்டாரம் புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் இல 40, சிவகுநாதர் வீதி, நீராவியடி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை தவராஜன் கடந்த (10.04.2019) புதன்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் குணமணி தம்பதியினரின் அன்புப்புதல்வரும் காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை மற்றும் அன்னலட்சுமி தம்பதியினரின் அன்பு மருமகனும் விக்கினேஸ் வரியின் அன்புக்கணவரும் சிந்து, சுபா, யசி ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2019) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ். கோம்பயன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 40, சிவகுருநாதர் வீதி,**
**நீராவியடி, யாழ்ப்பாணம்**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 262 7697**

## சின்னப்பு மார்க்கண்டு



ஓட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு மார்க்கண்டு நேற்று (11.04.2019) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற கார்த்திகேசு - லக்சுமி தம்பதிகளின் மருமகனும் பவளரத்தினத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கார்த்திகேசு கிருஷ்ணனின் மைத்துனரும் காலஞ்சென்றவர்களான பாக்கியலட்சுமி, வைத்திலிங்கம் மற்றும் ஜெயமணி ஆகியோரின்அன்புச் சகோதரரும் புஸ்பரதி (கனடா), புஸ்பராஜா, புஸ்பரஜினி, புஸ்பவதனி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் பிரபாகரன் (கனடா), சாந்தமலர், ஆசிக் (பிரான்ஸ்), அல்பிரட் மரியதாஸ் (போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கார்த்திலா (கனடா), டெனிலா (கனடா), கரோன், டனுசிகா, ஜெரோன், வின்சனா ஆகியோரின் அன்புப் பேரனும் அலேயா கிரேஸ் (கனடா) இன் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2019) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் இல. 2, ஐயனார் கோவில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

## திருமதி வள்ளியம்மை வேலுப்பிள்ளை (தங்கம்மா)



சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளியம்மை (தங்கம்மா) வேலுப்பிள்ளை நேற்று (11.04.2019) வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஏரம்பு தெய்வானை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சரவணமுத்து - சின்னத்தங்கச்சி தம்பதிகளின் அன்பு மருமகளும்யோகேஸ்வரி, யோகேஸ்வரன், இராகேஸ்வரி, இராகேஸ்வரன் (சாளினிரெக்ஸ், யாழ்ப்பாணம்), மகேஸ்வரன், ஜெகதீஸ்வரன் (தர்ஷனா ரெக்ஸ், சாவகச்சேரி), நகுலேஸ்வரன் (யாழ். ரெக்ஸ் சாவகச்சேரி), மோகனா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற விக்கினேஸ்வரன், புனிதராணி, தனபாலசிங்கம் (குணம் அன் சன்ஸ், நெல்லியடி), காலஞ்சென்ற டெய்சிராணி, நளாயினி (சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்), சந்திரமதி, திருவேணி, தவராசா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சுகீசன் (கிறிஸ்), சுகலியா, சுமணா, கார்த்திகா (ஆசிரியை - பனிக்கன்குளம் அ. த. க. பாடசாலை), மேனகா (யாழ். பல்கலைக்கழகம்), சரண்யன் (தொழில் நுட்பக் கல்லூரி), ஜனனன் (ஆஸ்திரேலியா), சாம்பவன் (தொழில்நுட்பக் கல்லூரி), தயாபரி, வராகன் (பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), சாமினி (இதயவரைவாளர்), சாளினி (மருந்தகவியலாளர்), சாரங்கா (பேராதனைப் பல்கலைக்கழகம்), பிரசாந்தி, சாயினி, சாதுவன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பிருந்தன் (சாவகச்சேரி றிபேக் கல்லூரி, தர்சனா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பிரசன்னா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), நகீசா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), நர்த்தனா (சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை), நஸ்மியா, துசானிக்கா (லண்டன்), வசிக்கா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தஸ்மினா, டிக்சன், நதீசன், தரண்யுன், தரணிகா, பவிசா, அபிஷேக் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2019) வெள்ளிக்கிழமை மு.ப. 9.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கொம்பிகுளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நுணுவில் பிள்ளையார் வீதி,**
**சரசாலை வடக்கு, சாவகச்சேரி.**

(C 9922/15/18)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## நாய்கள் சரணாலயம் திறப்பு

யாழ்ப்பாணம், ஏப். 12

வடக்கு மாகாணத்தின் முதலாவது நாய்கள் சரணாலயம் இயக்கச்சி சிவ பூமி வளாகத்தில் இன்று மாலை 4 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக நல்லை ஆதின குருமுதல்வர் சிறிலசிறி சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள், வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன், வடக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்கள். கிளிநொச்சி மாவட்டச் செயலர் அ. அருமைநாயகம், யாழ்ப்பாணம் மாவட்ட செயலர் நா. வேதநாயகன், வடமாகாண ஆளுநர் அலுவலக செயலாளர் இ. இளங்கோவன், பளை பிரதேச செயலர் திருமதி ஜெயராணி பரமேஷயன், பளை பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளர் சு. சுரேன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம.ஜ)

## புத்தாண்டுத் தினத்தில் சிறப்புப் பாதுகாப்புகள்

கொழும்பு, ஏப். 12

சித்திரை புத்தாண்டு பண்டிகைக் காலங்களில் இடம்பெறும் விபத்துக்களால் ஏற்படும் உயிரிழப்புகளைக் கட்டுப்படுத்தவதற்காகவும் குற்றச் செயல்களை குறைப்பதற்காகவும் சிறப்புப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

இதற்கமைய நாடளாவிய ரீதியில் 2 ஆயிரத்து 400 பொலிசார் மேலதிகமாக கடமையில் ஈடுப்படுத்தப்பட்டுள்ளனர். கொழும்பில் மாத்திரம் 800 பொலிசார் மேலதிகமாக சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளதுடன் சிவில் உடையிலும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பண்டிகைக்கால பாதுகாப்பு நடவடிக்கைகளை குறித்து ஊடகங்களை தெளிவுப்படுத்துவதற்காக நேற்று பொலிஸ்தலைமையகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.



அத்துடன் மதுபாவனையுடன் வாகனம் செலுத்தும் சாரதிகளைக் கண்டுபிடிப்பதற்காக 25 ஆயிரம் பரிசோதனை கருவிகள் எடுத்து வரப்படவுள்ளன. நாளை முதல் எதிர்வரும் 20ஆம் திகதி வரையில் இந்தச் சோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (ம)

## வங்கிகளில் இன்று அரை நாளே சேவைகள்

யாழ்ப்பாணம், ஏப்.12

அனைத்து வங்கிகளும் இன்று அரை நாள் மட்டுமே இயங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

புதுவருட விடுமுறைகளை முன்னிட்டே இன்று அரை நாள் வங்கிகள் இயங்கும் என்றும், வாடிக்கையாளர்கள் சேவைகள் மதியம் வரையுமே நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வங்கிகளில் சேவ்வைகளைப் பெறுவோர் மதியத்துக்கு முன்னதாக தமது சேவைகளைப் பெற்றுக்கொள்வதன் ஊடாகச் சிரங்களைத் தவிர்க்க முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## ஹெரோய்னுடன் இளைஞர் கைது

கொழும்பு, ஏப். 12

வவுனியா கற்குழி பகுதியில் ஹெரோய்ன் வைத்திருந்த ஒருவரை கைது செய்துள்ளோம் என்று வன்னிமாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபரின் கீழ் செயற்படும் சிறப்பு போதை ஒழிப்பு பொலிசார் தெரிவித்தனர்.

தமக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து கற்குழி பகுதிக்குச் சென்று அங்கு மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே மேற்படி நபர் கைது செய்யப்பட்டார் என்றும். கைதானவருக்கு 23 வயது என்றும், அவரிடம் இருந்து 512 மில்லிகிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டது என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-110)

## சிகிச்சை பயனின்றி குடும்பத் தலைவர் சாவு

சாவகச்சேரி, ஏப். 12

வலிப்பு நோய்க்கு ஆளான குடும்பத் தலைவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பயனின்றி சாவடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

கைதடி வடக்குப் பகுதியைச் சேர்ந்த கந்தன் பிரேமச்சந்திரன் (வயது - 55) என்பவர் கடந்த 5 வருடங்களாக வலிப்பு நோயால் அவதிப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை வேலை செய்து கொண்டிருந்த வேளையில் வலிப்பு ஏற்படவே யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்த நிலையில் அங்கு சிகிச்சை பயனின்றி சாவடைந்துள்ளார் என உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது. குடும்பத் தலைவரின் சாவு தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட சாவகச்சேரி பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர்.

அறிக்கையினைப் பார்வையிட்ட நீதிவான் யாழ்ப்பாண பிரதேச திடீர் சாவு விசாரணை அதிகாரி ந. பிரேம்குமார் மூலம் சாவு விசாரணைகளை நடத்தி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

## மனைவி, பிள்ளைகள் வெளிநாடுகளில் தனித்து வாழ்ந்த முதியவர் சடலமாக மீட்பு

கொடிகாமம், ஏப். 12

மனைவி. பிள்ளைகள் புலம்பெயர் நாடுகளில் தங்கியிருக்க, தனித்து வாழ்ந்த முதியவர் சடலமாக மீட்கப்பட்டார். சடலம் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கொடிகாமம் பாலாவி வடக்கில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த 84வயதுடையவரே சடலமாகமீட்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

வழமையைபோன்று அவருக்கு நேற்றுமுன்தினம் காலை உணவு கொண்டு சென்றவர், முதியவர் அசைவின்றிக் காணப்பட்டமை பற்றி கொடிகாமம் பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

அந்தப் பகுதி திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சீ. சீ. இளங்கீரன் இறப்பு விசாரணை நடத்தினார். உடற்கூற்றுப் பரிசோதனைக்காகச் சடலம் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் கையளிக்குமாறு பணிக்கப்பட்டது. (த-9)

## 152 இல் 7 தபாலகங்கள்தான் சொந்தக் கட்டடத்தில் உள்ளன

யாழ்ப்பாணம், ஏப். 12

யாழ்ப்பாணத்தில் 20 தலைமைத் தபாலகமும் 132 உப தபாலகங்களும் உள்ளன. ஆனால் 7 தபாலகங்கள் மட்டுமே சொந்தக் கட்டடங்களில் இயங்குகின்றன என்று வடக்கு மாகாண தபால் திணைக்கள அதிகாரி தெரிவித்தார்,

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்டச்செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மருதங்கேணி உப தபாலகத்தை தலைமைத் தபாலகமாக தரம் உயர்த்த வேண்டும் எனத் தீர்மானித்து ஓர் ஆண்டு கடந்து விட்டபோதும் இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை என்று பிரதேச செயலர் சுட்டிக்காட்டினார்.

பருத்தித்துறையில் இருந்த தலைமைத் தபாலகம் தற்போது இராணுவ பிடிக்குள் உள்ளது. தபாலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்குகின்றது என்று தபால் திணைக்கள அதிகாரி மேலும் தெரிவித்தார்.

**சபையில் இல்லை**

காரை நகரில் மக்களுக்குத் தண்ணீர் இன்றி ஏனைய சபைகளிடம் கையேந்தும் நிலையில் சபைப் பகுதிக்குள் உள்ள கிணற்றை கடற்படை ஆக்கிரமித்து தனக்கு மட்டுமே குடிதண்ணீரைப் பெறுகின்றது. அந்தக் கிணற்றில் இருந்து கடற்படையினரை உடன் வெளியேற்றுமாறு கடந்த ஆண்டே கூறப்பட்ட போதிலும் பிரதேச சபை ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று வினவியபோது காரைநகர் பிரதேச சபைத் தவிசாளரோ, செயலரோ சபையில் இருக்கவில்லை. இது தொடர்பில் சபைத் தவிசாளருக்கு அழைப்பு எடுத்தபோது பதிலில்லை. செயலருக்கு அழைப்பு எடுத்தபோது தவிசாளரிடம் கேளுங்கள் என்று கூறினார்.

இதேநேரம், காரைநகரில் மக்களின் குடிதண்ணீர்த் தேவைக்காக நாள் ஒன்றுக்கு 89 ஆயிரம் லீற்றர் தண்ணீர் தேவை. அதில் 35 ஆயிரம் லீற்றர் வலி. கிழக்குப் பிரதேச சபை வழங்குகின்றது. மானிப்பாய் சபை 15 ஆயிரம் லீற்றர் வழங்குகின்றது. மிகுதிக்கு இடர்படுகிறோம். கடற்படையினர் கட்டுப்பாடின்றி காரைநகரிலேயே தண்ணீர் எடுக்கின்றனர் என்று பிரதேச செயலர் தெரிவித்தார். கடற்படையினரைக் கட்டுப்படுத்தியே ஆகவேண்டும் என்று மாவை சோ. சேனாதிராசா தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் வசிக்கும் 14 ஆயிரத்து 612 பேருக்கு வாழ்விடத்துக்கான காணி இல்லை. இதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ள வேண்டும் என்று இணைத் தலைவர் மாவை சோ. 'சேனாதிராசா தெரிவித்தார். (த-105)

## இயற்கை உணவு உற்பத்தி நிலையம் திறப்பு

யாழ்ப்பாணம், ஏப். 12

ஆரோக்கிய வாழ்வுக்கான இயற்கை உணவு உற்பத்தி நிலையம் தெல்லிப்பழை இலங்கை முதியோர் சகவாழ்வுக் கழகக் கட்டடத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது. (ம.ஜ)

## நகுலேஸ்வரர் ஆலயத்துக்கு ஆளுநர் நேற்றுப் பயணம்

யாழ்ப்பாணம், ஏப். 12

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்துக்கு வடக்கு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் நேற்றுப் பயணம் மேற்கொண்டார்.

கீரிமலை நகுலேஸ்வரத்தினை புனித பூமியாக அறிவிக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கை தொடர்பில் ஆய்வு செய்வதற்காகவே அவர் மேற்படி பயணம் மேற்கொண்டார்.

தனது பயணம் தொடர்பில் ஆளுநர் தெரிவித்ததாவது:

கீரிமலை ஆலயம் இலங்கையின் வரலாற்றில் பிரசித்தி பெற்ற இந்து ஆலயங்களில் ஒன்றாகும். ஆலயத்திலுள்ள பிரச்சினைகள் தொடர்பில் அரசால் செய்யக்கூடிய விடயங்கள் என்ன என்பது தொடர்பாக ஆலய தலைமைக் குருக்கள் கேட்டுக்கொண்டதற்கமைவாக நான் பயணம் மேற்கொண்டுள்ளேன். ஆலய நிர்வாகத்தினருடனான எனது முதல் சந்திப்பு இதுவாகும். மேலும், ஆலய நிர்வாகத்திடம் அவர்களுடைய பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்துகொண்டதுடன் அவற்றை ஆவணப்படுத்தி தருமாறு கேட்டுள்ளேன்.



ஏராளமான பிரச்சினைகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றை விரைவில் நிவர்த்தி செய்வேன் - என்றார். (ம)

(ஜ-9)

# மாநகர பணியாளர்கள்கூட சட்டங்களை மீறுகின்றனர்

## சபை கண்டுகொள்ளவில்லையெனக் குற்றச்சாட்டு

*யாழ்ப்பாணம், ஏப். 12*

யாழ்ப்பாண மாநகர சபையில் உள்ள பணியாளர்களே மாநகர சபையின் சட்ட திட்டங்களை மதியாது செயற்படும்போது அதற்கு எதிராக மாநகர சபை நிர்வாகம் நடவடிக்கை எடுக்கத் தயங்குகின்றது என்று உறுப்பினர் ந.லோகதயாளன் தெரிவித்தார். சபையின் அமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றபோது இந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

மாநகர சபை எல்லைக்குள் எவருமே இரவு 9 மணிக்கு பின்பு கழிவு அகற்றல் சேவையில் ஈடுபட முடியாது என்ற நிலையில் நள்ளிரவு 12 மணிக்குப் பிடிக்கப்பட்ட கலிபவுசரில் மூன்று மாநகர சபை ஊழியர்கள் இருந்தனர். கலி பவுசருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய உரிமையாளரை அழைத்தபோது உரிமையாளரும் மாநகரசபையின் ஊழியர். இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இதேபோன்று நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய மறுத்த தொழில் நுட்ப அலுவலருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. சட்டத்தை மீறுபவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்ய வேண்டிய சட்டத்தரணியே சட்ட அனுமதியற்று கட்டடம் அமைக்கும் நிலையில் பழைய கட்டடத்துக்கு வெள்ளை அடிக்கின்றேன் என்கின்றார். இவற்றுக்கும் சபை நடவடிக்கை இல்லை. அவ்வாறானால் மாநகர நிர்வாகம் யார்யாருக்கு எந்த வகையான நடவடிக்கை எடுக்கின்றது என்று அறிய விரும்புகின்றேன் என்றும் லோகதயாளன் கேள்வி எழுப்பினார்.

கலி பவுசரில் பயணித்தவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாது உரிமையாளருக்கு எதிராகவே நடவடிக்கை எடுக்க முடியும். அவர் யார் எனத் தெரியாது. சட்டத்தரணியிடம் கோரப்பட்ட விளக் கத்துக்கு பதில் வழங்கியுள்ளார்.

தொழில் நுட்ப அலுவலர் இனி வரும் காலத்தில் வழக்குப் பதிவு செய்யச் சம்மதம் தெரிவித்துள்ளார்என்று ஆணையாளர் ஜெயசீலன் தெரிவித்தார்.

மீண்டும் கேள்வி எழுப்பிய உறுப்பினர், ஊழியர்கள் நிர்வாக ரீதியில் தவறிழைத்தால் நிர்வாக நடைமுறையின் பிரகாரம் நீங்கள் கூறுவதுதான் நடைமுறையா? எந்தச செயற்பாடுகளுக்கும் நிர்வாக நடவடிக்கை இடம்பெறாமல் தப்ப முடியும் என்று ஊழியர்கள் நம்புகின்றனர். அதன் காரணமாகவே தவறு தொடர்கின்றது. கலிபவுசர்விடயத்தில் நிர்வாகம் வேண்டுமென்றே தவறு இழைக்கின்றது.

உரிமையாளர் யார் எனத் தெரியாது எனப் பொய் உரைக்கின்றீர்கள். அவர் மாநகர சபை ஊழியரே. வழக்குப் பதிவுக்குச் சமூகமளித்தார் என்று உறுப்பினர்சுட்டிக்காட்டியபோது அவர் ஊழியராக இருக்கலாம் ஆனால் எனக்குத் தெரியாது என்று ஆணையாளர் மீண்டும் பதிலளித்தார்.

அவ்வாறானால். வழக்கின் பிரதியை பார்வையிடுவோமா உரிமையாளர் யார் எனக்கோரியபோது ஆணையாளர், அவர் ஊழியர் என்று எனது கவனத்துக்குக் கொண்டு வரப்படவில்லை. எஞ்சிய ஊழியர்கள்தொடர்பில் நிர்வாக நடைமுறையின் பிரகாரம் உரிய நடவடிக்கை இடம்பெறும் எனப் பதிலளித்தபோது உறுப்பினரும் விடாமல் தொடர்ந்தார்.

நிர்வாக நடைமுறையின் கீழ் நடவடிக்கை என்கின்றீர்கள். ஊழியர்களின் நியமன அதிகாரியான மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் கவனத்துக்குஇவற்றைக்கொண்டு சென்றீர்களா எனக்கோரிய போது இந்த விடயங்களுக்கும் உள்ளூராட்சி ஆணையாளருக்கும் சம்பந்தம் கிடையாது இவற்றை உள்ளூராட்சி ஆணையாளருக்குஅறிவிக்க வேண்டிய அவசியம் கிடையாது என்றார். (து-105)

# மக்கள் சந்திப்பு

சாவகச்சேரி, ஏப். 12

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மக்கள் பங்களிப்புடனான அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மேற்கொள்வது தொடர்பான மக்கள் சந்திப்பு இன்று தொடக்கம் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை வட்டார ரீதியில் நடத்தப்படவுள்ளன.

உள்ளூராட்சி திணைக்களத்தால் உள்ளூராட்சி சபைகளின் ஒவ்வொரு வட்டாரத்திலும் மக்களின் தெரிவின் பிரகாரம் வேலைத் திட்டங்களை முன்னெடுக்குமாறு அறிவிக்கப்பட்டது.

இதன்படி மக்களின் அபிப்பிராயங்களைக் கேட்டறிந்து அந்த வட்டாரத்தில் அவசியமெனக் கருதும் வேலைத்திட்டத்துக்கு முன்னுரிமை பெறுவதற்காக இந்த மக்கள் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

வட்டார மக்களை அழைத்து அவர்களால் முன்வைக்கப்படும் வேலைத் திட்டங்களைத் தெரிவு செய்து எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டதையடுத்து மக்கள் சந்திப்புக்கள் நாளை முதல் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நகரசபையின் அமர்வு இடம்பெற்றபோது தவிசாளரால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவினை சபையினர் ஏற்றுக் கொண்டு பின்வரும் திகதிகளில் அந்தந்த வட்டாரங்களில் மக்களை அழைத்துக் கருத்துக்களை கேட்டறிவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இதன் பிரகாரம் இன்று பிற்பகல் 2 மணிக்கு சபையின் மூன்றாம் வட்டாரத்துக்கான (மண்டுவில் ) சந்திப்பு செல்வவிநாயகர் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

இரண்டாம் வட்டாரத்துக்கான சந்திப்பு (சாவகச்சேரி வடக்கு )எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஸ்ரீபாலமுருகன் சனசமூக நிலைய மண்டபத்திலும் ,முதலாம் வட்டாரத்துக்கான சந்திப்பு ( கல்வயல் ) பிற்பகல் 2 மணிக்கு கல்வயல் பொது நோக்கு மண்டபத்திலும் , பத்தாம் வட்டாரத்துக்கான சந்திப்பு (கோயிற்குடியிருப்பு கடல்) எதிர்வரும் 16 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு லிகோரியார் ஆலய மண்டபத்திலும். பிற்பகல் 2 மணிக்கு பதினொராம் வட்டாரத்துக்கான (கோயிற்குடியிருப்பு தரை) சந்திப்பு சிறி முருகன் சனசமூக நிலைய மண்டபத்திலும் நடைபெறும்.

எதிர்வரும் 19ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு ஏழாம் வட்டாரத்துக்கான சந்திப்பு ( சாவகச்சேரி நகரம் ) சபையின் பொன்விழா மண்டபத்திலும், பிற்பகல் 2 மணிக்கு ஆறாம் வட்டாரத்துக்கான ( சங்கத்தானை ) சந்திப்பு சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையிலும் நடைபெறும்.

எதிர்வரும் 20 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு ஒன்பதாம் வட்டாரத்துக்கான (நுணாவில் மேற்கு ) சந்திப்பு கலைமகள் சனசமூக நிலைய மண்டபத்திலும், பிற்பகல் 2 மணிக்கு நுணாவில் கிழக்கு மத்தி எட்டாம் வட்டாரத்துக்கான சந்திப்பு சர்வசாதன சங்க சனசமூக நிலைய மண்டபத்திலும், எதிர்வரும் 21 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு ஐந்தாம் வட்டாரத்துக்கான( மீசாலை கிழக்கு) சந்திப்பு மீசாலை ஸ்ரீமுருகன் சனசமூக நிலைய மண்டபத்திலும். பிற்பகல் 2 மணிக்கு நான்காம் வட்டாரத்துக்கான (மீசாலை மேற்கு ) சந்திப்பு மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலய மண்டபத்திலும் நடைபெறுமெனவும் தவிசாளர் அறிவித்துள்ளார்.

இந்தக் கலந்தரையாடலுக்கு ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளையும், பொதுமக்களையும் கலந்து கொண்டு வட்டாரத்தில் அவசியமெனக் கருதும் அபிவிருத்தி வேலைகளை அடையாளம் காட்டி ஒத்துழைப்பு வழங்கமாறும் அறிவித்துள்ளார்.

ஒவ்வொரு வட்டாரத்திலும் வட்டார திட்டமிடல் குழுக்கள் அமைக்கப்பட்டு அவற்றின் மூலம் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளவுள்ளதால் பொதுமக்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறும் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தெரிவித்தார். (ஜ-9)



# மரக்கன்றுகள் வழங்கல்

சாவகச்சேரி, ஏப்.12

தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரி கிளையினர் வாடிக்கையாளர் 100 பேருக்கு சித்திரைப் புத்தாண்டுப் பரிசாக பயன்தரு மரக்கன்றுகளை அண்மையில் வழங்கினர். கிளை முகாமையாளர் அ.கெங்காதரம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பெருமளவு வங்கி வாடிக்கையாளர்கள் கலந்து கொண்டு மரக்கன்றுகளைப் பெற்றுக் கொண்டனர். (ஜ-9)

# இறுவட்டு வெளியீடு

அளவெட்டி.ஏப்.12

அளவெட்டி தெற்கு வெளிவயல்சிறி முத்துமாரி அம்பாளின் அருட் கடாட்சச பக்திப்பாமாலை இறுவட்டுவெளியிடப்பட்டது.

இந்த நிகழ்வு ஆலய வடக்கு வீதியில் கடந்த திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் தர்மகர்த்தா சபைத் தலைவர் தெய்வேந்திரம் தலைமையில் இடபெற்றது.

கனடாஒன்றிய சோதரன் சமணா குடும்பத்தினரும், சிவனேச நற்பணிமன்றத்தினரும் இணைந்து இறுவட்டை வெளியிட்டு வைத்தனர். (ஜ-36)



# இணக்க சபை அமர்வு

யாழ்ப்பாணம்,ஏப். 12

நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை சித்திரைப் புத்தாண்டு தினம் என்பதால் அன்றைய தினம் கரவெட்டி இணக்கசபையின் அமர்வு இடம்பெறாது என்று சபைத் தவிசாளர் நற்குணலிங்கம் அறிவித்துள்ளார்.

அதற்கு பதிலாக எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை அமர்வு இடம்பெறும்.

வழமைபோல 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் இடம்பெறுமெனவும் அவர் அறிவித்துள்ளார். (ஜ-35)

+++++

யாழ்ப்பாணம்,ஏப். 12

நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை சித்திரைப் புத்தாண்டு தினம் என்பதால் அன்றைய தினம் நல்லூர் இணக்கசபையின் அமர்வு இடம்பெறாது என்று சபைத் தவிசாளர் நா.நித்தியானந்தன் அறிவித்துள்ளார்.

வழமைபோல எதிர்வரும் 21 ஆம் திகதி அமர்வு கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் இடம்பெறுமெனவும் அவர் அறிவித்துள்ளார். (ஜ)

# செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வுகள்

பருத்தித்துறை, ஏப். 12

பருத்தித்துறை புலோலி உபயகதிர்காமம் பெரிய தேவனத்தாய் முன்பள்ளிச் சிறார்களின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டுநிகழ்வுகள் உபயகதிர்காமம் கோவில் முன்றலில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

தேசபந்து கலாநிதி சதாசிவம் வல்லிபுரநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் அன்ரன் சாள்ஸ் அரியகுமார், சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி கல்வி வலய உடற்கல்வி உதவிப் பணிப்பாளர் சி.தில்லைநாதன், அகில இலங்கை சமாதான நீதிவான்கள் சங்க இணைப்பாளர் சி.ஜெயசங்கர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஜ-9)

# கசிப்பு வைத்திருந்த சந்தேகநபருக்கு விளக்கமறியல்

வடமராட்சி,ஏப்.12

கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நெல்லியடி கோவிற்சந்தைப்பகுதியில் கசிப்பு விற்பனை இடம்பெற்றுவருவதாக நெல்லியடி பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. இதனையடுத்து கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 10 மணியளவில் குறித்த பகுதியில் உள்ள வீட்டினை சோதனை செய்தனர்.

இதன்போது 16 போத்தல் கசிப்பு மீட்கப்பட்டு சந்தேகத்தில் 52 வயதுடைய ஒருவரையும் கைதுசெய்தனர். நேற்றுமுன்தினம் பருத்தித்துறை நீதிமன்றில் சந்தேகநபரை முற்படுத்தியபோது எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (ஜ-26)

# வடமாகாண அமைச்சுக்களில் நிரப்பப்படாத வெற்றிடங்கள்!

*யாழ்ப்பாணம், ஏப்.12*

**வடக்கு மாகாண நிர்வாகத்துக்கு உட்பட்ட அமைச்சுக்கள் திணைக்களங்களில் இருக்க வேண்டிய 67 நிர்வாக சேவை தரத்திலான அதிகாரிகளில் 37 அலுவலர்களுக்கான பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்று சுட்டிக்காட்டப்படுகிறது.**

வடக்கு மாகாணத்தில் உள்ள அமைச்சுக்கள் திணைக்களங்களுக்குத் தற்போது இருக்க வேண்டிய நிர்வாக சேவை தரத்திலான எண்ணிக்கையின் 45 வீதமான வெற்றிடத்தை நிரப்புவதற்குப் போதுமான அதிகாரிகளே மாகாணத்தில் உள்ளனர். ஒட்டுமொத்த மாகாண செயற்பாட்டுக்காகவும் 30 அதிகாரிகள் மட்டுமே பணியில் உள்ளனர்.

இதன் அடிப்படையில் 55 வீதமான 37 அதிகாரிகளுக்கு வெற்றிடம் காணப்படும் நிலையிலேயே வடக்கு மாகாண நிர்வாகம் இயங்குகின்றது.

இதன் காரணமாக பற்றாக்குறையாக காணப்படும் 37 நிர்வாக சேவை ஊழியர்களை மாகாணத்துக்கு விடுவிக்குமாறு கோரி வடக்கு மாகாண சபையால் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தற்போது வடக்கில் பணியாற்றும் 30 நிர்வாக சேவைத் தரத்திலான அதிகாரிகளில் சுமார் 10 பேர் நீண்டகாலம் ஒரே பணியில் இருப்பதனால் அவர்கள் தமக்கான பதவி உயர்வுகளைப் பெற்றுச் செல்லும் வாய்ப்பாகவும் குறித்த வெற்றிடங்களை நிரப்ப வேண்டிய அவசியத்தையும் கருதி குறித்த வெற்றிடங்களுக்குப் பொருத்தமானவர்களை நியமிக்குமாறு கோரப்பட்டுள்ளது. இதேநேரம் வடக்கு மாகாண சபையின் கீழ் உள்ள அமைச்சின் செயலர்கள் திணைக்கள ஆணையாளர்கள் உள்ள இடங்களில் உதவிச் செயலர்களோ அல்லது உதவி ஆணையாளரோ இன்றியே பணியாற்றும் நிலையில் பிரதேச செயலகங்கள் தோறும் பிரதேச செயலர் மட்டுமன்றி உதவிப் பிரதேச செயலரும் பணியில் உள்ளமை செயலகங்களின் தடையற்ற பணிக்கு உதவும். ஆனால் மாகாணத்தில் ஒரு செயலர் விடுமுறை பெறுவதானால் பெரும் நெருக்கடி எதிர்நோக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது. (க-105)

## பல்கலைக் கழக சம்மேளனம் யாழ். பல்கலையில் பேச்சு

யாழ்ப்பாணம், ஏப்.12

அனைத்து பல்கலைக்கழகங்களின் தொழிற்சங்கங்களின் சம்மேளனத் தலைவர், செயலர் மற்றும் ஆலோசகர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பேச்சில் ஈடுபட்டுள்ளனர்.

ஊழியர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் இடர்பாட்டைத் தீர்க்கும் நடவடிக்கையில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பல்கலைக்கழகத்தில் பொருத்தப்பட்டிருந்த கைவிரல் அடையாள பதிவு இயந்திர சுற்று நிருப நடைமுறையில் ஏற்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் தொழிற்சங்க போராட்டம் தொடர்பிலும் அதன் விளைவுகள் தொடர்பிலும் பல்கலைக்கழகத்தின் பல்வேறு தரப்புகளுடன் கலந்துரையாடி சுமுக நிலை ஏற்படுத்துவதற்கே இவர்கள் வருகை தரவுள்ளனர் என்று பல்கலைக் கழக ஊழியர் சங்கம் செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு அலுவலர் இருவர் எவ்வித விசாரணையுமின்றி பல்கலை நிர்வாகத்தால் இடைநிறுத்தப் பட்டமை, ஊழியர்கள் தினவரவுப் பதிவேடுகளைப் பயன்படுத்த முடியாதவாறு பதிவாளர் தடுத்து வைத்துள்ளமை போன்றவற்றால் நாளாந்த கடமைகளை ஆற்ற முடியாத நிலை உருவாகியுள்ளது.

பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையைத் திரிவுபடுத்தி தவறான உள்ளக சுற்று நிருபத்தை வெளியிட்டு அதனை நடைமுறைப்படுத்த ஊழியர்களை வற்புறுத்துகின்றனர் என்றும் சங்கம் குற்றஞ்சாட்டுகிறது.

எனினும், கைவிரல் அடையாளமிடும் இயந்திரத்துக்குச் சேதம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. அதற்குப் பொறுப்பாக இருந்த பாதுகாப்பு அலுவலர்கள் இருவரையும் நிர்வாகத்தால் பணியிலிருந்து இடைநிறுத்தியுள்ளோம் என்று பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து வந்துள்ள சம்மேளன தலைவர், செயலர் மற்றும் ஆலோசகர்கள் எம்முடன் முதலில் பேசினர். பின்னர் ஊழியர்களுடன் பேசுகின்றனர். பின்னர் எம்முடன் பேசுவர் என்று கருதுகிறோம் என்று துணைவேந்தர் மேலும் தெரிவித்தார். (த)

## தெரிவுசெய்த இடத்துக்கு இ.போ.ச நகர வேண்டும்

### *மாநகர சபையில் தீர்மானம்*

யாழ்ப்பாணம், ஏப். 12

யாழ்ப்பாணப் பேருந்து நிலைய வளாகத்தில் நவீன பேருந்து நிலையக் கட்டடப் பணிகளை ஆரம்பிக்கவேண்டியுள்ளதால், இலங்கைப் போக்குவரத்துச் சபை தமக்காகத் தேர்வு செய்யப்பட்ட புதிய இடத்துக்கு விரைவாகச் சென்று தற்போதைய இடத்தை விரைவில் விடுவிக்க வேண்டும். இவ்வாறு, யாழ்ப்பாண மாநகர சபையின் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமர்வில் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

மாநகர எல்லைக்குள் யாழ்ப்பாணப் பேருந்து நிலையம் அடுக்கு மாடிக்கட்டடமாக அமைய இருப்பதால் பேருந்து தரிப்பு நிலையத்துக்குப் பின்புறமாகவுள்ள பழக்கடைகளை அகற்ற வேண்டும் என விடுத்த முதல்வரின் கோரிக்கைக்கு பழக்கடை உரிமையாளர்கள் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அது பற்றி மாநகர சபையின் உறுப்பினர்கள் பேசியிருந்தனர். இ.போ.சபை தற்போதைய இடத்தில் இயங்கும் வரை தம்மையும் அங்கு கடைகள் நடத்த அனுமதிக்குமாறு வியாபாரிகள் கோருகின்றனர். அதனால், உடனடியாக இ.போ. சபை புதிய இடத்துக்கு நகர வேண்டும் என்று இ.போ.சபை மற்றும் போக்குவரத்து அமைச்சு என்பவற்றைக் கோருவது என்று தீர்மானிக்கப்பட்டது.

பேருந்து நிலையத்திலிருந்து தம்மை அகற்றுவதாயின் மாற்று இடம் வழங்க வேண்டும் என்று வியாபாரிகள் நேற்றுமுன்தினம் போராட்டம் நடத்தியிருந்தனர். அதற்கு அனுமதிக்க முடியாது என்று மாநகர முதல்வர் விளக்கமளித்திருந்தார். (த-105)

## நடைபாதை வியாபாரம் நடத்த முனீஸ்வரன் வீதியில் அனுமதி

யாழ்ப்பாணம், ஏப். 12

யாழ்ப்பாணத்தில் வாழும் குறைந்த வருமானத்தையுடைய மக்களின் நன்மை கருதி வருடந்தோறும் இடம்பெற்ற பண்டிகைக் கால புடவை வர்த்தகம் அனுமதிக்கப்பட்டே ஆக வேண்டும் என்று மாநகர துணை முதல்வர் து.ஈசன் கொண்டு வந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாநகர சபையின் அமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை மாநகர முதல்வர் இ.ஆனோல்ட் தலைமையில் இடம்பெற்றபோது தீர்மானம் எட்டப்பட்டது.

மாநகர சபை எல்லைக்குள் இருக்கும் வர்த்தகர்களில் சிலர் தற்போது அதனை விடவும் ஏழை வறிய மக்கள் தாம் சேர்த்து வைத்திருக்கும் 5 ஆயிரம் 10 ஆயிரம் ரூபாவுக்குள் மட்டுமே ஏனைய குடும்பங்கள் போன்று பண்டிகையைக் கொண்டாடவேண்டிய தேவை உள்ளது.

இவர்களின் வாழ்வாதாரத்தையும் கருத்திற்கொண்டு இந்த ஆண்டும் பண்டிகைக் கால விற்பனை அனுமதிக்கப்பட வேண்டும் என்று துணை முதல்வர் தீர்மானம் முன்வைத்தார். உறுப்பினர் சி.குலேந்திரராயா தெரிவிக்கையில்:

உள்ளூர் வர்த்தகர்களின் நன்மை கருதி பண்டிகைக் கால வர்த்தகத்தை அனுமதிக்கக்கூடாது. அவர்கள் அதிகளவில் முதலிட்டு அதற்கான வட்டிப் பணத்தைச் செலுத்தவே பெரும் நெருக்கடியை எதிர்கொள்கின்றனர் - என்றார்.

அவ்வாறானால் ஏழை மக்களின் நிலை என்ன என்று துணை முதல்வர் வினவினார். யாழ்ப்பாண வர்த்தக சங்கத்தில் பதிவில் உள்ளவர்களுக்கு இந்தப் பண்டிகைக்கால விற்பனை அனுமதியை வழங்க முடியும் ஏனையோர் அனுமதிக்கக் கூடாது என்று குலேந்திர்ராயா மீண்டும் தெரிவித்தார்.

பண்டிகை காலத்து விற்பனை அனுமதிக்கப்பட்டால் இங்கு பிற மாவட்ட வர்த்தகர்களே நன்மை அடைவார்களேயன்றி எமது மாவட்ட வர்த்தகர்கள் பாதிப்பை எதிர்நோக்குவார்கள். எனவே பண்டிகைக் கால வர்த்தகத்தை அனுமதிக்க முடியாது என்று உறுப்பினர் வை.கிருபாகரன் தெரிவித்தார்.

நிரந்தரக் கட்டடம் உள்ளவர்களே வர்த்தக சங்கத்தில் பதிவு பெற முடியும் யாழ்ப்பாணம் முனீஸ்வரர் வீதியில் நடைபாதை வர்த்தகத்தில் ஈடுபட்டவர்களுக்கு நிரந்தர இடம் வழங்கும்போது 65 பேருக்கு இடம் வழங்கப்படவில்லை. அவர்களும் இந்த அனுமதியைதான் கோருகின்றனர். இவர்களுக்கு வர்த்தக சங்கத்திலும் பதிவு கிடையாது. அவ்வாறானால் இந்த ஏழை வர்த்தகர்களுக்கும் அன்றாடம் கூலி வேலை செய்தும் தாய், தந்தையிடம் 5 ரூபா 10 ரூபா வேண்டி உண்டியலில் பணம் சேர்த்து உடுப்பு வாங்கக் காத்திருக்கும் சிறார்களுக்கும் 25 ஆயிரம் ரூபா வுக்கும் உட்பட்ட மாத வேதனத்தை எடுத்து குடும்பத்தில் 4 அல்லது 5 அங்கத்தவர்களுடன் வாழும் குடும்பத்துக்கும் நாம் என்ன சொல்லப்போகின்றோம் என்பதையும் தெரிவித்து தீர்மான இறுதி முடிவை முதல்வரே வழங்கலாம் என்று உறுப்பினர் ந.லோகதயாளன் தெரிவித்தார்.

பண்டிகைக் காலத்தில் இவ்வாறான நெருக்கடி எழுவதனால் எமது வர்த்தகர்களே பண்டிகைக்கால வர்த்தகத்தில் ஈடுபட முன்வரவேண்டும் என்று வர்த்தக சங்கப் பிரதிநிதியிடம் முன்பே தெரிவித்துள்ளேன். அதனால் மீண்டும் தொடர்பு கொண்டு அதற்கான ஏற்பாடு உண்டா என அறிவோம். ஏற்பாடு இருப்பின் முனீஸ்வரன் வீதியில், பாதிக்கப்படும் வர்த்தகர்களுக்கும் வர்த்தக சங்கம் ஏற்பாடு செய்துள்ளவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படும். வர்த்தக பண்டிகைக்கான ஏற்பாடு இல்லையேல் வழமைபோன்று இந்த முறையும் அனுமதி வழங்கப்படும் என்று முதல்வர் தெரிவித்தார். (த-105)



## மர கன்றுகள் விற்பனை செய்யும் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்,ஏப். 12

வடக்கு மாகாணத்தில் நடமாடும் சேவை மூலம் மரக் கன்றுகள் விற்பனை செய்யும் இரண்டாம் கட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மாகாண விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

வடக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் வவுனியா மாவட்டத்தில் இயங்கும் அரச விதை உற்பத்திப்பண்ணை, மற்றும் ஐந்து மாவட்டங்களிலும் இயங்கும் மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையங்கள் மற்றும் அச்சுவேலி பூங்கனியியல் கருமூல வள நிலையம் என்பனவற்றில் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்குத் தயாராகவிருக்கும் மரக்கறி நாற்றுக்கள், பழமரக் கன்றுகள் மற்றும் ஏனைய மரக்கன்றுகள் என்பன நடமாடும் சேவை மூலம் விற்பனை செய்யப்படுகின்றன. வீட்டுத்தோட்டங்கள், பாடசாலைத் தோட்டங்கள், அலுவலகத் தோட்டங்கள் என்பனவற்றினை அமைத்தலையும் அவற்றினை மேம்படுத்தலையும் தேவையான உயிர் உள்ளீடுகளை வழங்கும் நோக்குடன் இந்த நடமாடும் விற்பனை நடைபெற்று வருகின்றது. கடந்த 9ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த நடமாடும் சேவை இந்த மாதம் 30 ஆம் திகதி வரை பொது சந்தை மற்றும் பொது இடங்களில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஜ-7)



## குடிதண்ணீர் தாங்கி கையளிப்பு

கொடிகாமம், ஏப். 12

தென்மராட்சிப் பிரதேச செயலகத்துக்கு வறுமை ஒழிப்பு திட்டத்தின் கீழ் இடர் முகாமைத்துவ திணைக்களத்தால் வழங்கப்பட்ட வாகனத்துடனான 13 ஆயிரம் லீற்றர் குடிதண்ணீர் தாங்கி சாவகச்சேரிப் பிரதேச சபையிடம் கையளிக்கப்பட்டது. பிரதேசத்தில் குடிதண்ணீர் பற்றாக்குறை காணப்படும் பகுதிகளுக்கு வேம்பிராய் மற்றும் கைதடி பகுதியில் இருந்து தண்ணீர் பெற்று வழங்குவதற்கென இந்தத் தண்ணீர் தாங்கி வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் பிரதேச செயலகத்துக்கு வழங்கப்பட்ட உழவு இயந்திரத்துடனான குடிதண்ணீர் தாங்கிகள் சாவகச்சேரி நகரசபை, பிரதேச சபை ஆகியவற்றிற்கு வழங்கப்பட்டு நாவற்குழி மட்டுவில் கைதடி நுணாவில் பகுதிகளில் உள்ள பாடசாலைகள் உட்பட குடிதண்ணீர் பற்றாக்குறையுள்ள இடங்களுக்கு தினமும் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-159)

# உயிர்வாழும் உரிமைக்கு உத்தரவாதம் தாருங்கள்

## மக்கள் திரண்டு முல்லையில் போராட்டம்






முல்லைத்தீவு, ஏப்.12

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவ மனை முன்பாக ஒன்று திரண்டு மக்கள் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை நேற்று முன்னெடுத்திருந்தனர்.



"உயிர்வாழும் உரிமைக்கு உத்தரவாதம் தாருங்கள்" என்ற வாசகம் எழுதப்பட்ட பதாகை. மற்றும் பல பாதாகைகளை ஏந்தியவாறு மாவட்ட மருத்துவமனையில் வினைத்திறனான சேவைகளை பெற்றுத் தரும்படி கோரி மக்கள் போராட்டத்தை முன்னெடுத்திருந்த னர்.

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைப் பணியாளர்கள் சிலருக்கும், மருத்துவர்கள் சிலருக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடுகளை அடுத்து அண்மையில் மருத்துவர்கள் திடீரெனப் பணிப்புறக்கணிப்பை முன்னெடுத்தி ருந்தனர். இந்தப் பணிப்புறக்கணிப்பு இரண்டு நாள்கள் இடம்பெற்றது. மாவட்ட மருத்துவனைக்குச் செல்லும் நோயாளர்கள் சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ள முடியாது பெரும் பாதிப்புக்கு உள்ளாகியிருந்தனர். நீண்ட தூரங்களில் இருந்து மருத்துவமனைக்கு வந்த நோயாளர்கள் மருத்துவர்களின் புறக்கணிப்பால் காத்திருந்து திரும்பிச் செல்ல வேண்டிய சூழலும் ஏற்பட்டிருந்தது.

மருத்துவமனையில் உள்ள பிரச்சி னைகள் என்ன என்பது பற்றி கொழும்பு சுகாதார திணைக்களம்முல்லைத்தீவுக்கு நேரடியாக வந்து விசாரணைகளிலும் ஈடுபட்டிருந்தது. இந்தப் பின்னணியில் நேற்று மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

"மருத்துவ சேவை என்பது மக்கள் ஒவ்வொருவரினதும் அடிப்படை உரிமை மாவட்ட மருத்துவமனையில் மருத்துவ சேவையினை பெற்றுக்கொள்ள வரும் நோயாளர்கள் முழுமையான மருத்துவ சேவையைப் பெறமுடியாத நிலையில் மருத்துவமனை நிர்வாகம் காணப்படுகின்றது. மருத்துவமனையில் உள்ள குறைகள் நிவர்த்தி செய்யப்படவேண்டும், மக்களுக்கு ஒழுங்கான முறையில் சிகிச்சை வழங்கப்படவேண்டும், போரின் போது கூட மாவட்டத்தில் மருத்துவ சேவை என்பது அளப்பரியதாகவே காணப்பட்டது. ஆனால் போரின் பின்னர் மருத்துவமனை நிர்வாகத்துக்குள் இருக்கும் பிரச்சினைகளே நோயாளர்களைப் பாதிக்கும் அளவுக்கு வளர்ந்துள்ளது. எனவே அவை சீர்செய்யப்பட வேண்டும் உரிய தரப்பினர் அதற்கு வழிவகுக்க வேண்டும்" என்று போராட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் கோசமிட்டனர்.

முள்ளியவளை, தண்ணீரூற்று வணிகர்கள் தங்கள் கடைகளை மூடி இந்த ஆர்ப்பாட்டத்துக்கு வலுச்சேர்த்தனர். மருத்துவமனைக்கு செல்லும் நோயாளர்களுக்கு இடையூறுகள் ஏற்படாதவாறு மருத்துவமனை முன்னால் உள்ள முதன்மை வீதியின் ஓரமாக மக்கள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

மகப்பேற்று வைத்தியரை ஏன் நியமிக்கவில்லை, குவாட்டஸ்சில் இருந்து கொண்டே நோயாளர்களுக்கு சிகிச்சையா? எமது மாவட்ட மருத்துவர்களை வெளிமாவட்டங்களுக்கு விரட்டாதீர்கள். உங்கள் உயிர் கள் பெரிது எங்கள் உயிர்கள் சிறிதா? மாஞ்சோலை மருத்துவமனையா? சாவுச்சோலை மருத்துவமனையா? உங்களுக்கு வேலைநிறுத்தம் எங்களுக்கு உயிர்போகுது. தொலைபேசி மூலம் மருத்துவம் பார்க்கலாமா? உயிர்வாழும் உரி மைக்கு உத்தரவாதம் தாருங்கள், உங்கள் அலட்சியத்தால் உயிரிழப்பு மக்களுக்கு போன்ற வாசகங்களை போராட்டக் காரர்கள் ஏந்தியிருந்தனர்.

சுகாதார அமைச்சர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநருக்கான மனு கையளிக்கப்பட்டது. முல்லைத் தீவு மாவட்ட உதவிச் செயலர் அ.லதுமீரா, வன்னி நாடா ளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா, ஆகியோருக்கு மனுக் களை வழங்கினார். வன்னிநாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்குமான மனுக்களும் அவர்களின் இணைப்பாளர்களிடம் வழங்கப்பட்டன. போராட்டத்தில் அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள், மக்கள் பிரதிநி திகளும் கலந்து கொண்டிந்தனர். (எ-21,ரி3,246)

# மிதிவெடிகள் மீட்பு

வவுனியா,ஏப் 12

வெற்றுக் காணி ஒன்றிலிருந்து விடுதலைப் புலிகளால் தயாரிக்கப்பட்ட ஜொனி மிதிவெடி என்று சந்தேகிக்கப்படும் 13 வெடி பொருள்களை பொலிஸார் மீட்டுள்ளனர்.

வவுனியா மாமடுவ பகுதியிலுள்ள வெற்றுக் காணி ஒன்றிலிருந்தே கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியா பொலிஸார் மீட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

காணியை பைக்கோவின் உதவியுடன் துப்புரவுப்பணி மேற்கொண்ட காணியின் உரிமையாளர் அப்பகுதியில் மிதிவெடிகள் காணப்பட்டுள்ளதை அவதானித்துள்ளார்.

இதையடுத்து வவுனியா பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் பாதுகாப்பு வலயத்தினை ஏற்படுத்தியதுடன் மாமடுவ சிறப்பு அதிரடிப்படையினருக்கும் தகவல் வழங்கினர்.

நீதிமன்ற அனுமதியைப் பெற்று மீட்கப்பட்ட வெடிபொருள்களை அழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# கிளிநொச்சி மாவட்டத்தில் வெயிலால் 3,243 பேர் பாதிப்பு

கிளிநொச்சி, ஏப்.12

கிளிநொச்சி மாவட்டத்தில் வெப்பத்துடனான காலநிலையால் 970 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது வடக்கு மாகாணத்தில் அண்மைய நாள்களாக தொடர்சியாக நிலவும் கடுமையான வெப்பமான காலநிலை காரணமாக மக்கள் பல்வேறு பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றனர். கிளிநொச்சி மாவட்டத்திலும் 16 கிராம சேவகர் பிரிவில் உள்ள 970 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 243 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 65 குடும்பங்களை 220 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 905 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 23 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஏனைய இரு பிரதேச செயலர் பிரிவிலும் இதுவரை பாதிப்புக்கள் தொடர்பான பதிவுகள் எவையும் இடம்பெறவில்லை.

தொடர்சியான வறட்சி காரணமாக பூநகரி பிரதேச செயலர் பிரிவில் குடிதண்ணீர் வழங்கல் இடம்பெற்று வருகின்றது. 473 குடும்பங்களை சேர்ந்த ஆயிரத்து 487 பேருக்கு குடிதண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று மாவட்ட செயலகத்தின் இடர் முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது. (எ-6)





## திருப்பாடுகளின் தவக்கால ஆற்றுகை

முல்லைத்தீவு,ஏப். 12

'பலிக்களம்' திருப்பாடுகளின் தவக்கால ஆற்றுகை புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் ஆலய வளாகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணியளவில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மறைக்கோட்டம், யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்துடன் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது. முல்லைத்தீவு மறைக்கோட்ட முதல்வர் அருட்திரு ஜோர்ச் அடிகளாரின் தலைமையில் மறைகோட்ட குருக்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்றது.

இவ்வாற்றுகையில் அந்த பிரதேசத்தில் வாழும் 160 ற்கும் அதிகமான கலைஞர்கள் ஈடுபட்டனர். (ஐ-222)

### புத்தாண்டை முன்னிட்டு

## ஓமந்தை அம்பாள் வீதி தற்காலிகமாக திறப்பு

வவுனியா,ஏப். 12

தொடருந்து திணைக்களம் தடை செய்த ஓமந்தை அம்பாள் வீதி புத்தாண்டை முன்னிட்டு தற்காலிகமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வுவனியா பன்றிக்கெய்தகுளம் ஓமந்தை அம்பாள் வீதியே நேற்று முதல் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை மக்கள் பாவனைக்காக திறந்து இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் தலையீட்டால் இந்த வீதி தற்காலிகமாக திறந்துவைக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

ஓமந்தை பன்றிக்கெய்தகுளம் அம்பாள் வீதி தொடருந்துக் கடவைக்கு கடந்த பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டது.

இதனையடுத்து மார்ச் மாதம் 5ஆம் திகதி தொடருந்து திணைக்களத்தால் தண்டவாளங்கள் போட்டு மக்கள் பயன்பாட்டுக்கு வீதியை தடை ஏற்படுத்தியிருந்தது.

இந்த நிலையில் அவ்வீதியைத்திறப்பதற்கு அப்பகுதி மக்கள் பல்வேறு நடவடிக்கையினை மேற்கொண்டனர்

இந்நிலையில் நேற்றுக் காலை 7 மணியளவில் தொடருந்து திணைக்களத்தின் ஊழியர்களால் அவ்வீதி திறக்கப்பட்டுள்ளது. எனினும் அப்பகுதி மக்கள் இவ்வீதியை தற்காலிகமாகத் திறந்து வைக்கப்பட்டதுக்கு எதிர்ப்பு தெரிவித்ததுடன் இவ்வீதியை நிரந்தரமாக மக்களின் போக்குவரத்துக்கு திறந்து விடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளனர். (ஐ)



# அரசியல் பின்னணியிலேயே வீடுகள் வழங்கப்படுகின்றன

## மன். நகரசபைத் தவிசாளர் பகிரங்கக் குற்றச்சாட்டு ஆதாரத்துடன் நிரூபிக்கட்டும் என்று செயலர் சவால்

மன்னார், ஏப்.12

மன்னார் பிரதேச செயலர் பிரிவில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் வழங்கப்பட்டுள்ள வீட்டுத் திட்டத்தின் பின்னணியில் அரசியல் பின்புலம் இருக்கிறது என்று மன்னார் நகர சபைத் தவிசாளர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் பகிரங்கமாக குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டை முற்றாக மறுத்த பிரதேச செயலக உதவிச் செயலர் எந்தக் கட்சியின் பின்பு லத்தில் வீடுகள் வழங்கப்படுகிறது என்பதை ஆதாரத்துடன் அவர் நிரூபிக்கட்டும் என்று தெரிவித்தார்.

"மன்னார் பிரதேச செயலர் பிரிவு க்குட்பட்ட பல்வேறு கிராமங்க ளில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் வீட்டுத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. மன்னார் உதவி பிரதேச செயலர் அரசியல் வாதிகளின் பின் புலத்தில் செயல்பட்டுக்கொண்டு பாதிக்கப்பட்ட மக்களை மென்மேலும் துன்புறுத்தி வருகின்றார். அதிகளவான வீட்டுத்திட்டங்கள் அரசியல் வாதிகளின் ஆதரவாளர்களுக்கே வழங்கப்பட்டு வருகின்றன. என்னிடம் பலர் நேரடியாக வந்து முறையிட்டுள்ளனர். ஆனால் உண்மையாக பாதிக்கப்பட்ட தேவையுடையவர்களுக்கு வீட்டுத் திட்டம் வழங்கப்படவில்லை. மக்களை நாளாந்தம் மன்னார் பிரதேசச் செயலகம், மன்னார் நகர சபை என அலைய விடுகின்றனர். வீட்டுத்திட்டத்தை தீர்மானிப்பது மன்னார் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையா? அல்லது ஆளும் கட்சி அரசியல்வாதிகளா? என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. சம்மந்தமே இல்லாத அரசியல்வாதிகள் மக்களை ஒரு இடத்துக்கு கூட்டிச்சென்று பிரதேச செயலரை அழைத்து வீட்டுத் திட்டம் வழங்குகின்ற நிலையே தற்போது காணப்படுகின்றது. சம்மந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொண்டு உரிய முறையில் குறித்த வேலைத் திட்டத்தை முன்னெடுக்க வேண்டும். இது தொடர்பாக நான் பல தடவைகள் மன்னார் உதவி பிரதேச செயலரின் கவனத்துக்குக் கொண்டு சென்றும் இது வரை உரிய தீர்வு மன்னார் பிரதேச செயலகத்தினால் வழங்கப்படவில்லை.

இவ்வாறான செயற்பாடுகளை நான் வன்மையாக கண்டிக்கின்றேன். இதன் பின்புலத்தில் அரசியல் வாதிகளும் இருக்கின்றார்களா என சந்தேகம் ஏற்பட்டுள்ளது. தமது எதிர்கால பதவியை தக்க வைத்துக் கொள்ளுவதற்காக அரசியல் பின்புலத்தினுடாக, அரசியல் பரிந்துரையூடாக வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டு வருகின்றது. மொட்டைக் கடிதங்களையும் தூக்கிப்பிடித்துக் கொண்டு வீட்டுத் திட்டங்களை இடை நிறுத்தும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன" என்று மன்னார் நகர சபைத் தவிசாளர் குற்றச்சாட்டு க்களை அடுக்கினார்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த பிரதேச உதவிச் செயலர், வீடுகள் அற்றவர்கள் என்று பதியப்பட்ட விவரங்கள் தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கு அனுப்பி அவர்கள் பரிந்துரை செய்திருந்தனர். ஆனால் அதில் முறைப்பாடுகள் கிடைக்க ப்பட்டன. அவை ஆராயப்பட்டு, சரியான நபர்கள் வீட்டுத் திட்டத்துக்கு உள்வாங்கப்பட்டுள்ளனர். முறைப்பாடுகள் பொய் என்று நிரூபிக்க முடியாது. தங்களுடைய சரியான ஆவணங்களைச் சமர்ப்பிக்காது சுமார் 7 குடும்பங்கள் உள்ளன.

அவர்களிடம் நான் ஆவணங்களைக் கொண்டுவருமாறு கூறியுள்ளேன். அவை சரியானதாக இருக்குமானால் அவர்களுக்கு வீடுகள் வழங்குவதில் எமக்கு பிரச்சினை இல்லை. வீடுகள் அற்றவர்களுக்குத்தான் வீடுகள் போய்ச்சேர வேண்டும். நகர சபைத் தலைவரும் வீடுகளுக்குச் சிலரை பரிந்துரை செய்தார்.

நான் அவரிடமும் இதைத்தான் கூறியுள் ளேன். உண்மைக்குப் புறம்மான குற்றச்சாட்டுக்களை அவர் ஆதாரமில்லாது தற்பொது முன்வைக்கிறார். அதற்கு அவர் பதில்சொல்லியே ஆகவேண்டும். என்று தெரிவித்தார். (எ-21,56)

## தவக்கால தியானங்கள்

### வெற்றியுள்ள வாழ்வுக்கு

எம்மைப் படைத்த தேவன் எம் உள்ளத்தை ஆராய்ந்திருக்கிறார். கடந்த காலத்தை குறித்து எமக்கு ஓரளவு தெரிந்திருக்கலாம். நிகழ்காலத்தை குறித்து அறிந்திருக்கலாம். ஆனால் ஏன் நடந்தது. என்ன நடந்து கொண்டிருக்கிறது? எதிர்காலம் எப்படி இருக்கும் என்பது யாருக்கும் தெரியாது. ஆனால் எம்முடைய தேவன் எமது முக்காலத்தையும் அறிந்தவராய் இருக்கிறார் என்று வேதம் சொல்கிறது.

நாம் நோய்வாய்பட்டால் பல்வேறு மருத்துவமனைக்குச் சென்று மருத்துவர்களைப் பார்த்து வியாதியில் இருந்து விடுதலை பெற்றுக்கொள்கிறோம். இப்படி வாழ்க்கையில் துன்பங்கள் இல்லாமல் நிம்மதியாக வாழ எம்மை முழுமையாக அறிந்து கொள்ள வேண்டுமானால் முதலில் தேவனிடம் எம்மை முழுமையாக ஒப்படைக்க வேண்டும். அப்படி செய்யும் போது தேவன் நமக்கு நிறைவான வெற்றியுள்ள வாழ்வை கொடுப்பார் என்பதில் சந்தேகமில்லை. எம்முடைய தேவன் எம்மை முற்றிலும் அறிந்தவர். தேவனே என்னை முற்றிலும் அறிந்து கொள்ளும் என்பதே தேவபக்தனின் வேண்டுதலாக உள்ளது. எனவே தூய்மையான வாழ்வு வாழ, எம்முடைய சிந்தனைகள் நல்ல சிந்தனையாக மாற தேவனிடத்தில் எம்மை ஒப்புக்கொடுப்போம்.

# தவணைப் பரீட்சைகளில் பணம் சம்பாதிப்பதே குறி!

## தமிழர் ஆசிரியர் சங்கம் கவலை

யாழ்ப்பாணம்,ஏப். 12

தேசிய கல்வி மட்டத்தோடு ஒப்பிடுகையில் மிகவும் பின்னடைந்துள்ள கிழக்கு மாகாணம் தவணைப் பரீட்சைகளில் பணம் சம்பாதிப்பதையேகுறியாகக்கொண்டு இயங்கி வருவது வருத்தமளிக்கிறது.

இவ்வாறு கிழக்கு மாகாண தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தின் சமகாலக் கல்வி நிலை தொடர்பாகவும் தவணைப் பரீட்சைகளில் நிலவும் குளறுபடிகள் சம்பந்தமாகவும் கிழக்கு மாகாண தமிழாசிரியர் சங்கத்தின் பொதுச் செயலர் சிவக்கொழுந்து ஜெயராசா வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது;

'முன்னொரு காலத்தில் கல்வியில் கொடி கட்டிப் பறந்த வடக்கு, கிழக்கு மாகாணங்களின் கல்வித்தரம் வீழ்ச்சி அடைந்து வருவது கவலையளிக்கின்றது.

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் 3 தசாப்த காலமாக ஒரு அசாதாரண சூழ்நிலைகளுக்குள் கட்டுண்டு கிடந்தன.

அக்காலப் பகுதியில் சட்டம், ஒழுங்கு,நிர்வாகம் என்பன சீர் குலைந்திருந்திருந்த போதிலும் சில அர்ப்பணிப்பான அணுகுமுறைகளைக் கடைப்பிடித்து வடக்கு - கிழக்கின் கல்விச் செயற்பாடுகளை நகர்த்த வேண்டியிருந்தது.

ஆனால், சமீப சில ஆண்டுகளில் இந்த அர்ப்பணிப்பான கல்விச் சேவை தரம் தாழ்ந்து போயிருப்பதற்கு கல்விச் சேவை வியாபாரமாக மாறி இருப்பது ஒரு காரணமாகும்.

அதிலும் குறிப்பாக அரச சுற்றறிக்கைகளை மீறி தவணைப் பரீட்சைகளை பணம் சம்பாதிக்கும் ஒரு சந்தர்ப்பமாக மாற்றி விட்டிருக்கிறார்கள்.இது எதிர்காலத்தை குழி தோண்டிப் புதைத்து விட்டதற்குச் சமனாகும்.

தமிழ்க் கல்வி வலயங்களிலும் பணம் சம்பாதிப்பதை மாத்திரம்குறியாகக்கொண்டியங்கும் இத்தகைய கல்விச் சீர்குலைவுகள் இருந்தபோதிலும் குறிப்பாக கிழக்கு மாகாணத்தின் முஸ்லிம் கல்வி வலயங்களில் இவ்வாண்டின் முதலாம் தவணைப் பரீட்சை அரசின் சுற்றறிக்கைகளை யும் மீறி தான்தோன்றித் தனமாக நடாத்தப்பட்டிருப்பதை அறியக் கூடியதாக உள்ளது.

இது தவறான முன்னுதாரணமாகும். இந்த முதலாம் தவணைப் பரீட்சையை தாம் பணம் சம்பாதிக்கும் நோக்கத்தை மாத்திரம் குறியாகக் கொண்டு அதிகார மட்டத்திலுள்ளோர் அரச சுற்றறிக்கைகளை மீறி பல குளறுபடிகளைச்செய்துபரீட்சைகளைக் குழப்பியிருக்கிறார்கள். இது கண்டிக்கத்தக்கது.

மேலும், இந்தக் குளறுபடிகளுடனான பரீட்சைகளால் பெற்றோர், மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் அதிக உளைச்சல்களுக்கு உள்ளாகியிருக்கிறார்கள்.

இத்தகையதவறானமுன்னுதாரணங்கள் எதிர்காலத்தில் நிகழா வண்ணம் தவறுகள் சீர் செய்யப்பட வேண்டும். என்றுள்ளது. (ஜ-46)

## சேவை நலன் பாராட்டு

இடமாற்றம் பெற்றுச் சென்ற பிரதி நீர்ப்பாசன பணிப்பாளரும் இரணைமடு நீர்ப்பாசன அபிவிருத்தி திட்டமுகாமையாளருமான ந.சுதாகரனுக்கு சேவை நலம் பாராட்டு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு திருவையாறு இரணைமடு திட்ட முகாமைத்துவ அலுவலகத்தில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதேவேளை இரணைமடு அபிவிருத்தி திட்டங்களில் அவருடன் இணைந்து பணியாற்றிய திணைக்கள பொறியியலாளர்கள் மற்றும் தொழிநுட்ப அலுவலர்கள் ஆகியோரும் மதிப்பளிக்கப்படவுள்ளனர். (ஜ-222)

# வீதியில் உறங்கியவருடைய காலில் ஏறிச்சென்றது டிப்பர்

## மாங்குளம் பனிக்கன் குளத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப்.12

வீதிக் கரையோரமாகப் படுத்து உறங்கிக் கொண்டிருந்த நபர் ஒருவரின் காலின் மேலால் டிப்பர் ரக வாகனம் ஒன்று ஏறிச் சென்றதில் அவரது கால்கள் சிதைவடைந்தன. அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் ஏ9 வீதியில் இரவு 9 மணியளவில் இடம்பெற்றது.

வவுனியாவிலிருந்து கிளிநொச்சி நோக்கி வந்து கொண்டிருந்த டிப்பர் ரக வாகனம் ஏ9 வீதியில் பனிக்கன்குளம் எனும் பகுதியில் பயனித்த போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது என்று தெரிவிக்கப்படுகிறது. டிப்பர் ஏறியதால் இரண்டு கால்களும் கடும் பாதிப்படைந்தன. அந்தப் பகுதியில் நின்றர்களால் காயமடைந்தவருக்கு முதலுதவி வழங்கப்பட்டது. பின்னர் அவசரப்பிரிவு அம்புலன்ஸ் மூலம் கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். குறித்த



நபர் யார் என்பது தொடர்பில் இனங்காணப் படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (எ-21)

# காணிகளை விடுவிக்கக் கோரி சிலாவத்துறையில் ஆர்ப்பாட்டம்

மன்னார், ஏப்.12

மன்னார், சிலாவத்துறையில் தமது பூர்வீகக் காணிகளை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி மக்கள் நடத்தி வரும் போராட்டம் 50 ஆவது நாளை எட்டியுள்ளது. அதைமுன்னிட்டு நீர்கொழும்பு தேசிய மீனவர் ஒற்றுமை இயக்கம் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை நேற்றுமுன்தினம் நடத்தியது.

நீர்கொழும்பு பேருந்து நிலையத்துக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்துக்கு சிறிவிமுக்தி காந்தா பெண்கள் அமைப்பினரும் ஒத்துழைப்பு வழங்கினர். மன்னார் மாவட்ட மீனவர் ஒத்துழைப்பு இயக்கமும் போராட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கினர்.

"போரால் சிலாவத்துறையில் இருந்து இடம் பெயர்ந்து புத்தளம் பகுதியில் வாழ்ந்த முஸ்லிம் மக்கள் சமாதானத்தின் பின் தமது பூர்வீக நிலமான சிலாவத்துறைப்பகுதிக்கு சென்றனர். அவர்களது காணியில் இலங்கை கடற்படையினர் தளம் அமைத்து பிரதான கடற்படைத்தளமாக மாற்றிக் கொண்டுள்ளனர். கடற்படைத் தளம் அமைக்கப்பட்டிருக்கும் காணி பொது மக்களின் பூர்வீக காணி என்பதற்கான அனைத்து ஆவணங்களையும் வைத்துள்ளார்கள்.

அரசு உடனடியாக தலையிட்டு சிலாவத்துறை மக்களின் காணிகளை கடற்படையினரிடம் இருந்து மீட்டுக் கொடுக்க வேண்டும்." என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர். (எ-213)

# கிளி. செஞ்சோலைக் காணி அங்கு வளர்ந்தவர்களுக்கே

## மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவில் தீர்மானம்

கிளிநொச்சி. ஏப்.12

**விடுதலைப் புலிகளின் பராமரிப்பில் இருந்து வந்த செஞ்சோலைக் காணியை, அங்கு வளர்ந்து தற்போது குடும்பங்களாக உள்ளவர்களுக்கே வழங்க வேண்டும் என்று கிளிநொச்சி மாவட்டச் செயலக ஒருங்கிணைப்புக் குழு தீர்மானித்துள்ளது.**

கிளிநொச்சி மாட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போதே அந்தத்தீர்மானம்நிறைவேற்றப்பட்டது.
ஆதரவற்றவர்களுக்காக விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்டு, சிறப்பாக நடத்தப்பட்ட செஞ்சோலை சிறுவர் இல்லம், மற்றும் காந்த ரூபன் அறிவுச் சோலை போருக்குப் பின்னர் இராணுவத்தினருடைய கட்டப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. அந்த இடங்களில் இராணுவத்தினர் தொடர்ந்தும் நிலைகொண்டிருந்தனர். விடுதலைப் புலிகளுடைய காலத்தில் அந்த இல்லங்களில் இருந்து வளர்ந்த சிறுவர்கள் சிலர் இன்று பெரியவர்களாகி திருமணம் புரிந்துள்ளனர். எனினும் அவர்களுக்கான சொந்தக் காணிகள், வீட்டு வசதிகள் அற்ற நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர். அந்தச் சிறுவர் இல்லங்கள் அண்மையில் படையினரின் பிடியில் இருந்து விடுவிக்கப் பட்டது. அந்தக் காணியில் அங்கு வளர்ந்து திருமணமான 65பேர் தற்போது குடிமயர்ந்துள்ளனர். செஞ்சோலை சிறுவர் இல்லங்களில் வளர்ந்த அவர்களுக்கே அந்தக் காணிகளை வழங்குமாறு கோரிக்கை விடப் பட்ட நிலையில் அந்த விவகாரம் நேற்று மாவட்டச் செயலகத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது.
இதன்போது, செஞ்சோலை சிறுவர் இல்லம் அமைந்துள்ள காணிகளுக்கு உரித்துடையவர்கள் என்று கூறி 13 பேர் அந்தக் காணிகளை தங்களிடமே வழங்குமாறு கோரியுள்ளனர் என்று கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. எனவே அது தொடர்பில் விரிவாக ஆராய்ப்பட்டது. எனினும் குறித்த காணி விடுதலைப்புலிகளால் பணம் கொடுத்தே கொள்வனவு செய்யபப்பட்டது என்று சுட்டிக்காட்டப்பப்பட்டது. எனவே அந்த காணியை உரிமைகோருபவர்களுக்கு வேறு காணிகளும் உள்ளமையால் அதைச் செஞ்சோலையில் வளர்ந்தவர்களுக்கே வழங்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. காணி உரிமை கோருபவர்களிற்கு வேறு காணி வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

(21,6)

# கிளிநொச்சிக்கு வந்த அமைச்சர்கள் “வேஸ்ட்”

## சிறிதரன் எம்.பி ஆதங்கம்

கிளிநொச்சி ஏப். 12
கடந்த வருடம் இடம்பெற்ற வெள்ளப் பாதிப்பை அடுத்து பெரும் அழிவுகளைச் சந்தித்த கிளிநொச்சி மாவட்டத்துக்கு உதவிகள் செய்வோம் என்று தெரிவித்து கொழும்பில் இருந்து கிளிநொச்சிக்கு வந்த அத்தனை அமைச்சர்களும் சொன்னவற்றைச் செய்யவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் சுட்டிக் காட்டினார். வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேதமாச மட்டுமே ஓரளவேனும் சொன்ன சொல்லைக் காப்பாற்றியுள்ளார் என்றும் சிறிதரன் தெரிவித்தார்.
கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்ற போதே அவர் இவ்வாறு சுட்டிக்காட்டினார்.
வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு உடனடியாக வழங்கப்படும் எனத் தெரிவித்த 10 ஆயிரம் ரூபா பணம் இது வரை முழுமையாக வழங்கப்படவில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்ட நிலையில் அந்த விடயம் தொடர்பாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு ஆராய்ந்தது.
அப்போது கருத்துத் தெரிவித்த ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளு மன்ற உறுப்பினருமாகிய சிறிதரன் வெள்ளப்பாதிப்புக்களை பார்வையிட வந்த முதன்மை அமைச்சர் சபாநாயகர் போன்றோர் அனைவருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா வழங்குங்கள் தெரிவித்திருந்தனர். ஆனால் இன்று பலமாதங்களாகியும் அந்தப் பணம் பாதியளவுகூட வழங்கப்படாத நிலையில் காணப்படுகிறது - என்றார்.

(எ-21,6)



# விவசாய அலுவலகங்களில் அறிவூட்டும் நிகழ்வுகள் பல

யாழ்ப்பாணம், ஏப். 12
விவசாயத்திணைக்களத்தின் விவசாய ஊக்குவிப்பு வாரத்தை முன்னிட்டு மாகாணத்திலுள்ள விவசாய அலுவலகங்களின் ஏற்பாட்டில் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
பயிர் சிகிச்சை முகாம், நவீன விவசாய உபகரணங்கள் தொடர்பான விளக்கங்கள், பழமரக்கன்றுகள் மற்றும் விதைகள் விற்பனை, சேதன விவசாயம் தொடர்பான விழிப்புணர்வு, பார்த்தீனிய கட்டுப்பாடு தொடர்பான ஆலோசனைகள், காளான் செய்கை போன்ற பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. வவுனியா பம்பைமடு விவசாயப் போதனாசிரியர் பிரிவு, கோவில்குளம் விவசாய போதனாசிரியர் பிரிவு, பாவற்குளம் விவசாய போத னாசிரியர் பிரிவு ஆகிய வற்றில் நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

(த-7)



# மன்னாரில் சுயதொழில் ஊக்குவிப்பு செயற்பாடு

மன்னார்,ஏப். 12
மன்னாரில் விவசாய ஊக்குவிப்பு வாரத்தை முன்னிட்டு சுயதொழில் மூலம் மேலதிக வருமாணங்களை மக்களுக்கு பெற்றுக் கொடுக்கும் வகையில் மன்னார் விவசாயத் திணைக்களம், பிரதி மாகான விவசாய பணிப்பாளர் அலுவலகம் ஆகியன இணைந்து பல விதமான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.
அந்த வகையில் புதிய வகை மாங்கன்றுகள் அறிமுகம் செய்தல், காளான் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு எனப் பல்வேறு செயற்பாடுகளை செய்துவருகின்றன. எருவிட்டான் கிராமத்தில் தேனீ வளர்ப்பில் புதிய ஒரு முறையாக மரத் துளைகள் ஊடாக எவ்வாறு தேனீக்களை சேகரிப்பது என்றும் பூக்கள் குறைந்த காலப்பகுதியில் எவ்வாறு தேனீக்களுக்கான உணவு உற்பத்தி செய்வது போன்ற பயிற்சிகள் நேற்று முன்தினம் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.
விவசாய ஊக்குவிப்பு வார நிகழ்வு எருவிட்டான் கிராமத்தில் பிரதி மாகாணப் பணிப்பாளர் கே.எம்.ஏ சுகூர் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் பிரதேச விவசாய போதனாசிரியர்கள், சுய தொழில் மற்றும் தேனீ வளர்ப்பில் ஆர்வம் உள்ள பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(ஐ-213)

### மணலுக்கான அனுமதிகளை வழங்க

# பிரதேச செயலர்களுக்கு அதிகாரம் வழங்கியது ஒருங்கிணைப்புக் குழு

கிளிநொச்சி, ஏப்.12
கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள் ளப்பட்டுவரும் வீட்டுத் திட்டங்களுக்கான மணலைக் கொள்வனவு செய்வதற்கு மாவட்டத்தில் உள்ள அந்தந்த பிரதேச செயலர்களிடம் அனுமதிகளைப் பெறமுடியும் என்று தெரிவித்த கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பு குழு, அதற்கான அதிகாரங்களைப் பிரதேச செயலர்களுக்கு வழங்கியது.
கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போது கிளிநொச்சி மாவட்டத்தில் கட்டப்பட்டும் வீடுகளுக்கு உள்ள மணல் தட்டுப்பாட்டை முடிவுக்கு கொண்டு வருவதற்கு மணல் தட்டுப்பாடு தொடர்பில் ஆராயப்பட்டது. மாவட்டத்தில் அதிக விலையில் மணல் விற்பனை செய்யப்படுகின்றமை தொடர்பிலும் ஆராயப்பட்டது. இதன்போதே வீட்டுத் திட்ட பயனாளிகளுக்கு சிறப்பான முறையில் மணல் ஏற்றுவதற்கான அனுமதிப் பத்திரத்தை வழங்குவதற்கு பிரதேச செயலர்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டது.
இதற்கமைய பொலிஸாரும், வனவளப் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் கனிய வளத் திணைக்களம் உள்ளிட்டோர் மக்களின் வீட்டுத் திட்டத்தை முழுமைப்படுத்துவதற்கு கடுமையான கெடுபிடிகளை மேற்கொள்ளாது. பிரதேச செயலரால் வழங்கப்படும் மணல் அனுமதிப்பத்திரத்தைச் சோதனையிட்டு, அதனைப் பயன்படுத்தி பயனாளிகளுக்கு உதவுமாறும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு வேண்டிக்கொண்டது.
இதன்படி வீட்டுத்திட்டப் பயனாளிகள் அந்தந்த பிரதேச செயலகங்களில் தமக்கான வீட்டுத்திட்டத்துக்கான மணல் அனுமதியைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது.
அண்மையில் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற நிகழ்வு ஒன்றில் மணல் தட்டுப்பாடு பற்றி பெண் ஒருவரால் தெரிவிக்கப்பட்ட போது, இராணுவத்தினர் முகாமுக்குள் களவாக மண் விற்பனை செய்கின்றனர். ஆனால் பயனாளிகளுக்கு மணல் இல்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் ஆதங்கப்பட்டிருந்தார். அடுத்து நடக்கும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அதற்கான நல்ல முடிவைப் பெற்றுத் தருவதாகவும் அவர் உறுதியளித்திருந்தார்.

(எ-21,6)

# மணல் அள்ளத் தடை விதித்த இடத்தில் அனுமதி பெறுங்கள்

## யாழ். மாவட்ட செயலரின் யோசனைக்கு சிறிதரன் பதில்

கிளிநொச்சி, ஏப்.12
கிளிநொச்சி பூநகரிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கௌதாரிமுனையில் இருந்து யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு வீட்டுத் திட்டத்துக்கு தேவையான மணல் பெற்றுக்கொள்ளப்பட்டபோது அது எவ்வாறு நிறுத்தப்பட்டதோ, அங்குதான் தற்போது குடாநாட்டில் உள்ள மணல் பிரச்சினைதொடர்பா கவும் ஆராய முடியும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.
யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு வழங்கப்பட்டுள்ள வீட்டுத் திட்டங்களுக்கான மணலைப் பெற்றுக் கொள்வதில் குடாநாட்டு மக்கள், அதிகாரிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வரும் நிலையில் மணல் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா. வேதநாயகன் கிளிநொச்சி மாவட்டச் செயலரிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்திருந்தார் என்று அறியமுடிகிறது.
கடந்த காலங்களில் பெற்றதைப் போன்று, கிளிநொச்சி பூநகரிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கௌதாரிமுனையில் இருந்து வீடுகளின் கட்டுமானத்துக்கான மணலை தற்காலிகமாகப் பெறுவதற்கு ஆவண செய்யுமாறே யாழ்ப்பாண மாவட்டச்செயலர் கோரியுள்ளார். அந்தக் கோரிக்கைய நேற்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் கவனத்துக்கு கிளிநொச்சி மாவட்டச் செயலர் கொண்டுவந்தார்.
அந்தக் கோரிக்கையை தொடர்பில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் குறிப்பிட்டார். குறித்த பகுதியில் மேற்கொள் ளப்பட்ட மணல் அகழ்வு பூநகரி பிரதேச அபிவிருத்தி குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு தடுக்கப்பட்டது என்று தெரிவித்த ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய சி.சிறிதரன் அது தொடர்பில் மீண்டும் பூநகரி பிரதேச அபிவிருத்தி குழு கூட்டத்திலேயே பேசித் தீர்மானிக்க முடியும் எனவும் குறிப்பிட்டார்.



(21,6)




அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவின் நாட்டுக்காக ஒன்றிணைவோம் தேசியத் திட்டத்தில் போதைப் பொருள் ஒழிப்பு விழிப்புணர்வுப் பேரணி செங்கலடி நகரில் கடந்த செவ்வாய்கிழமை நடைபெற்றது. ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகம், சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் இணைந்து இதை ஏற்பாடு செய்திருந்தன.
ஏறாவூர்ப்பற்று பிரதேச முன்றலில் ஆரம்பமான பேரணி செங்கலடி பதுளை வீதிச் சந்தி வரை சென்று மீண்டும் பிரதேச செயலகத்தை வந்தடைந்தது. (கு)

# வர்த்தக அபிவிருத்தியை கட்டியெழுப்புவதே சவால்

## தலைமை அமைச்சர் தெரிவிப்பு



*கொழும்பு, ஏப். 12*

கடன் சுமை அதிகரிப்பால் வர்த்தக அபிவிருத்தியைக் கட்டியெழுப்புவது பெரும் சவாலாக உருவாகியுள்ளது என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அலரிமாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
கடன்சுமைஅதிகரிப்பால்வங்கிக் கடன்களின் வட்டி வீதத்திலும் பெருமளவு அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. இதற்குக் கடந்த வருடத்துடன் தீர்வை வழங்க எண்ணியிருந்தோம். ஆனால் வருட இறுதியில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி நிலைமைகளால் அதனை நடைமுறைப்படுத்த முடியாமல் போயிருந்தது.
தற்போது சிறு மற்றும் நடுத்தர வர்த்தகர்களை ஊக்குவிக்கும் வகையிலும் பயனாளிகளின் நலன்கருதியும் வங்கிக் கடன்வட்டிவீதத்தை அடிப்படைப் புள்ளி 200 வீதத்தால் குறைக்க தீர்மானித்து ள்ளதுடன் அதற்கான சூழ்நிலைகள் கைகூடி வந்துள்ளன.
வட்டி வீதத்தைக் குறைப்பதற்கு அனுமதிகிடைத்தவுடன் வங்கி கடன் வட்டி வீதம் குறைவடையும் என்றும் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.
வங்கிக்கடன்வட்டிவீதத்தைக் குறைப்பது தொடர்பில் நிறைவேற்று அதிகாரிகள், கணக்காய்வுத் திணைக்களத்தின் உறுப்பினர்கள், நிதி அமைச்சின் அதிகாரிகள் மற்றும் உபாய முறைகள் மற்றும் பன்னாட்டு வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்ரம உள்ளிட்ட தரப்பினருடன் கலந்துரையாடல் இடம்பெற்றது.
இதன்போது அதிகப்பட்ச வட்டி வீதத்தை எவ்வாறு குறைப்பது தொடர்பிலும் அதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது என்று தலைமை அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (கு)

# தயாசிறியின் கருத்தால் கொதிக்கின்றார் பீரிஸ்

கொழும்பு, ஏப். 12
அரச தலைவர் தேர்தல் நடத்துவதை பிற்போடுகின்ற எந்த முயற்சிகளையும் அனுமதிக்க முடியாது என்று போர்க்கொடி தூக்கியுள்ளார் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைவர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்.
அரச தலைவரின் பதவிக் காலம் குறித்து உயர் நீதிமன்றத்திடம் சட்ட வியாக்கியானம் கேட்கப் போவதாக, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்த கருத்துத் தொடர்பிலேயே, பீரிஸ் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.
கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
. அரச தலைவரின் பதவிக் காலம் எப்போது முடிவடைகிறது என்று, உயர் நீதிமன்றத்தின் கருத்தை கேட்பது குறித்து ஆராயப்படுவதாக சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜெயசேகர கூறியிருக்கிறார்.
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் அனுமதியின்றி அல்லது அவருக்குத் தெரியாமல் சிலர் இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.
9 ஆவது திருத்தச்சட்டம், அரசதலைவரின் பதவிக்காலத்தை 6 ஆண்டுகளில் இருந்து 5 ஆண்டுகளாக குறைத்திருக்கிறது. 19 ஆவது திருத்தச்சட்டம் 2015ஆம் ஆண்டு ஜூன் மாதம் 21ஆம் திகதியே சபாநாயகரின் ஒப்புதலைப் பெற்றது என்பதால், அன்றில் இருந்தே அரச தலைவரின் பதவிக்காலம் தொடங்குகிறது என்பதே தயாசிறி ஜெயசேகரவின் வாதம்.
ஆனால் இது அர்த்தமற்ற வாதம். அரச தலைவராகப் -பதவியேற்ற நாளில் இருந்தே, பதவிக்காலம் தொடங்குகிறது.
புதிய தலைமை நீதியரசர் பதவியேற்ற பின்னர் உயர் நீதிமன்றத்தின் கருத்தைக் கேட்கவுள்ளதாக தயாசிறி ஜயசேகர கூறியிருக்கிறார்.
இது வலுவான வழக்காக இருந்தால், அதுவரை ஏன் காத்திருக்க வேண்டும்?
அரசமைப்பின் 129 (03) பிரிவின் கீழ், இதுபோன்ற வழக்குகளை குறைந்தது 5 நீதியரசர்களைக் கொண்ட அமர்வே விசாரிக்க வேண்டும். தலைமை நீதியரசரால் தனித்து எதுவும் செய்து விட முடியாது. இந்த முயற்சிகள் தற்போதைய தேர்தல் நடைமுறைகளை குழப்புகின்ற முயற்சியாகும்.
அரச தலைவர் தேர்தலைப் பிற்போடுவதற்கு முற்பட்டால் அதற்கு எதிராக பொதுமக்கள் முன்னணி நீதிமன்ற த்துக்குச் செல்லும்-என்றார். (ஓ.5)

# சிறிசேனவின் பதவிக்காலம் ஜனவரி 9 இல் நிறைவுறும்

## ஜயம்பதி விக்கிரமரத்ன எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 12
19 ஆவது திருத்தத்தின்படி அரசதலைவர் மைத்திரிபாலவின் ஐந்து வருடங்கள் பதவிக்காலம் 2015 ஜனவரி 9 ஆம் திகதியே ஆரம்பித்தது. அதனால் எதிர்வரும் ஜனவரி 09 ஆம் திகதி சிறிசேனவின் பதவிக்காலம் நிறைவடையும். இவ்வாறு அரசமைப்பு நிபுணரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜயம்பதி விக்கிர மரத்ன தெரிவித்துள்ளார்.
அரசதலைவரின் பதவிக்காலம் குறித்து உயர்நீதிமன்றிடம் கேட்கப்படவுள்ளதாக வெளிவந்த செய்திகள் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:
அரசமைப்பின் 19 ஆவது திருத்த 30 ஆவது பிரிவு 2 அரசதலைவரின் பதவிக் காலத்தை ஐந்து ஆண்டுகளுக்கு குறைக்கத் திருத்தப்பட்டது.
இது இப்போது பதவி வகிக்கும் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு இது பொருந்தும். பதவிக்காலம் குறித்து ஏற்கனவே நீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது.
அப்படியான நிலையில் மீண்டும் உயர் நீதிமன்றத்துக்கு எந்த அடிப்படையில் செல்ல அரசதலைவர் உத்தேசித்திருக்கிறார் என்பது தெரியவில்லை - என்றார்.
மைத்திரிபால சிறிசேன 2015ஆம் ஆண்டு ஜனவரி 9ஆம் திகதி அரசதலைவராகப் பதவியேற்றார். 19 ஆவது திருத்தச் சட்டத்துக்கு அமைய அரசதலைவர் பதவிக்காலம் ஆறு வருடங்களிலிருந்து ஐந்து வருடங்களாகக் குறைக்கப்பட்டன. இவ்வாறு குறைக்கப்பட்டு சபாநாயகர் கையெழுத்திட்டது, 2015ஆம் ஆண்டு ஜூன் 21ஆம் திகதி.
அதனால் சபாநாயகர் கையெழுத்திட்ட திகதியிலிருந்துதான் அரசதலைவர் காலம் கணிக்கப்படவேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜெயசேகர தெரிவிக்கிறார்.
ஆனால், 19ஆவது திருத்தச் சட்டத்தில் சபாநாயகர் ஜூனில் கையெழுத்திட்டாலும் மைத்திரிபால சிறிசேன ஜனவரி 09 ஆம் திகதி அரச தலைவராகப் பதவியேற்றார் என்பதால் ஜனவரி 09 ஆம் திகதியுடன் அவரது பதவிக்காலம் நிறைவடை கிறது என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் அரசதலைவர் சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் உட்பட பலரின் கருத்தாகவுள்ளது. (கு)

# தற்போதைய அரசியலில் குற்றஞ்சாட்டும் கலாசாரம்

## குணவர்த்தன எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, ஏப். 12
அரசியல்வாதிகளைப் பழிவாங்குவதுஎனின்இரண்டுமுறைகள் இருக்கின்றன. பழி வாங்க வேண்டிய அரசியல்வாதியை கொன்றுவிடுகின்ற கலாசாரம் முன்பு காணப்பட்டது. தற்போது அந்த அரசியல்வாதியின் மீது பொய்யான குற்ற ச்சாட்டுக்களைக் கூறி அந்த நபரின் பெயருக்குக் களங்கம் ஏற்படுத்துகின்றார்கள்.
இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.
வஜிராஸ்ரம விகாரையில் கடந்த செவ்வாய்க்கிழமை அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் மேலும் தெரிவித்ததாவது:
வரவு - செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு 4 நாள்களுக்குள் அரச நிதி பற்றிய குழுவின் அறிக்கை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும் அதனைச் சமர்ப்பிப்பதிலும் காலதாமதம் காணப்பட்டது. அதுகுறித்து நாடாளுமன்றில் நான் வினவிய போது, நான் அரச நிதி பற்றிய குழுவின் அமர்வுகளுக்கு ஒழுங்காகச் சமுகமளிப்பதில்லை என்று குற்றம் சுமத்து கின்றார்கள். அந்தக் குழுவின் செயற்பாடுகளில் ஏற்பட்ட அதிருப்தியின் காரணமாகவே அரச நிதி பற்றிய குழு அமர்வுகளில் கலந்துகொள்வதில்லை.
அரசநிதி பற்றிய குழுவின் அறிக்கையில் உள்ள விடயங்களை நாடாளுமன்றின் கவனத்துக்குக் கொண்டுவருவதற்கு முற்பட்ட போது, நான் தனியார் வங்கியொன்றில் கடன்பெற்று, அதனை இன்னமும் மீளச் செலுத்தவில்லை என்று பொய்யான குற்றச் சாட்டுக்களைஎன் மீது முன் வைக்கின்றனர். - என்றார். (கு-61)

# அரசதலைவர் செயற்றிட்டத்தில் மீன்பிடி உபகரணங்கள் வழங்கல்

செங்கலடி, ஏப். 12
மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மீனவ அமைப்புகளுக்கு மீன்பிடி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு உறுகாமத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.
அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவின் நாட்டுக்காக ஒன்றிணைவோம் தேசிய செயற்றிட்டத்தில் இவை வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.
ஐந்து பயனாளிகளுக்கு தோணிகளும் 90 பயனாளிகளுக்கு மீன்பிடி வலைகளும் வழங்கப்பட்டன.



தேசிய நீர் உயிரின வளர்ப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலர் ந.வில்வரெட்ணம், அரசதலைவரின் செயலக உதவிச் செயலர் எம்.எப்.வூ. சேனசவத், மாவட்ட நீர் உயிரின வளர்ப்பு அலுவலர், நீரியல் விரிவாக்கல் அலுவலர்கள் உட்படப்பலர் கலந்துகொண்டனர். தேசிய நன்னீர் மீன் உற்பத்திக்கு மட்டக்களப்பு மாவட்டம் வருடாந்தம் 2ஆயிரம் மெற்றிக் தொன் பங்களிப்புச் செய்கின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. (கு)

# மொரகஹகந்த திட்டத்தால் கிழக்குக்கும் நன்மையுண்டு

## அரசதலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 12
மொரகஹகந்த - களுகங்கை நீர்ப்பாசனத் திட்டத்துடன் ரஜரட்ட விவசாயத் துறையில் புதியதோர் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதன் மூலமாக, வடமேல் மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள விவசாய சமூகத்தினரும் நன்மைகளைப் பெற்றுக்கொள்ளமுடியும்.
இவ்வாறு அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
பொலன்னறுவை வரலாற்று முக்கியத்துவமிக்க கல்விகாரையில் அண்மையில் நடைபெற்ற புத்தரிசி விழாவில் உரையாற்றும்போது இவ்வாறு தெரிவித்தார்.
நாட்டின் விவசாயத் துறையினரின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காக இன்றுவரை அர்ப்பணிப்புடன் செயற்படும் நான், அரசதலைவர் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் நாட்டின் விவசாய துறையினதும் விவசாய சமூகத்தினரினதும் நன்மைக்காக மேற்கொள்ள தேவையான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு ஒருபோதும் பின்நிற்கவில்லை என்று மேலும் தெரிவித்தார். (கு)

# அடுத்த அரச தலைவர் கடுமையாக இருப்பார்

## ஊடகங்களை மிரட்டிய மைத்திரி

கொழும்பு, ஏப். 12

இலங்கையில் ஆட்சியில் இருந்த ஆறு அதிபர்களிலும், ஊடகங்களால் மிகவும் துணிச்சலாக அவமதிக்கப்பட்ட அரச தலைவர் நான்தான். இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடந்த அரச தலைவர் ஊடக விருது வழங்கும் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எனக்குப் பின்னர் ஆட்சிக்கு வரும் அரச தலைவர் என்னைப் போன்று, சேறு பூசல்களைப் பொறுத்துக் கொள்பவராக இருக்கமாட்டார். கடந்த நான்கு ஆண்டுகளில் என்னை நடத்தியதைப் போன்று, அடுத்த அரச தலைவரையும் நடத்தும் எண்ணம் கொண்டிருந்தால், கவனமாகஇருக்கவேண்டும்.

இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் என்னை இலக்கு வைத்து தாக்கின. அவர்களுக்கு நான் எளிதான இலக்காக இருந்தேன். டி.பி.விஜேதுங்கவைத் தவிர வேறெந்த அதிபருக்கும், ஊடகங்களுடன் நல்லுறவு இருந்ததில்லை.

இப்போது அடுத்த அரச தலைவர் பதவிக்குப் பலரது பெயர்கள் முன்மொழி யப்படுகின்றன. இவர்களில், யார் அரச தலைவராக பதவிக்கு வந்தாலும், ஊடகங்களுக்கு அது கடுமையாக இருக்கும் - என்றார். (ஒ.5)

## அரச அச்சக அதிகாரிகள் மீது ஊழியர்கள் தாக்குதல்

கொழும்பு, ஏப். 12

பொரளையில் அமைந்துள்ள அரச அச்சகத்தின் பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகள் மீது, அச்சக ஊழியர்கள் சிலர் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அரச அச்சகரின் உத்தரவுக்கு இணங்க மதுபோதையில் ஊழியர்கள் எவரையும் அச்சகத்துக்குள் அனுமதிக்க மறுத்ததைத் தொடர்ந்து மோதல் இடம்பெற்றுள்ளதாக உதவிப் பாதுகாப்பு அதிகாரி எச்.பீ. எஸ். விஜேதுங்க தெரிவித்துள்ளார். இந்தச் சம்பவம் சில நாள்களுக்கு முன்னர் நடைபெற்றுள்ளது.

குறித்த பாதுகாப்பு அதிகாரிகளை சேவையிலிருந்து நீக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இருதரப்பினருக்கு இடையில் சிறிய மோதல் இடம்பெற்றது. நிலமை பின்னர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது என்று அரச அச்சகர் கங்கா சேனானி லியனகே தெரிவித்தார். (கு)

## அஜித் பெரேராவுக்கு ரணில் கடும் பேச்சு!

கொழும்பு, ஏப். 12

அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் அஜித் பி. பெரேராவை அலரி மாளிகைக்கு அழைத்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கடும்பேச்சுக் கொடுத்து எச்சரித்து அனுப்பியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் அரசதலைவர் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றியடையக் கூடிய வேட்பாளர் யார் என அஜித் பி பெரேரா முகநூலில் கருத்துக் கணிப்பு நடத்தியிருந்தார். அதற்காக இருவரின் புகைப்படங்களையும் முகநூலில் வெளியிட்ட அஜித் பி பெரேரா, எதிர்வரும் அரசதலைவர் தேர்தலில் யாருக்கு கூடுதல் வெற்றி வாய்ப்பு இருக்கிறதென்று கேட்டு கருத்துக்கணிப்பு வாக்கெடுப்புக்கு விட்டிருந்தார். அதில் 27 வீத மானவர்களின் ஆதரவு ரணிலுக்கும் 73 வீதமானோரின் ஆதரவு சஜித்துக்கும் கிடைத்திருந்தது. இந்தக் கருத்துக் கணிப்புத் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் பலர் கட்சித் தலைவர் ரணிலைத் தொடர்புகொண்டு அதிருப்தி வெளியிட்டிருந்தனர். அரசதலைவர் தேர்தலில் போட்டியிட ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே தீர்மானித்துள்ள நிலையில் இப்படியான செயற்பாடுகள் தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்பதால் அஜித் பெரேரா மீது நடவடிக்கை எடுக்குமாறு சிலர் ரணிலிடம் கூறியிருந்தனர். இந்தநிலையில், அண்மையில் அஜித் பி பெரேராவை அழைத்து கடும் பேச்சு கொடுத்த ரணில் கட்சிக்குள் குழு அமைக்க முயல வேண்டாமென்று தெரிவித்துள்ளார்.

"கட்சிக்குள் குழு அமைத்து தலைமைகளை உருவாக்க முடியாது என்பதைப் புரிந்துகொள்ளும். கட்சிக்குள் குழு அமைப்பவர்களுக்கு எதிர்காலம் இல்லை என்பதை சொல்லிவைக்க விரும்புகிறேன். இப்படியான வேலைகளை செய்யப்போய் கட்சியில் வகிக்கும் பதவிகளை இழந்துவிடவேண்டாம்." என்றும் ரணில் எச்சரிக்கை விடுத்தாரென்று தெரிவிக்கப்படுகிறது. (கு)

## யாப்பிலிருந்து நிறைவேற்றதிகாரம் முழுமையாக அகற்றப்படவில்லை

### அமைச்சர் அஜித் பி. பெரேரா தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 12



புதிய அரசமைப்பினூடாக அரசதலைவருக்கு வழங்கப்பட்டுள்ள நிறைவேற்று அதிகாரம் 19 ஆவது அரசமைப்புத் திருத்தத்தினூடாகப் பாதியாகக் குறைக்கப்பட்டுள்ள போதும், நிறைவேற்று அதிகாரம் யாப்பிலிருந்து முழுமையாக அகற்றப் பட வில்லை.

இவ்வாறு அமைச்சர் அஜித் பி. பெரேரா தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகாரம் தொடர்பில் எதிர்வரும் அரசதலைவர் தேர்தலில் கவனத்தில் கொள்ளப்படுமா என்பது தொடர்பில் விளக்கமளிக்கும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

நிறைவேற்று அதிகாரத்தை முழுமையாக நீக்குவதே ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு. எதிர்வரும் அரசதலைவர் தேர்தலுக்கான அறிக்கை தயாரிப்பின்போது நிறைவேற்று அதிகாரம் தொடர்பிலும் முக்கிய அவதானம் செலுத்தப்படாலாம்.

அரசதலைவரின் அதிகாரம் அரசமைப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும். அந்த நிலைப்பாட்டிலேயே ஐக்கிய தேசிய கட்சி உள்ளது. நிறைவேற்று அதிகாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டால் மாத்திரமே வினைத்திறன் மிக்க சகல சமூகத்தைச் சேர்ந்த மக்களுக்கு ஏற்ற ஆட்சியை உருவாக்க முடியும் என்று மேலும் தெரிவித்தார். (கு)

## தமிழ் இளைஞர்கள் மீது குருநாகலில் தாக்குதல்

### தொடருந்தில் ஆசனம் பிடிப்பதில் ஏற்பட்ட தர்க்கம் இப்படியானது

தொடருந்தில் பயணித்த தமிழ் இளைஞர்களை அதே தொடருந்தில் பயணித்த சிங்கள இளைஞர்கள் தாக்கினர் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. இதனால் குருநாகலில் தொடருந்து நிலையத்தில் பதற்றம் நிலவியது. தாக்குதலில் தமிழ் இளைஞர்கள் மூவர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் குருநாகலில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு கோட்டை தொடருந்து நிலையத்திலிருந்து புறப்பட்ட தொடருந்தில் இட நெருக்கடி காணப்பட்டது. ஆசனமொன்றைப் பிடிப்பது தொடர்பில் தமிழ் -சிங்கள இளை ஞர்களிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் வளர்ந்து பொல்காவெல பகுதியை அண்மிக்கையில் கைகலப்பாக மாறியது என்று தெரிவிக்கப்பட்டது.

சிங்கள தரப்பினர் குருநாகல் தொடருந்து நிலையத்தில் இறங்குவதற்கு ஆயத்தமானபோது அவர்களுக்கு ஆதரவாக பொல்லுகளுடன் சுமார் பத்து பேர் அடங்கிய கும்பல் அங்கு நின்றிருந்தது. அந்தக் குழு தமிழ் இளைஞர்களைச் சரமாரியாகத் தாக்கியது. தடுக்க முற்பட்ட தொடருந்துப் பாதுகாப்பு அலுவலர்களும் தாக்கப்பட்டனர். அவர்கள் பொலிஸாரை வரவழைத்தனர்.

மானிப்பாயைச் சேர்ந்த ஒருவர் உட்பட மூவர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவத்தால் தொடருந்து இரண்டு மணி நேரம் தாமதமாகவே புறப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (கு-222,103)

## 20ஆவது திருத்தம் தவறின் தமது வேட்பாளர் வருவார்

### ஜே.வி.பி. தெரிவிக்கிறது

கொழும்பு, ஏப். 12

20 ஆவது திருத்தத்தை நாடாளுமன்றில் அங்கீகரித்துக்கொள்ள முடியாமல் போனால் எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்குவோம்.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் பரப்புரைச் செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலவரம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

20ஆவது திருத்தத்தை நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அங்கீகரித்துக்கொள்ள ஆதரவளிக்கவேண்டும் என்று சகல கட்சிகளிடமும் நாங்கள் கேட்டிருக்கின்றோம்.

இது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் மகிந்த ராஜபக்ச அணியுடன் கலந்துரையாடினோம். இன்னும் சில கட்சிகளுடன் கலந்துரையாட இருக்கின்றோம். இருந்தபோதும் நாடாளுமன்றில் இந்தத் திருத்தச் சட்ட மூலத்துக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கி மக்கள் நிலைப்பாட்டை அறிய இடமளிக்கவேண்டும்.

பொதுத்தேர்தலுக்கு முன்னர் அரசதலைவர் தேர்தலுக்குச் செல்ல சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு விருப்பம் இல்லை. அதனால்தான் அரசதலைவரின் ஆட்சிக்காலம் ஆரம்பிக்கும் காலத்தை அறிய உயர்நீதிமன்றுக்குச் செல்ல முயற்சிக்கின்றனர் - என்றார். (கு)

## தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களின் ஆதங்கத்தையே வெளிப்படுத்தினேன்

### செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. கூறுகிறார்

வவுனியா, ஏப். 12

இந்த அரசு தமிழ் மக்களுக்கு எதனையும் செய்யவில்லை என்று கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் தமக்குள் வைத்துக் கொண்டிருக்கின்ற ஆதங்கத்தை, இந்த ஆண்டுக்கான வரவு-செலவுதிட்டத்துக்கு ஆதரவளிக்காததன் மூலமாக, நான் ஒருவன் வெளிப்படுத்தியிருக்கிறேன்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியா உக்கிளாங்குளம் பகுதியில் அண்மையில் நடைபெற்ற மகளிர் தின நிகழ்வில் உரையாற்றும்போதே மேலும் தெரிவித்ததாவது:

மகிந்த ராஜபக்ச அரசு ஜனநாயகத்தைப் புறந்தள்ளி திடீரென்று முளைத்து க் கொண்டது. இரண்டு விடயங்களில் நாங்கள் சாதனை படைத்துள்ளோம். ஒன்று அரசதலைவரைத் தெரிவு செய்தது. மற்றொன்று திடீரென அரசதலைவரால் உருவாக்கப்பட்ட ஒரு அரசைத் தோற்கடித்தது. அந்தப் பெருமை தமிழ் மக்களையே சாரும்.

அபிவிருத்தி இனப்பிரச்சினை இரண்டும் நேர்கோட்டில் பயணிக்க வேண்டும்.

நாம் அரசுக்கு வெளியிலிருந்து சில ஆதரவை வழங்குகின்றபோது மக்களின் சில தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக உள்ளது. மக்களுக்கு உணவு இல்லாமல் இருக்கின்றபோது அவர்களை நாம் போராட்டத்துக்கு அழைக்க முடியாது. நாம் மக்களுக்குப் பசியையும் போக்க வேண்டும் போராட்டத்தையும் நடத்த வேண்டும். ஆகவே இந்த இரண்டு செயற்பாடுகளையும் செய்கின்ற பொறுப்பில் நாம் கவனம் செலுத்துகின்றோம்.

ஒருமாத அரசில் இருந்த சிலர் அது கலைந்துபோன கோபத்தில் எம்மைத் திட்டித்தீர்க்கின்றனர். இன்று அரசியல் தீர்வு பொய்த்துபோய் இருக்கிறது. காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

ஜெனிவாத் தீர்மானத்திலே எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்கிறோம் என்று தெரிவித்த அரசு, தற்போது அதனைச் செய்ய முடியாது என்று சொல்கின்றது. இதை எல்லாம் எதிர்த்து எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் பேசினார்கள். அவர்களது உணர்வு ஆக்ரோசம் காரணமாக நான் வாக்களிக்கவில்லை. தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் மாநாட்டிலும் அந்த முடிவே எடுக்கப்பட்டிருந்தது. அந்த வகையில் நான் நிமிர்ந்து நிற்கின்றேன் - என்றார். (கு-110)

# தமிழர் பிரதிநிதித்துவத்தை ஒழிக்க துணையாக முடியா

## மீண்டும் மனோவுடன் இணைந்த ராஜேந்திரன் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 12

தலைநகரத் தமிழர் பிரதிநிதித்துவத்தை ஒழிக்க தனிப்பட்ட முரண்பாடுகளை முன்வைத்து திட்டமிடும் தனி நபர்களுடன் இணைந்து செயற்பட இனியும் நான் தயாராக இல்லை. தமிழ் மக்கள் இணையம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட குழுவினர், தலைநகரத் தமிழர் பிரதிநிதித்துவத்தை அழிக்கும் ஒரேயொரு நோக்கில் கூலிப்படையினராகவே செயற்பட்டனர். இதன் காரணமாகவே மனோ கணேசனின் தலைமையை ஏற்றுக்கொண்டு, எனது தாய் கட்சியான ஜனநாயக மக்கள் முன்னணிக்கு திரும்பி வர நான் முடிவு செய்துள்ளேன்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் கொழும்பு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எஸ். ராஜேந்திரன்.

ஜனநாயக மக்கள் முன்னணியிலிருந்து அண்மையில் பிரிந்து சென்ற ராஜேந்திரன், இன்று (நேற்று) அமைச்சர் மனோ கணேசனைச் சந்தித்து, ஜனநாயக மக்கள் முன்னணியில் மீண்டும் இணைந்துகொண்டார். இந்த நிகழ்வில் ராஜேந்திரன் மேற்கண்டவாறு கூறினார் என்று, ஜனநாயக மக்கள் முன்னணி நேற்று விடுத்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழர் செறிவாக வாழும் வடக்கு, கிழக்கு, மலையக மாவட்டங்களில் தமிழ் பிரதிநிதித்துவத்துக்கான அபாயம் இல்லை. அங்கே தமிழ் பிரதிநிதிகள் பலரை தெரிவுசெய்யும் அளவுக்குத் தமிழர் சனத்தொகை இருக்கிறது. ஆனால், கொழும்பு மாவட்டத்தில் அந்த நிலைமை கிடையாது. இங்கு ஒப்பீட்டளவில் தமிழர் சனத்தொகை குறைவு. எனவே இங்கே "கரணம் தப்பினால் மரணம் நிச்சயம்".

என்னை எமது கட்சியில் இருந்து வெளியேறும்படி வலியுறுத்தியவர்களின் உண்மை நோக்கம், ஒட்டுமொத்த தமிழினத்துக்கு எதிரானது என்பதை நான் அங்கு சென்ற ஒரு சில நாள்களிலேயே அறிந்துக்கொண்டதால் சில வாரங்களாக ஒதுங்கி இருந்தேன்.

சபை உறுப்பினர் சண். குகவரதன் தலைமையில் அமைக்கப்பட்ட தமிழ் மக்கள் இணையம் என்ற குழுவில், தலைவர் மனோ கணேசனை கொழும்பிலிருந்து ஒழிக்கும் நோக்கில் சதித்திட்டங்கள் தீட்டப்படுவதை அறிந்து அதிர்ச்சியுற்றேன். பேரினவாத மகிந்த ராஜபக்ச அணியைச் சேர்ந்தவர்களுடன் இரகசிய பேச்சு நடப்பதையும், தற்போதைய அரசைத் தோற்கடிக்கவும், கொழும்பில் தமிழர்களை வெறும் வாக்கு வங்கியாக மட்டும் வைத்திருக்கவும், பேரினவாதிகளுடன் கூட்டுச் சதித்திட்டத்தை, இந்த சதிகார கும்பல் தீட்டுவதையும் என் மனசாட்சியால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

ஜனநாயக மக்கள் முன்னணியில் இருந்து வெளியேற்றப்பட்ட மாகாண சபை உறுப்பினர் சண். குகவரதன், தனக்கெனச் சொந்தக்கொள்கைகள் இல்லாமல் பல அரசியல் வாதிகளை நாடிச்சென்று மனோ கணேசனை அழிக்க உதவி செய்ய முடியுமா என கோரிக்கை விடுத்த வண்ணம் இருந்தார். முதலில் அமைச்சர் ரவி கருணாநாயக்கவையும், முன்னாள் பிரதி அமைச்சரும், நியமன நாடாளுமன்ற உறுப்பினருமான பெ. இராதாகிருஷ்ணனையும் சந்தித்தனர். அவர்கள் அக்கறை காட்டாததால், கூலிப்படையினர், மகிந்த ராஜபக்ச அணியினரையும் தொடர்பு ஏற்படுத்தினர். மகிந்த அணியுடன் பேச்சு நடைபெற்றது - என்றுள்ளது. (த)

# புதிய அரசமைப்பும் காணாமற் போனது

## அமைச்சர் மனோ கணேசன் கூறுகிறார்

கொழும்பு, ஏப். 12

புதிய அரசமைப்பு வரைவு தற்போது காணாமல் போனோர் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பு காணாமல்போயுள்ளமை குறித்து ஓ.எம்.பி. அலுவலகத்தில் முறையிட முடியும்.

இந்த அரசை தமிழ் மக்கள் அமைத்ததன் நோக்கம் புதிய அரசமைப்பு வேண்டுமென்பதற்காகவே. புதிய அரசமைப்பு வராமைக்கு அரசு மாத்திரம் காரணமல்ல.

புதிய அரசமைப்பு வரைவு அதிகாரபூர்வமாகக் கைவிடப்படவில்லை. ஆனால், அதன் செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்படவில்லை - என்றார். (த)



# முதலீட்டுச் சபை தலைவராக யாபா நியமனம்

கொழும்பு, ஏப். 12

இலங்கை முதலீட்டுச் சபையின் புதிய தலைவராக மங்கள பி.பீ.யாபா நியமிக்கப்பட்டுள்ளார் என்று அரசதலைவர் ஊடகப் பிரிவு தெரிவித்தது. அரசதலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் அவர் நேற்று தனது நியமனக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டார்.

இதேபோன்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராக மூத்தபேராசிரியர் திருமதி சந்திரிக்கா விஜேரத்ன நியமிக்கப்பட்டுள்ளார். அவரும் நேற்று முற்பகல் அரசதலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து சிறிசேனவிடமிருந்து தனது நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டார். (த)

# கண்ணியத்துக்கு அப்பால் சென்று செயற்படுகின்றது ஆசிரியர் சங்கம்

## வடக்கு மாகாண கல்வி நிர்வாக சேவை தொழில் வாண்மையர் சங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 12

வடக்கு மாகாணக் கல்வி தொடர்பில் ஓர் ஆசிரிய சங்கம் அதன் கண்ணியத்துக்கு அப்பால் மோசமாகச் செயற்படுகிறது. இதற்கு எதிராக கல்வி அமைச்சின் செயலரும் உயரதிகாரிகளும் இணைந்து நடவடிக்கை எடுத்து, இத்தகைய இழிசெயல்கள் அரங்கேறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். கல்வி மேம்பாட்டுக்கான சுமுக சூழலை ஏற்படுத்த விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு, வடக்கு மாகாண கல்வி நிர்வாக சேவை தொழில் வாண்மையர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து சங்கம் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு மாகாணக் கல்வி தொடர்பில் அண்மைக் காலத்தில் ஒரு ஆசிரியர் சங்கம் கல்வி நிர்வாக அதிகாரிகளைக் குற்றஞ் சாட்டியும், உயர் அதிகாரிகள் செயற்பாடற்று இருக்கும் நிலையில் தாமே எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறோம் என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தும் வகையிலும் ஊடக அறிக்கைகளை வெளியிட்டு வருகிறது.

தீவக கல்வி வலயத்தில் இடம்பெற்ற நிர்வாகப் பிரச்சினைகளை மேலும் தூண்டும் வகையிலும், அங்குள்ள அதிகாரிகளுக்குக் களங்கத்தை ஏற்படுத்தும் அவதூறுகளைப் பரப்பும் வகையிலும் செயற்படுவதற்கு எமது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம். ஓர் ஆசிரியர் சங்கம் என்னும் கண்ணியத்துக்கு அப்பால் அதன் உத்தியோகபூர்வ முகப் புத்தகத்தில் கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளை மோசமான முறையில் அவதூறுக்குட்படுத்தி இருப்பது கண்டனத்துக்குரியது.

சமூகத்தில் தவறான கருத்துருவாக்கங்களை விதைக்கும் இந்தச் செயற்பாடுகள் வடக்கு மாகாணக் கல்வியை மேலுயர்த்த உதவப் போவதில்லை. மாறாக, அதிகாரிகளை மன உளைச்சலுக்கு உட்படுத்தி, அவர்களது வினைத்திறன் மிக்க செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தி, கல்வி வீழ்ச்சிக்கு வித்திடும் மறைமுக செயற்பாடாகவே கருதுகிறோம்.

நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பான விசாரணைகளை நாம் எதிர்க்கவில்லை. மாறாக, ஆசிரியர்களின் சம்பளம் உள்ளிட்ட தேவைகளைப் புறக்கணிக்கும் வகையில் சில அலுவலர்கள் நடந்து கொள்வதையும், ஊடகங்களில் ஒட்டுமொத்த கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளைக் கொச்சைப்படுத்தும் வகையில் கருத்துரைப்பது தொடர்பில் விசாரணைகள் செய்யப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்த விரும்புகிறோம்.

இது தொடர்பில் கல்வி அமைச்சின் செயலரும் உயரதிகாரிகளும் இணைந்து நடவடிக்கை எடுத்து, இத்தகைய இழிசெயல்கள் அரங்கேறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். கல்வி மேம்பாட்டுக்கான சுமுக சூழலை ஏற்படுத்த விரை ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம் - என்றுள்ளது. (த)

# அவசரமாக நாடு திரும்பிறாரா கோத்தா?

கொழும்பு, ஏப். 12

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள நீதிமன்றத்தில் இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ள போதும், முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச இன்று நாடு திரும்புவார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

திருமண நிகழ்வில் பங்கேற்பதற்காக, கோத்தபாய ராஜபக்ச கடந்தமாத இறுதியில் அமெரிக்கா சென்றிருந்தார். அங்கு அவருக்கு எதிராக இரண்டு சிவில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையில் கோத்தபாய ராஜபக்ச தொடர்பான பல்வேறு தகவல்கள் வெளியாகி வருகின்றன. அவர் திட்டமிட்டபடி, இன்று நாடு திரும்புவாரா என்ற கேள்விகளும் எழுந்தன.

இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்ட பின்னர், கோத்தபாய ராஜபக்சவிடம் இருந்து இது வரை எந்தக் கருத்தும் வெளியாகவில்லை. அவருடன் தொடர்பை ஏற்படுத்தி கருத்தைஅறிந்துகொள்ள ஊடகங்கள் முயற்சித்த போதும், அவரிடம் இருந்து பதில் கிடைக்கவில்லை.

இந்த நிலையிலேயே, திட்டமிட்டபடி கோத்தபாய ராஜபக்ச கொழும்பு திரும்புவார் என்றும், ராஜபக்ச குடும்பத்தினருடன் இணைந்து புத்தாண்டைக் கொண்டாடுவார் என்றும் அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறியுள்ளன.

அதேவேளை, டி.ஏ.ராஜபக்ச நினைவிடம் அமைக்கப்பட்டது தொடர்பான வழக்கில், முக்கிய சந்தேக நபராக குற்றம்சாட்டப்பட்டுள்ள கோத்தபாய ராஜபக்ச, இந்த வழக்கு விசாரிக்கப்படும் சிறப்பு மேல் நீதிமன்றத்தின் அனுமதியுடனேயே அமெரிக்கா சென்றிருந்தார்.

மார்ச் 26ஆம் திகதி தொடக்கம், ஏப்ரல் 12ஆம் திகதி வரை இரண்டு வாரங்களுக்கு மாத்திரமே, அவர் வெளிநாடு செல்வதற்கு நீதிமன்றம் அனுமதி அளித்திருந்தது.

இந்த நிலையில், அவரது வெளிநாட்டுப் பயணத் தடை இன்று மீண்டும் நடைமுறைக்கு வந்து விடும். அதற்கு முன்னர் அவர் நாடு திரும்பாது போ னால், நீதிமன்ற அவமதிப்புமற்றும் விசாரணையில் இருந்து தப்பிக்க முனைந்த குற்றச்சாட்டுகளை அவர் எதிர்கொள்ளுவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ.5)

# அவமதிக்கப்பட்ட பத்திரிகை ஆசிரியர்கள் விருது வழங்கல் விழாவை புறக்கணித்தனர்

கொழும்பு, ஏப். 12

முதல் முறையாக நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட அரச தலைவர் ஊடக விருது வழங்கும் விழாவில் நடந்த முறைகேடுகளால் இந்த நிகழ்வை புறக்கணித்து பல ஊடக ஆசிரியர்கள் வெளியேறிச் சென்றனர்.

ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்ட, தாக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக உரிய விசாரணை நடத்தப்படாத நிலையில், இந்த ஊடக விருது விழாவை புறக்கணிப்பதாக சுதந்திர ஊடக இயக்கம் அறிவித்திருந்தது. அதேவேளை, இந்த விருதுக்கு தெரிவு செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பாகவும், சர்ச்சைகள் ஏற்பட்டுள்ளன.

அத்துடன், நிகழ்வுக்கு அழைக்கப்பட்டிருந்த ஊடகங்களின் ஆசிரியர்கள் பலருக்கு உரிய மரியாதையும், அமருவதற்கான ஆசனங்களும் வழங்கப்படவில்லை. ஊடக விருது விழாக்களில் ஊடகங்களின் ஆசிரியர்களுக்கு முன்வரிசையில் ஆசன வசதிகள் செய்யப்படுவது வழக்கம்.

இந்த நிகழ்வில் பங்கேற்க ஊடக ஆசிரியர்களுக்கு சரியான இடம் ஒதுக்கப்படாமல், மாடத்தில் அமருமாறு கேட்கப்பட்டனர். இதனால் அதிர்ச்சியடைந்த ஊடக ஆசிரியர்கள் பலரும் நிகழ்வைப் புறக்கணித்து வெளியேறினார்.

இந்த தவறுகளுக்காக பின்னர் மன்னிப்புக் கோரியுள்ள அமைச்சரவை அந்தஸ்தில்லாத ஊடகத்துறை அமைச்சர் ருவன் விஜேவர்த்தன, இதுபற்றி விசாரணைகள் நடத்தப்படும் என்று தெரிவித்துள்ளார். (ஒ.5)

# விக்னேஸ்வரனை காப்பாற்றவா என் மீது சுரேஸ் பழிபோடுகிறார்?

## காட்டத்துடன் மாவை கேள்வி



யாழ்ப்பாணம், ஏப்.12

நொதேர்ன் பவர் நிறுவனத்தைக் கொண்டு வந்தவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் மாவை சேனாதிராசாவே என்று ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் கூறிய கருத்தை மாவை சேனாதிராசா வன்மையாகக் கண்டித்துள்ளார். யாரையோ காப்பாற்றுவதற்காகவே இத்தனை ஆண்டுகளின் பின்னர் சுரேஸ் இவ்வாறானதொரு பொய்யை அவிழ்த்து விடுகிறார் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

சுன்னாகம் தண்ணீர் தொடர்பில். அப்போது வடக்கு முதலமைச்சராக இருந்த சி.வி விக்னேஸ்வரன் வெளியிட்ட ஆய்வறிக்கையில் சுன்னாகம் நிலத்தடி நீரில் கழிவு ஒயில் மாசுக்கள். ஆபத்தான உலோகங்கள் இல்லை 'என்று கூறப்பட்டிருந்தது. எனினும் தண்ணீரில் ஒயில் கலந்துள்ளது என்று நீதிமன்று தீர்ப்பு வழங்கியுள்ளது. இந்த நிலையில் சுரேஸ் பிரேமச்சந்திரன் திடீரென மாவை சேனாதிராசா தான் ஒயில் கலப்பதற்கு காரணமாக இருந்த நொதேர்ன் பவர் நிறுவனத்தைக் கொண்டுவந்தார் என்ற குற்றச்சாட்டை முன்வைத்தார். அது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதில் உள்ளதாவது:

யாரும் இவ்வாறு இத்தனை ஆண்டுகளில் பேசியதில்லை. அவ்வாறு இருந்தால் நொதேர்ன் பவர் நிறுவனத்தின் மீது வழக்குத் தொடுத்தபோது. அல்லது நடந்து கொண்டிருக்கும் போது அந்த வழக்கில் இடையீடு செய்து இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்து தீர்ப்பு வழங்கக் கோரி வற்புறுத்தியிருக்கலாம். யாரைக் காப்பாற்ற இப்போது இத்தனை ஆண்டுகளின் பின்னர் இந்தக் குற்றச்சாட்டை வெளிப்படுத்துகிறார்கள். இதன் நோக்கம் என்ன?. பெரும்குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியிருந்த இத்தகையவர்களுக்கு மக்கள் மத்தியில் என்ன பெயர் சூட்டி அழைக்கின்றார்கள் என்பது வெளிப்படையானது. அந்த வார்த்தைகளைப் பாவிக்கும் வழக்கம் கொண்டவனல்ல நான். இவ்வாறு பொய்களைப் பரப்பி அரசியல் இலாபம் அடைய முயற்சிக்க வேண்டாம். சுரேஸ் பிரேமச்சந்திரன் நிதானமாக இருக்க வேண்டும் - என்றுள்ளது.

சுன்னாகம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் உள்ள கிணறுகளில் கழிவு ஒயில் கலந்திருந்தது. மக்கள் பலர் அது தொடர்பில் தங்களது கருத்துக்களையும் ஆதங்கங்களையும் வெளிப்படுத்தியிருந்தனர். அது தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அதையடுத்து மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். நிலத்தடி நீரில் கழிவுஒயில் கலந்தமைக்கு எதிராகப் போராடினார்கள். அப்போது வடக்கு மாகாண முதலமைச்சராக இருந்த சி.வி விக்னேஸ்வரன். மற்றும் விவசாய அமைச்சராக இருந்த ஐங்கரநேசன் ஆகியோர் அது தொடர்பில் ஆய்வில் ஈடுபட்டனர். நிபுணர்களை அழைத்து ஆராய்ந்தனர். அதன் பின்னர் சுன்னாகம் நிலத்தடி நீரில் கழிவு ஒயில் மாசுக்கள். ஆபத்தான உலோகங்கள் இல்லை என்று அசால்டாக அறிக்கை வெளியிட்டார் கள். அது தொடர்பில் அப்போது மாகாண எதிர்க்கட்சித் தலைவராக இருந்த சி. தவராசா "மக்களது போராட்டத்தை முடக்குவதற்காக விக்னேஸ்வரன், ஐங்கரநேசன் இணைந்து ஆய்வு செய்வதாகக் கூறி பெருமளவு நிதியை வீணாக்குகின்றனர்.

வெளிநாடுகளிலிருந்து நிபுணர்களை அழைத்து வந்துள்ளோம் என்றெல்லாம் படம் காட்டுகிறார்கள் இவர்களின் அறிக்கைகள் எல்லாம் பொய் என்று பலமுறை கூறியிருந்தார்.

இந்த விடயம் தொடர்பான வழக்குமல்லாகம்நீதிமன்றில் நடைபெற்றுவந்தநிலையில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்றுஉயர்நீதிமன்றுதீர்ப்பு வழங்கியுள்ளது. (எ-21)



# தமிழின தனித்துவத்தை அழிக்க எங்கேயோ திட்டமிடப்படுகிறது!

## இதன் ஆரம்பம்தான் கஞ்சா பாவனை என்று சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு

கிளிநொச்சி, ஏப். 12

கஞ்சா உட்பட பல வகைப் போதைப் பொருள்கள் பிறதேசங்களிலிருந்து எமது பகுதிகளுக்குக் கொண்டுவரப்பட்டுஎமது இளையதலைமுறையினரை இலக்கு வைத்து விற்கப்படுகின்றன. இது எமது இனத்தின் தனித்துவத்தை அழிப்பதற்காக எங்கேயோ திட்டமிடப்பட்ட செயற்பாடு என்பது புலனாகின்றது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி பாரதிபுரம் சிறிமுத்துமாரி அம்மன் ஆலய அன்னதான மண்டபத் திறப்பு நிகழ்வு நேற்றுமுற்பகல் நடைபெற்றது. அதில் முதன்மை விருந்தினர் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:

உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் எமது இன விடுதலைக்காகப் போராடுகின்ற இனமாகக் காணப்படுகின்ற போதிலும் எமக்கென்றொரு தனித்துவமான பண்பாட்டோடும் கலாசாரத்தோடும் உலகத்தவர்கள் விரும்பும் வகையில் நல்ல நெறிமுறைப்படி வாழ்பவர்கள்தான் நாம். எமக்குரிய தனிமனித ஒழுக்கத்தைக் கட்டிக் காத்து எமது இனத்தின் பெருமையை உலகுக்கே முன்னுதாரணமானவர்கள்தான் நாம். அறவழியில் வாழ்ந்து உலகுக்கே நல்லறங்களைப் போதித்தவர்கள் நாம். எமது இனத்தின் பெருமையை வரலாற்று ஆவணங்கள் இன்றும்பறைசாற்றிநிற்கின்றன. ஆனால் தற்காலத்தில் எமது இளைய தலைமுறையிடத்தில் ஒழுக்க நெறி பிறழ்வான, எமது தனித்துவத்தை சிதைத்தழிப்பதற்கான செயற்பாடுகள் வேண்டுமென்றே விதைக்கப்படுகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

எமது இளைய தலைமுறையினர் எமது வரலாற்றை மறந்து நாம் யார் என்பதை மறந்து செயற்படுவது எமது இனத்தை மிகமோசமான, ஆரோக்கியமற்ற ஒரு நிலைக்குக் கொண்டு செல்லும்.

எனவே எமது இளையோர் தான் எமது இனத்தின் தனித்துவத்தைக் கட்டிக் காத்து எமது இன அடையாளங்களைப் பேணி தனிமனித ஒழுக்க விழுமியங்களைப் பின்பற்றி எமது இனத்துக்கு நல் வழிகாட்டிகளாகத் திகழ வேண்டும். அதற்கு ஆலயங்கள், அறநெறிப் பாடசாலைகள், அறத்தில் மேம்பட்ட பெரியார்கள் அவர்களுக்கு சிறந்த ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்கி அவர்களை நல்வழிப்படுத்துவதுடன் எமது தனித்துவங்களையும் பேணி எமது இலக்கு நோக்கிய எமது விடுதலையை அடைவதற்கு பலம் சேர்க்க முடியும் - என்றார். (கு-426)

# முதியோருக்கு ஆதரவு வழங்குமாறு கிழக்கு ஆளுநரிடம் வேண்டுகோள்

மட்டக்களப்பு, ஏப்.12

வாகரைப் பிரதேசத்தில் அநாதரவான நிலையில் மர நிழல்களிலும் மத வழிபாட்டு இடங்களிலும் காலங்கழிக்கும் முதியோருக்கு அபயக் கரம் நீட்டுமாறு கிழக்கு மாகாண ஆளுநரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக வாகரை பிரதேச முதியோர் சம்மேளனப் பொதுச் செயலர் ரீ.ஜீ. குருகுல சிங்கம் நேற்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

வாகரைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள முதியோர் கடந்த கால போரினாலும் இயற்கை இடர்களினாலும் பாதிக்கப்பட்டு தற்போது வரை இன்னல்களைச் சந்தித்து வருகிறார்கள். இந்த விடயங்கள் குறித்து கிழக்கு மாகாண ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளோம். பிள்ளைகளால் கைவிடப்பட்ட பெற்றோரும் தமது அன்றாட உணவுக்காக கையேந்துவதோடு அவர்கள் நிம்மதியாக கால்நீட்டி கண்ணயர்ந்து உறங்குவதற்குக் கூட அமைதி யான இடமின்றி அலைந்து திரிகின்றார்கள்.

வாகரைப் பிரதேசத்தில் அநாதரவான இத்தகைய முதியோர் சுமார் 50 பேருக்கு அபயமளிக்கும் இடங்களாக நிழல்தரும் மரங்களும், மத வழிபாட்டிடங்களும் உள்ளன.

ஆனால், மழை, வெள்ளம், குளிர் வெயில் காலங்களில் இவர்களது நிலமை பரிதாபகரமானதாக உள்ளது.

அதனால், இத்தகைய முதியோருக்கு ஆற்றுப்படுத்தல் பராமரிப்புக்கள் தேவைப்படுகின்றன.

முதியோர் பராமரிப்பு இல்லமொன்றின் தேவை வாகரை யில் உணரப்பட்டுள்ளது.

தங்களது கடைசிக் காலத்தில் ஆறுதலை எதிர்பார்க்கும் அநாதரவான முதியோருக்கு ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் அபயக் கரம் நீட்டும் திட்டங்களுக்கு ஆதரவளிப்பார் என நம்புகின்றோம்' - என்றார். (க-46)

ஞாயிறு தினங்களில் காலை 8 மணி முதல் 11 மணி வரையான நேரத்தில் வழமையாக ஆன்மீக கல்வி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. இந்த நேரங்களில் பிரத்தி யேகமான பாட வகுப்புகள் தொடர்ந்து பல கல்வி நிறுவனங்களிலும் வீடுகளிலும் பாடசாலைகளிலும் நடைபெற்று வருவதால், மாணவர்கள் அறநெறி வகுப்புகளுக்கு சமூகம் அளிக்க முடியாத இக்கட்டான சூழ் நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

# ஆன்மிக வகுப்புகளுக்கு முக்கியத்துவம் வழங்குக

## மன்னார் அறநெறிப் பாடசாலைகளின் இணையத்தின் தலைவர் கோரிக்கை

மன்னார், ஏப்.12

ஆன்மிக வகுப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். இல்லாதுவிடில் எதிர்காலச் சமூகத்தினர் வன்முறைப் போக்கு கொண்டவர்களாகவும், மதங்களை மதிக்க தெரியாதவர்களாகவும் கலை கலாசார பண்பாட்டு விழுமியங்கள் இல்லாதவர்களாகவும் மாறிவிடுவார்கள்.

இவ்வாறு மன்னார் மாவட்ட அறநெறிப் பாடசாலைகளின் இணையத்தின் தலைவர் சிவஸ்ரீ மஹா தர்ம குமாரக் குருக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று நடைபெற்ற மன்னார் மாவட்ட அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான சிறப்புக் கலந்துரையாடலில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது:

ஞாயிறு தினங்களில் காலை 8 மணி முதல் 11 மணி வரையான நேரத்தில் வழமையாக ஆன்மீக கல்வி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

இந்த நேரங்களில் பிரத்தியேகமான பாட வகுப்புகள் தொடர்ந்து பல கல்வி நிறுவனங்களிலும் வீடுகளிலும் பாடசாலைகளிலும் நடைபெற்று வருவதால், மாணவர்கள் அறநெறி வகுப்புகளுக்கு சமூகம் அளிக்க முடியாத இக்கட்டான சூழ் நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கல்வித் துறையிலும் எமது மாவட்டம் இன்னும் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்பதும் இது காலத்தின் தேவை என்பதும் மறுப்பதற்கில்லை. ஆனாலும் ஆன்மீக கல்வி இல்லாத ஒரு சமூகம் தமது சமயத்தை அறியாது சமய அனுட்டானத்தை பேணாது விடின் எதிர்காலத்தில் வன்முறைப் போக்கு கொண்டவையாகவும் மதங்களை மதிக்க தெரியாதவர்களாகவும், கலை கலாசார பண்பாட்டு விழுமி யங்கள் இல்லாத ஒரு சமூகமாக மாறி விடும் அபாய நிலை ஏற்படும். எவ்வளவு தான் கல்வியில் முன்னேறி உயர் நிலைக்கு வந்தாலும் ஆன்மீக சிந்தனை இல்லையெனில் வாழ்வு முழுமை பெறாது. ஞாயிற்றுக்கிழமை தினங்களில் பிரத்தியேக வகுப்புக்களை காலை 11மணி வரை நிறுத்தி ஆன்மீக கல்விகளுக்கு முக்கியத்துவம் வழங்கும் நோக்கில் செயல் பட வேண்டும் என நாம் அன்பாகவும் வினயமாகவும் கேட்டு நிற்கின்றோம். - என்றார். (எ-56)




பிரிட்டனில் உள்ள ஈக்வடார் தூதரகத்தில் தஞ்சம் அடைந்திருந்த விக்கிலீக்ஸ் நிறுவுனர் ஜூலியன் அசாஞ்சேவை பிரிட்டன் பொலிஸார் லண்டனில் நேற்றுக் கைது செய்தனர். கடந்த ஏழு வருடங்களாக அசாஞ்சே கடந்துவந்த பாதை குறித்து ஒறிப்படக் கோர்வையாக வெளியிட்டுள்ளது பன்னாட்டு உடகமான ரொயிட்டர்ஸ். (ம)

## காணி...

கடற்படையினர் அந்தப் பகுதியில் உள்ள 11 பேருக்குச் சொந்தமான 18 ஏக்கர் 1 றூட் 10 பேர்ச்சஸ் காணியை ஆக்கிரமித்து அதில் முகாமிட்டுள்ளனர். குறித்த படைமுகாம் அமைந்துள்ள காணியை நிரந்தரமாக சுவீகரித்து படை முகாமைப் பரவலாக்குவதற்கான நடவடிக்கைகளை கடற்படையினர் மேற்கொண்டுள்ளனர்.

இந்த நடவடிக்கையில் முதற்கட்டமாக குறித்த காணியை சட்ட ரீதியில் சுவீகரிப்பதற்கான முன்னெடுப்புக்களை கடற்படையினர் மேற்கொண்டு வருகின்றனர். இதன்படி குறித்த காணிகளை (நேற்று) சுவீகரிக்கவுள்ளதாகவும், அதற்கான நில அளவை நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாகவும் நில அளவை திணைக்களத்தால் காணி உரிமையாளர்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த விடயத்தை நில அளவைத் திணைக்களத்தினர் அண்மையில் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் பகிரங்கமாகக் கூறியிருந்தனர். தாங்கள் நில அளவை செய்யவுள்ள காணிகள் தொடர்பான விவரங்களையும் அவர்கள் முன்வைத்தனர்.

அந்தப் பட்டியல் தொடர்பில் ஆராய்ந்து அந்தக் காணிகளின் தேவை தொடர்பில் பிரதேச செயலர்களை அறிக்கை வழங்குமாறு இணைத் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கோரியிருந்தார். அதனால் சுவீகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ள காணிகள் தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கும் வரை சுவீகரிப்புப் பணிகளை இடைநிறுத்துவது எனத் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. அந்தத் தீர்மானத்தை மீறி நில அளவைத் திணைக்களத்தினர் தாங்கள் கூறியது போல் காணிகளை அளவிடும் நோக்குடன் நேற்று மண்டைதீவுக்குச் சென்றனர். எனினும் அங்கு மக்கள் திரண்டு நில அளவைத் திணைக்களத்தின் வாகனத்தை முற்றுகையிட்டனர். வெளியேறுமாறு கோசமிட்டனர். அரசியல் வாதிகளும் அங்கு கூடினர்.

காணிகளை அளவிட அனுமதிக்கமாட்டோம் என்று எழுத்தில் தரும்படி நிலஅளவைத் திணைக்களத்தினர் கேட்டுக் கொண்டனர். காணி உரிமையாளர்கள் அத்தனை பேருடைய கையெழுத்துக்களுடன் சம்பவ இடத்தில் வைத்தே அந்த விவரம் நில அளவைத் திணைக்களத்தினரிடம் வழங்கப்பட்டது. இதையடுத்து காணி அளவீட்டு முயற்சி முறியடிக்கப்பட்டது.

எனினும், குறித்த காணி அளவீட்டு முயற்சி அவற்றைச் சுவீகரிக்கும் நோக்கில் இடம்பெறவில்லை. அரச, தனியார் காணிகளை அளவிடவே முனைந்தோம் என்று கடற்படைப் பேச்சாளர் இசுறு சூரிய பண்டார தெரிவித்தார். (ம-21,26)

## அசாஞ்சே...

யன் அசாஞ்சே அமெரிக்கா உள்ளிட்ட பல் வேறு நாடுகளின் ரகசியங்களை இணையத் தளங்களில் வெளியிட்டு அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியவர். பாதுகாப்பு ரகசியங்களை வெளியிட்ட அசாஞ்சேவைக் கைது செய்ய அமெரிக்கா முயற்சி மேற்கொண்டு வந்தது. ஆனால், அவர்களிடம் சிக்காமல் அசாஞ்சே லண்டனில் உள்ள ஈக்வடார் தூதரகத்தில் தஞ்சம் அடைந்தார்.

ஜூலியன் அசாஞ்சேவுக்கு ஈக்வடார் நாட்டு குடியுரிமை வழங்கப்படும் என அந்த நாட்டு அரசு அறிவித்தது.

இந்த நிலையில், லண்டனில் உள்ள ஈக்வடார் நாட்டு தூதரகத்தில் தஞ்சம் அடைந்திருந்த விக்கிலீக்ஸ் நிறுவனர் ஜூலியன் அசாஞ்சேவை பிரிட்டன் பொலிஸார் நேற்றுக் கைது செய்தனர். ஈக்வடார் அரசு அவருக்கு அளித்து வந்த பாதுகாப்பை திரும்பப்பெற்ற நிலையிலேயே அவர் கைது செய்யப்பட்டார். (ம)

## வடக்கில்...

வடக்கு - கிழக்கு மாகாணங்களின் நில விடுவிப்பு சம்பந்தமான தற்போதைய நிலமை, மற்றும் தீர்வுகள்பற்றி மக்கள் பிரதிநிதிகள், படையினர் இடையில் கடந்த 3ஆம் திகதி இடம்பெற்ற வடக்கு - கிழக்கு அபிவிருத்திச் செயலணியில் ஆராயப்பட்டது. இதன்போதே குறித்த அளவை அரச தலைவர் தெரிவித்தார். எனினும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மட்டும் 2 ஆயிரத்து 642 ஏக்கர் நிலம் படையினரின் வசம் உள்ளது. மன்னார் மாவட்டத்தில் 211 ஏக்கர் நிலம் படையினரின் வசம் உள்ளது. இதேபோன்று கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரத்து 132 ஏக்கர் நிலமும், முல்லைத்தீவில் 101 ஏக்கர் தனியார் நிலமும் படையினரிடம் உள்ளதோடு வவுனியா மாவட்டத்தில் 56 ஏக்கர் தனியார் நிலம் படையினரிடம் உள்ளது. இதன்படி வடக்கில் மட்டும் 4 ஆயிரத்து 142 ஏக்கர் நிலம் படையினரிடம் இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது. (ம-105)

## கோத்தாவினது...

மேலதிகமாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சையும், அமைச்சர் வஜிர அபேவர்த்தன வைத்திருக்கிறார். உள்நாட்டு அலுவல்கள் அமைச்சே, குடியுரிமை தொடர்பான விவகாரங்களைக் கையாளுகிறது. குடியுரிமை வழங்குதல், இரட்டைக் குடியுரிமை வழங்குதல் ஆகியவற்றைத் தீர்மானிக்கும் பொறுப்பு இந்த அமைச்சுக்கே இருக்கிறது.

கோத்தபாய ராஜபக்ச அமெரிக்கக் குடியுரிமையைக் கைவிட்டு விட்டு, இலங்கைக் குடியுரிமையைப் பெற்றால்தான், அதிபர் தேர்தலில் போட்டியிட முடியும்.

அமெரிக்க குடியுரிமையைக் கைவிட விண்ணப்பித்துள்ள கோத்தபாய ராஜபக்ச, அடுத்து இலங்கைக் குடியுரிமையை மாத்திரம் கொண்டுள்ளார் என்பதை, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் மூலம் உறுதி செய்ய வேண்டும். இந்த நிலையிலேயே, உள்நாட்டு அலுவல்களுக்கான அமைச்சராக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவை நியமிக்கஐக்கியதேசியக்கட்சிதீர்மானித்துள்ளது.

இதனால், கோத்தாபய ராஜபக்சவின் குடியுரிமை விவகாரத்தில் சரத் பொன்சேகா தலையீடு செய்யவோ, செல்வாக்குச் செலுத்தவோ வாய்ப்புகள் இருப்பதாகக் கருதப்படுகிறது.

ஏற்கனவே அமெரிக்காவின் நீதிமன்ற வழக்குகளை எதிர்கொண்டுள்ள கோத்தபாய ராஜபக்சவுக்கு, இலங்கையிலும் குடியுரிமையை உறுதிப்படுத்துவதில் முட்டுக்கட்டைகள் ஏற்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

## பாதுகாப்புச்...

மண்டைதீவில் நேற்றையதினம் இடம்பெற்ற காணி அளவீட்டு முயற்சி கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனால் பாதுகாப்பு அமைச்சின் செயலரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. இதன்போது மண்டைதீவு உட்பட யாழ்ப்பாணத்தில் மட்டும் 45 இடங்களில் படையினருக்கு நிலம் சுவீகரிக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகள் குறித்தும் இரா.சம்பந்தன் பாதுகாப்புச் செயலரின் கவனத்துக்குக் கொண்டு சென்றார். இதையடுத்தே எதிர்வரும் 29ஆம் திகதி இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

இந்தச் சந்திப்பு இடம்பெறும் வரையில், அதாவது எதிர்வரும் 29ஆம் திகதி வரை வடக்கில் காணி சுவீகரிப்பு எதுவும் இடம்பெறக்கூடாது என்று சம்பந்தனால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை பாதுகாப்பு அமைச்சின் செயலரால் ஏற்கப்பட்டது. (ம-105)

## ஊர்காவற்றுறை...

இடத்தில் நின்ற ஊறகாவற்றுறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகரிடம் சம்பவம் தொடர்பில் விசாரித்தார். நாடாளுமன்ற உறுப்பினருக்கு தனது வாகனத்தில் இருந்தவாறே பதில் வழங்கியுள்ளார் ஊர்காவற்றுறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர். அவரை பேச்சு நடத்துவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அழைத்தபோது நீதிமன்றுக்குச் செல்ல வேண்டியுள்ளது என்று தெரிவித்துவிட்டு அவர் அங்கிருந்து சென்றார். இவை தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட பொ்லிஸ் அத்தியட்சகருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த பகுதியில் குறைந்திருந்த மாடு கடத்தல்கள் அண்மைக்காலமாக மீண்டும் அதிகரித்து வருகின்றமை தொடர்பிலும் நாடாளுமன்ற உறுப்பினரால் பொலிஸ் அத்தியட்சகரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. (ம)

## உள்நாட்டு...

செய்ய ஐ.தே.க. ஏற்கனவே முடிவு செய்திருந்தது.

இதன்போது பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு ஒதுக்க முடிவு செய்யப்பட்ட அமைச்சுக்களுக்கு மேலதிகமாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுப் பதவியையும் வழங்க நேற்றைய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. தனிப்பட்ட பயணமாக ஜப்பானுக்குச் செல்லும் மைத்திரிபால சிறிசேன நாடு திரும்பிய பின்னர், பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவை இந்தப் பதவிக்கு நியமிக்குமாறு பரிந்துரைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம)

## கோத்தாவுக்கு...

கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக அமெரிக்காவில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. சித்திரவதைகளை அனுபவித்த நூற்றுக்கு அதிகமானோர் பிரிட்டனிலும் புலம்பெயர்ந்து வாழ்கிறார்கள். அந்தவகையில் சித்திரவதைகள் தொர்டபில் பிரிட்டனிலும் வழக்குகளைத் தொடர்வதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளனவா என லண்டனில் இடம்பெற்ற ஊடக மாநாட்டினைத் தொடர்ந்து இடம்பெற்ற நேர்காணலில் யஸ்மின் சூக்காவிடம் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு பதில் அளிக்கும்போதே அவர் மேற்குறிப்பிட்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'நிச்சயமாக அதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன. ஏனெனில் சித்திரவதைகள் என்பது பன்னாட்டு ரீதியில் தடைசெய்யப்பட்ட குற்றச்செயலாகவே கருதப்படுகின்றது. பிரித்தானியாவிலும் அமெரிக்காவிலும் இவ்வாறு வழக்கு தொடர்வதில் உள்ள வித்தியாசம் என்னவெனில் அமெரிக்காவானது சித்திரவதைக்கு உள்ளானவர்களை பாதுகாப்பதற்கு என தனியான சட்டம் ஒன்றினை நடைமுறைப்படுத்தியுள்ளது.

அந்த சட்டத்தின்படி வழக்கு தொடர்பவர்கள் எவராக இருந்தாலும் அவர்கள் அந்த நாட்டில் அல்லாது வேறு எந்த நாட்டில் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தாலும் அவர்கள் அந்த சட்டத்தின் கீழ் வழக்கினை தொடர முடியும். ஆயினும் சித்திரவதையை செய்தவர் மீது அழைப்பாணையை வழங்க முடியுமான பட்சத்தில் மாத்திரமே வழக்கை தொடர முடியும்.

பிரிட்டனிலும் இவ்வாறான பல வெற்றிகரமான வழக்குகள் நடைபெற்றுள்ளன. உதாரணமாக நேபாளத்தைச் சேர்ந்த கேணல் தரநிலை இராணுவ வீரர் குணால் லாமா என்பவருக்கு எதிராக பிரிட்டனில் வழக்குத் தொடரப்பட்டு அவர் பிரிட்டனுக்கு வந்தபோது கைது செய்யப்பட்டார்.

இறுதியில் போர்க் குற்றங்கள் குறித்து அவர் தப்பித்துக்கொண்டாலும் அவரது வழக்கின் போது ஏராளமான கேள்விகளை வழக்கறிஞர்கள் முன்வைத்தார்கள். மேலும் சித்திரவதைகள் தொடர்பாக அதனை தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டிய கட்டாயம் எல்லா நாடுகளுக்கும் உள்ளது. அதேபோல் சித்திரவதைகளுக்கு பொறுப்பானவர்களை தண்டிக்கும் கடப்பாடும் அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீட்டைப் பெற்றுக்கொடுக்கும் கடமையும் அந்த நாடுகளுக்கு உள்ளது. ஆயினும் இவ்வாறான வழக்குகளில் அரசியல் தலையீடுகள் இருப்பதனைத் தவிர்க்க முடியாது - என்றார். (ம)

# வென்றார் பெஞ்சமின் நெதன்யாகு!

## 5ஆவது தடவையாகவும் தலைமை அமைச்சரானார்

ஜெருசலோம்,ஏப்.12

இஸ்ரேலில் நடந்த பொதுத்தேர்தலில் வெற்றி பெற்றதன் மூலம் தலைமை அமைச்சராகத் தொடர்ந்து பதவி ஏற்க உள்ளார் பெஞ்சமின் நெதன்யாகு. இது அவரது ஐந்தாவது தொடர் வெற்றியாகும்.



இஸ்ரேலில் பொதுத் தேர்தலுக்கான வாக்குப்பதிவுகள் கடந்த செவ்வாய்க்கிழமையுடன் முடிவடைந்தன. தொடர்ந்து தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டன. இந்தத் தேர்தலில் முன்னாள் இராணுவத் தலைவரான-பென்னி கண்ட்ஸின் புளூ. வெள்ளைக் கூட்டணி. தற்போதைய தலைமை அமைச்சர் பெஞ்சமின் நெதன்யாகு என இரண்டு தரப்புகளுக்கு இடையே கடுமையான போட்டி நிலவியது.

இந்த நிலையில் வாக்கு எண்ணிக்கையின் முடிவில் பெஞ்சமின் நெதன்யாகு வென்றார். 120 இடங்களில். 65 இடங்களில் நெதன்யாகுவின் லுகுட் கட்சி மற்றும் கூட்டணிக்,கட்சிகள் வென்று ஆட்சியைப் பிடித்தன. இதன் மூலம் 5ஆவது முறையாக இஸ்ரேலின் தலைமை அமைச்சராகப் பதவியேற்க உள்ளார் பெஞ்சமின் நெதன்யாகு. மேலும் இஸ்ரேலின் நீண்ட காலத் தலைமை அமைச்சர் என்ற சாதனையையும் அவர் படைத்திருக்கிறார். தேர்தலில் வெற்றி பெற்றது குறித்து நெதன்யாகு கூறும் போது. "இது வலதுசாரிகளின் அரசுதான். ஆனால் நான்தான் தலைமை அமைச்சராக இருக்கப் போகிறேன். நான் அனைத்து மத மக்களின் தலைமை அமைச்சராக இருப்பேன்" என்று தெரிவித்தார். இதற்கு முன்னர் தான் மீண்டும் இஸ்ரேலின் தலைமை அமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டால் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்கு பேங்க் பகுதியிலுள்ள யூதக் குடியேற்றங்கள் இஸ்ரேலுடன் இணைக்கப்படும் என்று பெஞ்சமின் நெதன்யாகு தெரிவிருந்தார். இது பன்னாட்டுச் சட்டதிட்டங்களுக்கு முரணானது என்பது குறிப்பிடத்தக்கது.

# பிறேசிலில் கொட்டித் தீர்த்தது மழை கடும் வெள்ளத்தால் 9 பேர் சாவு

பிறேசிலியா,ஏப்.12

பிறேசிலின் ரியோ டீ ஜெனிரோ நகரில் கடந்த இரண்டு நாள்களாக இடைவிடாத கடும் மழை பெய்தது. அதன் காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி 9 பேர் சாவடைந்தனர். 24 மணி நேரத்தில் மட்டும் 31 சென்ரிமீற்றர் அளவுக்கு அங்கு மழை பெய்துள்ளது. இதனால் அங்கு வெள்ளக்காடாகிய பிரதேசங்களில் மக்கள் தத்தளிக்கின்றனர். நூற்றுக்கண்க்கான வீடுகள் வெள்ளத்தில் மூழ்கின.

வீதிகளில் மூன்று அடி வரையான உயரத்துக்குத் தண்ணீர் தேங்கி நிற்கிறது. போக்குவரத்துப் பாதிக்கப்பட்டு உள்ளது.

அத்தோடு மழையின் போது பலத்த காற்று வீசியது. இதனாலும் பாதிப்புகள் ஏற்பட்டன. மரங்கள் வேரோடு சாய்ந்தன. மின் கம்பங்கள் சரிந்து விழுந்தன.

இதனால் மின் இணைப்பு, தகவல் தொடர்பு உள்ளிட்டவையும் துண்டிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பல இடர்களால் பிறேசிலில் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.







# துப்பாக்கிச் சட்டத்தில் திருத்தம் தீர்மானம் நிறைவேற்றியது நியூஸி.

வெலிங்டன்,ஏப்.12

துப்பாக்கிச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான தீர்மா னத்தைத் தனது நாடாளுமன்றத்தில் முன்வைத்து நிறைவேற்றியது நியூஸிலர்ந்து.

நியூஸிலாந்தின் கிறைஸ்ட்சர்ச் நகரில் உள்ள 2 மசூதிகளில் கடந்த மாதம் ஆயுததாரிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டின் போது அங்கு தொழுகையில் ஈடுபட்டிருந்த 50 பேர் கொல்லப்பட்டனர். உலகையே அதிர்ச்சிக்குள்ளாக்கிய இந்தத் தாக்குதலுக்குப் பின் நியூஸிலாந்தில் துப்பாக்கிகளின் பயன்பாடு மற்றும் விற்பனையில் கடும் கட்டுப்பாடுகள் கொண்டு வர வேண்டும் என்கிற கோரிக்கை வலுத்தது.

அதன்படி துப்பாக்கிச் சட்டத்தில் சீர்திருத்தம் கொண்டுவரப்படும் என நியூஸிலாந்தின் தலைமை அமைச்சர் ஜெசிந்தா உறுதி அளித்தார்.

இதற்கிடையில் அங்கு தானியங்கித் துப்பாக்கிகள் மற்றும் இராணுவப் பயன்பாட்டுத் துப்பாக்கி களுக்கு உடனடித் தடை விதிக்கப்பட்டது. இந்த நிலையிலேயே துப்பாக்கிச் சட்டத் சீர்திருத்தத் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது நியூஸி லாந்தின் நாடாளுமன்றம்.

# கண்ணுக்குள் புகுந்த தேனீக்கள் பாதிப்பு இன்றி அகற்றப்பட்டன

தைபே,ஏப்.12



பெண் ஒருவரின் கண்ணுக்குள் புகுந்த 4 தேனீக்கள். கண்ணுக்கு எந்தப் பாதிப்பும் இன்றி நூதனமாக எடுக்கப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தாய்வானில் நடந்தது. தாய்வானைச் சேர்ந்த ஹீ(வயது29) எனும் பெண்ணின் கண்ணுக்குள்ளே புகுந்திருந்த தேனீக்களே இவ்வாறு எடுக்கப்பட்டன. இது குறித்து அவருக்குச் சிகிச்சையளித்த மருத்துவர் கூறுகையில், "கண்களில் ஏதோ பூச்சியின் கால்கள் இருப்பது போல் தெரிந்தது. நுணுக்குக் காட்டியால் பார்த்துக் கொண்டு எடுத்துவிடலாம் என முயற்சித்தேன். ஆனால், அவருடைய கண்ணுக்குள் 4 தேனீக்கள் இருந்தன. அதைக் கண்டு பெரும் அதிர்ச்சி அடைந்தேன். பின்னர் மெதுவாக அவரது கருவிழிகளுக்கு எவ்வித பாதிப்புமின்றி தேனீக்களை எடுத்தேன். அவை உயிருடன் இருந்தன. உலகிலே இது தான் முதல் நிகழ்வு என நினைக்கிறேன்" என்றார்.


# கருந்துளைகளை ஒளிப்படம் எடுத்துச் சாதனை


26ஆயிரம் ஒளியாண்டுகள் தொலைவில் உள்ள சஜிடேரியஸ்யுமூ மற்றும் 6 கோடி ஒளியாண்டுகள் தொலைவில் உள்ள ஆ87எனும் கேலக்சியின் மீ ராட்சசக் கருந்துளை ஆகியவற்றை ஒளிப்படம் எடுத்துச் சாதனை படைத்துள்ளோம் என அறிவித்தனர் விஞ்ஞானிகள்.


உலக விஞ்ஞானிகள் இணைந்து உற்சாகமும் குதூகலிப்புடன் உலகின் ஐந்து இடங்களில் ஒரே நேரத்தில் பத்திரிகையாளர்கள் சந்திப்புகளை நிகழ்த்தி இந்த விடயத்தை வெளிப்படுத்தினர். இதுவே கருந்துளைகளின் முதல் முதல் ஒளிப்படம் என்றும் அவர்கள் கூறினர்.

இருபதாம் நூற்றாண்டில் ஐன்ஸ்டீனின் பொதுச் சார்பியல் தத்துவத்தின் தொடர்ச்சியாகக் கார்ல் சுவார்ட்ஷில்ட் 1916ஆம் ஆண்டில் கருந்துளைகள் என்கிற வினோத வான்பொருள் ஏற்படலாமென யூகம் செய்தார்.

அவரைத் தொடர்ந்து 1958ஆம் ஆண்டில் டேவிட் வ்பிங்கல்ஸ்டீன் என்பார் கருந்துளைக்குள் சென்றாலும் திரும்ப வராது என்று நிறுவினார். 1967ஆம் ஆண்டில் ஜோன் வீலர் எனும் இயற்பியலாளர் 'கருந்துளை' என்ற பெயரை பிரபலப்படுத்தினர். ஆனால் சாதாரண மக்கள் கருந்துளைகள் குறித்து கேள்விப்படவைத்த பெருமை கருந்துளை நாயகன் ஸ்ரீபன் ஹாக்கிங் என்பது குறிப்பிடத்தக்கது.



# சீனாவில் தடம்புரண்டது ரயில் நான்கு பேர் நசுங்கிச் சாவு

பீஜிங்,ஏப்.12

சீனாவில் அலுமினிய உலோகத்தை ஏற்றிச் சென்ற சரக்கு ரயில் தடம் புரண்டது. அதில் 4 பேர் பரிதாபமாகச் சாவடைந்தனர். சீனாவின் மத்தியில் அமைந்துள்ள ஹெனான் மாகாணத்தில் நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சம்பவம் நடந்தது. விபத்தில் 6 பேர் காணாமல்போயிருந்தனர். அவர்களில் 4பேரே சாவடைந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டனர். இருவரைத் தேடும் பணி நடந்து வருகிறது.




# தோல்வியை ஏற்று ஸ்ராலின் அரசியலில் இருந்து விலகுவாரா?

## அன்புமணி ராமதாஸ் கேள்வி

“8வழிப்போக்குவரத்துத்திட்டத்தை நிறுத்துவதற்கு முதல்வர் எடப்பாடி பழனிசாமியின் ஒப்புதல் கிடைத்துள்ளது. பா.ம.காவுக்கு இது அடுத்த வெற்றி" என்று குறிப்பிட்ட அன்புமணிராமதாஸ், இந்தவிவகாரத்தில் தனதுதோல்வியைஒப்புக்கொண்டு ஸ்ராலின் அரசியலில் இருந்து விலகிக் கொள்வாரா? என்று கேள்வி எழுப்பினார்.
இது குறித்து இவர்மேலும்கூறியதாவது, 'தமிழக விவசாயி' களுக்கு ஆதரவாகச் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து, சென்னை - சேலம் இடையிலான 8 வழிச்சாலைத் திட்டத்தை நாம் நீக்கினோம்.
இப்போதாவது இந்த விடயத்தில் எனதுவெற்றியையும், தனதுதோல்வியையும் ஒப்புக்கொண்டு ஸ்ராலின் அரசியலில் இருந்து விலகிக் கொள்வாரா? என்பதைத்தெரிவிக்க வேண்டும். அதுமட்டுமின்றி இதற்காகவிவசாயிகளிடம்அவர்மன்னிப்புக் கோர வேண்டும்" என அன்புமணிராமதாஸ்தெரிவித்தார்.



# சைகை மூலம் வாக்குக் கேட்ட கமல்ஹாசன்



தமிழகம்,ஏப்.12
நடக்கவிருக்கும் இந்திய நாடாளுமன்றத் தேர்தலையொட்டி ஆரணி மக்களவைத் தொகுதியில் மக்கள் நீதி மய்யம் சார்பில் போட்டியிடுபவருக்கு ஆதரவாகப் பரப்புரை செய்யச் சென்ற மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் நடிகர் கமல்ஹாசனுக்கு ஆரணிநகருக்குள் அனுமதிமறுக்கப்பட்டது. இதனால் பரபரப்பு ஏற்பட்டது.
அந்தத் தொடர்ந்து திறந்த வாகனத்தில் பயணித்த கமல்ஹாசன், சைகை மூலம்- வாக்குக் கேட்டார்.
“கலைஞன் என்பதால் என்னால் பேசாமலேயே வாக்கு கேட்க முடியும்" என்று இது குறித்துக் கூறிய கமல்ஹாசன், சைகை மொழியில் தொடர்ந்தும் மக்களிடம் வாக்குக் கேட்டார். பின்னர் அங்கு பேசிய அவர், "மற்றக்கட்சிகளுக்கெல்லாம்வசதியான இடங்கள் கொடுத்தார்கள். மக்கள் நீதிமய்யத்தைஊருக்குவெளியில்நிறுத்தி வைக்கிறார்கள். ஆனாலும்கூட்டம்வந்து சேர்கிறது.
அனுமதிமறுத்தவர்களுக்குநன்றிசொல்லவேண்டும். இதனால்தான்நம்முடைய அன்பு வலுப்படுகிறது"- என்றார்.

# ‘வரும் ஆனா வராது’

## பா.ஜ.காவின் வாக்குறுதிகள் குறித்து ஸ்ராலின் கிண்டல்

புதுச்சேரி, ஏப்.12
ராஜீவ்காந்தி சிலை அருகே உள்ள மைதானத்தில் நடந்த பரப்புரைக் கூட்டத்தில்பேசியதி.மு.க.தலைவர் ஸ்ராலின், "பா.ஜ.க. 2 கோடி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்படும் என்றது. ஆனால், ஒருவருக்குக் கூட வேலை கொடுக்கவில்லை. வங்கிக் கணக்கில் 15 இலட்சம் போடப்படும் எனச் சொன்னார்கள். ஆனால், 15 பைசா கூட போடவில்லை. பா.ஜ.காவின் தேர்தல் வாக்குறுதிகள் அனைத்துமே வடிவேல் கூறுவது போல் 'வரும் ஆனா வராது'. தற்போது பா.ஜ.க வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கை கனவு காணும் தேர்தல் அறிக்கை. மோடியின் வெளிநாட்டுப் பயணத்தால்பலகோடிரூபாய்செலவழிக்கப்பட்டுள்ளது. மோடியை வீட்டுக்கு அனுப்புவதற்குமக்கள்தயாராகிவிட்டனர்" என்று குறிப்பிட்டார்.





# டிடிவி தினகரன் மிமிக்கிரி ஸ்டாலினின் குரலில் பேச்சு


## தொண்டர்கள் ஆரவாரம்

தஞ்சாவூர்,ஏப்.12
சிறுபான்மையினரின் பாதுகாவலன் என்னும் தங்களின் பேச்சு எடுபடாததால், இந்துக்களுக்கு நாங்கள் எதிரி அல்ல என்று தி.மு.காவினர் கூறி வருகின்றனர் என்று அ.ம.மு.க. துணைப்பொதுச் செயலர் டிடிவி தினகரன் விமர்சித்தார்.
அப்போது அவர் ஸ்ராலினின் குரலில்பேசிக்காட்டியதால், தொண்டர்கள் ஆர்ப்பரித்தனர்.
தஞ்சாவூரின் ஒரத்தநாடு பகுதியில் நடந்தபரப்புரையில்பேசியபோதே தினகரன் இவ்வாறு ஸ்ராலினின் குரலில் பேசினார்.

# பரப்புரையின்போது குஷ்புவுடன் சேட்டை!

பெங்களூரு,ஏப்.12
பெங்களூரு மத்திய தொகுதி காங்கிரஸ் வேட்பாளரான ரிஷ்வான் ஹர்சத்தைஆதரித்துக்குஷ்புநேற்றுப்பரப்புரையில்ஈடுபட்டார். அப்போதுஅங்கு கூட்டநெரிசல்ஏற்பட்டது. கூட்டத்தைத்தாண்டிகுஷ்புநடந்துகொண்டிருந்தபோது, ஒருவர் தகாத முறையில் குஷ்பு மீது கை வைத்தார்.
உடனடியாகச்சம்பந்தப்பட்ட நபரைக் கன்னத்தில் அறைந்தார் குஷ்பு. அருகில் இருந்தவர்களும், பொலிஸாரும் உடனடியாக அந்த நபரைக் கூட்டத்திலிருந்துஅப்புறப்படுத்தினார்கள். இதுகுறித்தகாணொலிகள்இணையத்தில் பரவிவருகின்றன. இந்தக்காணொலிதொடர்பில்கருத்துகள்கூறும்அனைவரையும் சாடிவருகிறார் குஷ்பு.





# இன்றைய நாள்

**மேடம்:** பொறுமையுடன் செயல்படுவீர்கள். தொல்லை கொடுத்தவர் இடம் மாறிச் செல்வர். தொழில், வியாபார வளர்ச்சியால் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். எதிர்கால தேவைக்கு பணம் சேமிப்பீர்கள்.

**இடபம்:** நன்றி இல்லாதவருக்கு உதவும் நிலை வரலாம். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணிச்சுமை ஏற்படும். பணவரவுக்கேற்ப செலவைத் திட்டமிடுவீர்கள். பணியாளர்கள் பணி விஷயமாக வெளியூர் செல்வர்.

**மிதுனம்:** நினைத்ததை உடனே செயல்படுத்துவீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க, புதிய நுட்பங்களை பயன்படுத்துவீர்கள். உபரி வருமானம் கிடைக்கும்.

**கடகம்:** சமூக நிகழ்வுகள் அதிருப்தி தரலாம். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். கூடுதல் உழைப்பால் பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமையால் அவதிப்படுவர்.

**சிம்மம்:** உழைப்பின் அருமையால் பாராட்டு பெறுவீர்கள். நண்பர், உறவினர்களால் உதவி உண்டு. தொழில், வியாபாரத்தில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கும்.

**கன்னி:** செயலில் நியாயம், தர்மத்தை கடைபிடிப்பீர்கள். பலரும் உங்கள் மீது நல்லெண்ணம் கொள்வர். தொழில், வியாபார வளர்ச்சி முன்னேற்றம் தரும். கூடுதல் பணவரவால் சேமிப்பு உயரும். விரும்பிய உணவு வகைகளை உண்டு

**துலாம்:** சிலரது பேச்சு மனதிற்கு சங்கடம் தரும். தொழில், வியா பாரத்தில் வளர்ச்சி பெற, கூடுதல் நேரம் பணிபுரிவது அவசியம். பெண்களுக்கு பணவரவை விட வீட்டுச் செலவு அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** வழக்கத்திற்கு மாறான பணியால்தொந்தரவு ஏற்படும். தொழில், வியாபாரம் செழிக்க நண்பரின் உதவி கிடைக்கும். மிதமான பணவரவு கிடைக்கும்.

**தனுசு:** வாழ்வில் புதிய நம்பிக்கை ஏற்படும். பகைவரையும் மதிப்புடன் நடத்துவீர்கள். தொழில்வளம்பெற இஷ்ட தெய்வ அருள் பலம் துணை நிற்கும். ஆதாயம் பன்மடங்கு உயரும்.

**மகரம்:** நட்பின் பெருமையை உணருவீர்கள். எதிர்காலவாழ்வில்நம்பிக்கை அதிகரிக்கும். தொழில், வியாபாரம் தொடர்பாக கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:** பொது இடங்களில் நிதானித்து பேசவேண்டும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணிச்சுமை உருவாகும். புதிய இனங்களில் செலவு ஏற்படலாம்.

**மீனம்:** சமூகத்தில் நற்பெயரை பாதுகாத்துக் கொள்வது அவசியம். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கை அடைய கூடுதல் பணிபுரி வீர்கள்.






# ராஜன் கதிர்காமர் சுற்றுக் கிண்ணம் 20ஆவது தடவையாக பற்றிக்ஸிடம்















யாழ்ப்பாணம், ஏப். 12

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான ராஜன் கதிர்காமர் சுற்றுக் கிண்ணத்துக்கான நேற்றைய ஆட்டத்தில் 187 ஓட்டங்களால் வெற்றிபெற்று 20 ஆவது தடவையாக அந்தக் கிண்ணத்தை வசப்படுத்தியது சென். பற்றிக்ஸ்.

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று இந்த ஆட்டம் இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 299 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான டிலக்சன் 96 ஓட்டங்களைப் பெற்றார். அவர் சதத்தை நிறைவுசெய்வார் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் லோன் ஓன் திசையில் சிக்சர் விளாச முற்பட்டு ஆட்டமிழந்தார். அவரைவிட மொனிக் நிசாந்தன் 51 ஓட்டங்களையும், கஸ்ரோ 45 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் டிகாஸ் 4 இலக்குகளையும், சிந்துயன் 3 இலக்குகளையும், கேசவன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி 112 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்து 187 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அதிகபட்சமாக நிசாந் 15 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் பியற்றிஸ் 3 இலக்குகளையும், கஸ்ரோ, டினிசியஸ் இருவரும் தலா 2 இலக்குகளையும், மொனிக் நிதுசன், டிலக்சன் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாகவும், சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியின் டிலக்சன், சிறந்த சகலதுறை வீரராக அதே அணியின் மொனிக் துசாந், சிறந்த பந்துவீச்சாளராக யாழ்ப்பாணக் கல்லூரியின் பிரகாஸ், சிறந்த களத்தடுப்பாளராக சென். பற்றிக்ஸ்கல்லூரியின் ஜவன் றொசாந், சிறந்த இணைப்பாட்ட வீரர்களாக டிலக்சன் மற்றும் கஸ்ரோ ஆகியோர் தெரிவாகினர். (ம-23)

## இன்றைய ஆட்டங்கள்

கரணவாய், ஏப். 12

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடக்கின் நாயகன் வெற்றிக் கிண்ணத்துக்கான கால் பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்று மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புங்குடுதீவு சென். சேவியர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

4.30 மணிக்கு இடம்பெறும் மற்றொரு ஆட்டத்தில் புத்தூர் எவரெட்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.நீக்லஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

* * * *

கைதடி வளர்மதி சனசமூக நிலையத்தின் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் தாச்சிப் போட்டிகள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கோண்டாவில் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சுதுமலை நாவலர் விளை யாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளங்கதிர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தாவடி காளி அம்பாள் விளையாட்டுக்கழக 'ஏ' அணி மோதவுள்ளது.

(ஓ.23)

## மைதானத்துக்குள் நுழைதல் தகாது!

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான ராஜன் கதிர்காமர் சுற்றுக் கிண்ணத்துக்கான நேற்றைய ஆட்டத்தில் இரு அணிகளின் இரசிகர்களும் மாறிமாறி மைதா னத்துக்குள் நுழைந்த வண்ணம் இருந்தனர்.

பொன் அணிகளின் போரின் போது இரசிகர்கள் மைதானத்துக்குள் நுழைவது காலம் காலமாக இடம்பெற்ற வருகின்றது. வடக்கின் போரின்போது (சென். ஜோன்ஸ் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி இடையிலான ஆட்டம்) மைதானத்துக்குள் இரசிகர்கள் நுழைவது முற்றாகவே தடை செய்யப்பட்டபோதிலும் பொன் அணிகளின் நேற்றைய ஆட்டத்திலும் ரசிகர்கள் மைதானத்துக்குள் அதிகமாகவே அத்துமீறினர். இந்த நிலை அடுத்த வருடமும் தொடரக்கூடாது என்பதே பெரும்பாலான இரசிகர்களின் விருப்பம். (ம)

## கடினப்பந்து ஆடுகளம் இருந்தும் விரிப்பில் இடம்பெற்றது ஆட்டம்!

யாழ்ப்பாணம், ஏப். 12

வடமாகாணத்தில் கடினப்பந்து ஆடுகளம் உள்ள ஒரே பாடசாலை என்ற சிறப்பு யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கு உண்டு. எனினும் அந்தப் பாடசாலைக்கும் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான ராஜன் கதிர்காமர் சுற்றுக் கிண்ணத்துக்கான ஆட்டம் விரிப்பிலேயே இடம்பெற்றது.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியரைத் தொடர்புகொண்டு கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:

கடினப்பந்து ஆடுகளத்தின் தன்மைகள் மற்றும் அதன் நுணுக்கங்கள் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கு உண்டு. எனினும் இந்த வருட ராஜன் கதிர்காமர் கிண்ணத்துக்காக கடினப்பந்து ஆடுகளத்தில் விளையாடுவதற்கு ஏற்ற வகையில் தம்மைத் தயார்ப்படுத்த யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கு போதிய அவகாசம் கிடைக்கவில்லை. எனவே அடுத்த வருடம் உரிய தயார்ப்படுத்தல்களுடன் கடினப்பந்து ஆடுகளத்தில் மேற்படி ஆட்டம் இடம்பெறும் - என்றார். (ம-23)

உலகக் கிண்ண

# இலங்கை அணியை தெரிவு செய்வதில் குழப்பம்

## அசந்த டி மெல் தெரிவிப்பு



இலங்கை அணியின் முக்கியமான வீரர்கள் தற்போது நடைபெறும் உலகக் கிண்ணத்துக்கான வீரர்களை தெரிவு செய்வதற்கான முன்னோடிப்போட்டியில் சிறப்பாக விளையாடாததன் காரணமாக உலகக் கிண்ணத்துக்கான அணியைத் தெரிவு செய்வது குழப்பமானதாக மாறியுள்ளது என தெரிவுக்குழுவின் தலைவர் அசந்த டி மெல் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

அனைத்து வீரர்கள் விளையாடும் விதத்தையும் உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம். முக்கிய வீரர்கள் விளையாடும் விதம் குறித்து நாங்கள் மகிழ்ச்சியடைய முடியாது . ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் விளையாடும் விதம் ஏமாற்றம் அளிக்கின்றது. அதனைவிட இளம் வீரர்கள் சிறப்பாக விளையாடுகின்றனர்.

இவர்கள் விளையாடும் விதத்தை அடிப்படையாக வைத்து 15 வீரர்கள் குறித்து ஓரளவு தீர்மானித்துள்ளோம். உலகக் கிண்ணப்போட்டிகளுக்கு இளம் வீரர்களைத் தெரிவுசெய்ய முடியாது. இதுவே பிரச்சினையாக உள்ளது .

எங்களால் ஐம்பது பந்துப்பரிமாற்றங்கள் விளையாட முடியாத நிலை காணப்படுகின்றது. தற்போதைய தொடரில் ஒரு சதம் மாத்திரமே பெறப்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை டெஸ்ட் அணியின் தலைவர் திமுத் கருணாரட்ண உலகக் கிண்ணத்துக்கான வீரர்களைத் தெரிவு செய்வதற்கான முன்னோடிப்போட்டியில் சிறப்பாக விளையாடி வருகின்றமை மகிழ்ச்சி.

நாங்கள் அவரை ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களமிறக்க விரும்புகின்றோம். ஐம்பது பந்துப்பரிமாற்றங்கள் வரை விளையாடக்கூடிய வீரர் ஒருவர் இலங்கை அணிக்கு அவசியமாகவுள்ளது - என்றார்.

# சென்னை – மும்பையின் யுக்திகளை பின்பற்றுங்கள்

## பெங்களூர் அணிக்கு வில்லியர்ஸ் அறிவுரை

12ஆவது ஐ.பி.எல். தொடரில் பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணியால் எந்தவொரு போட்டியிலும் வெற்றி பெற முடியவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும் என்று அந்த அணியின் வீரரும் தென்னாபிரிக்கா அணியின் அதிரடித் துடுப்பாட்ட வீரருமான டி வில்லியர்ஸ் தெரிவித்தார். இதுவரை பெங்களூர் அணி 7 போட்டிகளில் தோல்விகளைச் சந்தித்துள்ளது.

இது குறித்து டி வில்லியர்ஸ் தெரிவிக்கையில்:

இந்த ஐ.பி.எல். தொடரில் பெங்களூர் அணி தான் மோதிய அனைத்து ஆட்டங்களிலும் தோல்வி அடைந்துள்ளது. குறிப்பாக அணியின் சொந்த மைதானத்திலேயே போட்டியை வெல்ல முடியாமல் தோல்வியடைந்ததுதான் சரிவுக்கு முக்கியக் காரணமாகும்.

ரி-20 போட்டித் தொடரில் வெற்றி பெற வேண்டுமென்றால், முடிந்தவரை அணியின் சொந்த மைதானங்களில் நடக்கும் ஆட்டங்களில் வெல்ல வேண்டியது அவசியம். அப்போதுதான் ரசிகர்களுக்கு ஆர்வத்தையும், வீரர்களிடம் நம்பிக்கையையும் வளர்க்க முடியும்.

சொந்த மைதானத்தில், சொந்த ரசிகர்கள் முன்னிலையில் விளையாடும்போது, நிலைத்தன்மையுடன் விளையாட வேண்டும் என்ற எண்ணம் ஏற்படும். ஆடுகளத்தையும் நன்றாக அறிந்து கொள்ளலாம். திறமையான, தேவையான வீரர்களைத் தேர்வு செய்து, சூழலுக்கு ஏற்றால் போல் பயன்படுத்த முடியும். நெருக்கடியான சூழலை சமாளிக்க தெளிவாக திட்டமிடுதலுடன் களமிறங்கலாம்.

மும்பை இந்தியன், சென்னை சுப்பர் கிங்ஸ் அணிகள் தங்களது சொந்த மைதானங்களில் மோதுகின்ற போட்டிகளில் அவர்கள் வெற்றி பெறுகின்றனர்.

ஆதலால் இழந்த நம்பிக்கையை மீட்டெடுக்க பெங்களூர் அணி சொந்த மைதானத்தில் நடக்கும் போட்டிகளில் வெல்வது அவசியம். அதற்கு மும்பை அணி, டோனி தலைமையிலான சென்னை அணி தேர்ந்தெடுக்கும் யுக்திகளைப் பின்பற்றி நடக்க வேண்டும்-என்றார்.




# பொலார்ட் காட்டாட்டம் மும்பை திரில் வெற்றி



12 ஐ.பி.எல் தொடரின் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற போட்டியில் மும்பை - பஞ்சாப் அணிகள் மோதின. இதில் பொலார்ட்டின் அதிரடியில் மும்பை அணி 3 இலக்குகளால் திரில் வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மும்பை அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. பஞ்சாப் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக கே.எல். ராகுல், கெய்ல் களமிறங்கினர். இருவரும் இணைந்து அணிக்கு பலமான அடித்தளத்தை அமைத்தனர். நீண்ட நாள்களின் பின்னர் கிறிஸ் கெய்ல் தனது அதிரடியை வெளிப்படுத்தியிருந்தார். அணி 116 ஓட்டங்களைப் பெற்ற போது கெய்ல் 7 ஆறு ஓட்டங்கள், 3 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 63 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். கெய்லின் ஆட்டமிழப்போடு அடுத்த ஒவ்வொரு 10 ஓட்டங்களுக்கும் 3 இலக்குகள் தொடர்ச்சியாக இழக்கப்பட்டன. கே.எல் ராகுல் ஆட்டமிழக்காது அதிரடியாக ஆடி 64 பந்துகளில் 100 ஓட்டங்களைப் பெற்றார். அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 197 ஓட்டங்களைப் பெற்றது.

பந்து வீச்சில் பாண்டியா 2 இலக்குகளையும், பெகன்ரோ, பும்ரா தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பொலார்ட்டின் தலைமையில் பதிலுக்குக் களமிறங்கிய மும்பை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக டி குக், லாட் களமிறங்கினர். அணி 100 ஓட்டங்களை எட்டுவதற்குள் 4 இலக்குகளை இழந்து பரிதவித்தது. மறுமுனையில் தனியொருவராக பொலார்ட் அதிரடி காட்ட ஆரம்பித்தார். அவர் 10 ஆறு ஓட்டங்கள், 3 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 83 ஓட்டங்களைக் குவித்தார். டி குக் 24 ஓட்டங்களையும், யாதவ் 21ஓட்டங்களையும், பாண்டியா 19 ஓட்டங்களையும் பெற்றனர். இறுதிப் பந்துப்பரிமாற்றத்தில் மும்பை அணிக்கு வெற்றி பெறுவதற்கு 15 ஓட்டங்கள் தேவைப்பட்டது. முதலாவது பந்தை பொலார்ட் எதிர் கொண்டார். முதல் பந்து முறையற்ற பந்தாக வீசப்பட அதில் ஓர் 6 ஓட்டமும் எடுக்கப்பட்டது. அடுத்த பந்தில் ஓர் 4 ஓட்டம் எடுத்து மூன்றாவது பந்தில் ஆட்டமிழந்தார் பொலார்ட். பொலார்ட்டின் ஆட்டமிழப்போடு இன்னும் விறுவிறுப்பானது போட்டி. இறுதிப் பந்தில் 2 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் ஜோசப் அந்த இரண்டு ஓட்டங்களையும் அடித்தார். அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

பந்து வீச்சில் மொகமட் சமி 3 இலக்குகளையும், அஸ்வின், கர்ரன், ராஜ்பொட் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக மும்பை அணியின் பொலார்ட் தெரிவு செய்யப்பட்டார்.



# விஸ்டன் விருது – 2018

## கோக்லி, மந்தனா முதன்மை இடத்தில்

விஸ்டன் புத்தகத்தின் 2018ஆம் ஆண்டுக்கான, உலகின் முதன்மை கிரிக்கெட் வீரர் விருதை இந்திய அணித் தலைவர் விராட் கோக்லியும், முதன்மை கிரிக்கெட் வீராங்கனை விருதை இந்திய பெண்கள் அணி வீராங்கனை ஸ்மிருதி மந்தனாவும் தட்டிச் சென்றுள்ளனர். இந்த விருதை கோக்லி வெல்வது இது 3 ஆவது முறையாகும். மந்தனா முதல் தடவையாக பெற்றுள்ளார்.

விஸ்டன் விருதை பிரட்மன் 10 தடவையும், ஜேக் ஹாப்ஸ் 8 தடவையும் ஏற்கனவே பெற்றுள்ளனர்.

அத்துடன் விஸ்டன் புத்தகம் வெளியிட்டுள்ள, இந்த ஆண்டுக்கான சிறந்த 5 கிரிக்கெட் வீரர்கள் பட்டியலில் கோக்லியுடன், இங்கிலாந்து வீராங்கனை டேமி பியூமௌன்ட், ஜோஸ் பட்லர், சாம் கரன், ரோரி பேர்ன்ஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் ஆப்கானிஸ்தான் சுழற்பந்துவீச்சாளர் ரஷித் கான் உலகின் முதன்மை ரி- 20 பந்துவீச்சாளர் விருதை 2ஆவது முறையாகவும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மருத்துவமனையில் பீலே அனுமதி

பிரேசிலின் முன்னாள் கால்பந்து ஜாம்பவானான பீலே, பிரான்ஸ் நாட்டில் நடந்த கால்பந்து நிகழ்ச்சியில் கலந்து கொள்ள சென்று இருந்தபோது திடீரென உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டார். அவர் மருத்துவமனையில் அனுமதிக்கபட்டபோது சிறுநீரக தொற்று நோய் பாதிப்பு ஏற்பட்டு, சிறுநீரகத்தில் கல் அடைப்பு ஏற்பட்டுள்ளதாகவும், அதனை அகற்ற சத்திர சிகிச்சை மேற்கொள்ளவுள்ளதாவும் பிரேசில் மருத்துவமனை வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளது. ஆனால், எப்போது சத்திர சிகிச்சை செய்யப்படும் என்ற தகவல் வெளியிடவில்லை.



## FLC FRENCH LANGUAGE CENTRE

# பிரெஞ்ச்

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)

40, பலாலி வீதி, ஆரியகுளம்.
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் : 20.04.19 சனி காலை 8 மணி

181, பிரதான வீதி, நெல்லியடி.
0779 789 456 / 0762 669 614
ஆரம்பம் : 22.04.19 3.30pm

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
IELTS,SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.



## அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 582
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2019.04.11

இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 53,991,550/-

வெற்றி இலக்கங்கள்
07 08 29 70 M

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778



## ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 11.04.2019 | 2497 | கபிலம் |

இடபம்
வெற்றி இலக்கங்கள்: 06 35 37 50
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி: ரூ. 2, 953 222/=

12.04.2019 ம் திகதி வெள்ளிக் கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்



## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம்: 1560
சீட்டிழுப்பு திகதி: 11.04.2019

வெற்றி இலக்கங்கள்
11 33 48 67 O

அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ 29, 531, 276/=



## ALLIANCE FRANCAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

# af பிரெஞ்சு மொழி

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.

www.ambafrancelk.org

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.



## வீடு காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நகருக்கு அண்மையில் உள்ள பெருங்குளம் சந்தியில் 6 பரப்புக் காணியுடன் கூடிய இருவீடுகள் விற்பனைக்குண்டு. (CS/24652)(11,17)

077 993 2692,
0014 169 399 324 (கனடா)



## ஹோமியோபதி வைத்திய சேவை

(IAS வைத்திய சேவை நிலையம்)

சனிக்கிழமை நடைபெறவேண்டிய ஹோமியோபதி வைத்திய சேவை சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு 18.04.2019 வியாழக்கிழமை மாற்றப்பட்டுள்ளது. இல. 125, பிரதான வீதி (2ஆம் குறுக்குத்தெரு சந்தி) நீரிழிவு (சலரோகம்), மூட்டு வாதம், ஆஸ்துமா உட்பட 19 நோய்களை முற்றாக மாற்றிக்கொள்ள கடந்த 37 வருட அனுபவம் வாய்ந்த வைத்திய சேவை நடைபெறும்.

**18.04.2019 யாழ்ப்பாணம்**
**20.04.2019 பரந்தன்**
பதிவிற்கும் முற்பதிவுக்கும் **(077 444 1082)**


# அஜக்ஸ் – ஜுவன்ரிஸ் ஆட்டம் சமநிலையில்

ஸ்பானியக் கழகங்களுக்கிடையில் நேற்று இடம்பெற்ற சம்பியன் லீக் போட்டியொன்று சமநிலையில் முடிவடைந்தது.

அஜக்ஸ் - ஜுவன்ரிஸ் அணிகள் மோதிய முதல் பாதி ஆட்டத்தின் இறுதி நிமிடத்தில் ஜுவன்ரிஸ் அணி வீரர் ரொனால்டோ ஒரு கோலைப் போட முதல் பாதி ஆட்டத்தில் ஜுவன்ரிஸ் அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலிருந்தது. இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்த முதல் நிமிடத்தில் அஜக்ஸ் அணி வீரர் டேவிட் நிரேஷ் ஒரு கோலைப் போட்டார். ஆட்டத்தின் இறுதி நிமிடங்கள் வரையிலும் இரு அணி வீரர்களும் இன்னொரு கோலைப்போடுவதற்கு முயற்சித்த போதும் அவர்களால் முடியாது போக இறுதியில் 1:1 என்ற கணக்கில் சமநிலையில் போட்டி முடிவடைந்தது.


## கணினி திருத்தம் LAPTOP PC REPAIR

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம்.
யாழ்ப்பாணம் கிளிநொச்சி முல்லைத்தீவு வவுனியா மன்னார்

**சிசிரிவி கமரா 35000/= CCTV CAMERA**

4 CCTV CAMERAS 2MP, 4 CHANNEL DVR 1, 500GB HARDDISK, 8 BNC CONNECTORS,POWER SUPPLY1 DC PINS 4,TT WIRES 50METER, FULL COPPER WIRES 50 METER. WITH INSTALLATION CHARGES } 35000/=

077908 6737 GUNA BEST PC 522,Manippay Road, Oddumadam Junction,Jaffna.



## கட்டடம் வாடகைக்கு விடல்

### கேள்வி கோரல்

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சபைக்குச் சொந்தமான முதலாம் தளக் கட்டடத் தொகுதி வாடகைக்கு விடப்படவுள்ளது. தேவையுடையோர் இதனை அலுவலக நேரத்தில் பார்வையிட்டு தங்களின் கட்டட வாடகைக்கான கேள்விப் பத்திரத்தை 30.04.2019 ஆம் திகதிக்கு முன்னதாக சபைக்கு வழங்கிக் கொள்ளலாம்.

குறிப்பு:- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்கப்படும்.

அ.கேதீஸ்வரன்,
தலைவர்,
கிளி. மாவட்ட கூட்டுறவு சபை. (IN/9920)(11,17)



## Colombo - Wellawatte -Jaffna

# Video Editing

திருமணம்,பூப்புனிதநீராட்டு விழா, பிறந்தநாள்
பயிற்சி முடிவில் 100% வேலைத்திறனுக்கு உத்தரவாதம்
தொலைக்காட்சியில் பணிபுரியும் ஆசிரியரால் கற்பிக்கப்படும்
Adobe Premiere CC,EDIUS 7,After Effect CC, Photo Shop CC

**10 Days 20 Hours** Video Plugin

Colorcorrection,Adorage Filter,Mask,New blue,Blu ray writing
Skin smooth,Color Upgrading Wedding song Editing Tectnic,

விபரங்களுக்கு - 0773903123



## MAJESTIC CINEPLEX




மேலதிக விபரங்கள் தொடர்பாக அழையுங்கள்
011 5 999 999

CEYLON THEATRES Since 1928
www.ceylontheatres.lk
MajesticCineplexSL



## SUNJEY'S HOLDINGS Sunjeys A to Z Mart (Pvt) Ltd.

அனைவருக்கும் இனிய தமிழ்ப்புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

யாழ். மாவட்ட ஏக விநியோகஸ்தர்

**100% இயந்திர மோட்டார்**

புதுவருடத்தை முன்னிட்டு
நம்பமுடியாத விலையில் மாபெரும் விலைக்கழிவு
உங்கள் பணப்பையில் பணத்தை மேலதிகமாக சேமிக்கமுடியும்.
ரூபாய் 93 000 பெறுமதியானது
20.04.2019 வரை அல்லது
கையிருப்பில் உள்ளவரை ரூபாய் 85000 மட்டுமே
(ஒரு முறை சார்ச்சுக்கு ஏறத்தாழ 40 Km கிலோ மீற்றர்)

பெட்ரோல் தேவையில்லை.
சூழல் மாசடையாது.
எண்ணெய் மாற்றத் தேவையில்லை.
புகை பரிசோதனை தேவையில்லை.

### DESCRIPTION OF BIKE

| | |
|---|---|
| Motor Capacity | 800 WATT (0.95HP) |
| Battery | 60 VOLT 20AH |
| Charging Voltage | AC 220V |
| Max Load | 120-140 KG |
| Max Speed | 25 TO 35 KM/H |
| Electricity Charge Cost For One Full Charge | ONE UNIT |
| One Time Charge | 4-6 HRS |

இல. 98, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில்)

sunjeys A to Z mart இல் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு 3 000 ரூபாவிற்கு மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு 10% கழிவு வழங்கப்படும். மேலும் 5000 ரூபாவிற்கு மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு (எமது நிறுவனத் தில் இருந்து 6Km சுற்று வட்டாரத்தில் இருப்பவர்களுக்கு) வீட்டிற்கு கொண்டு வந்து தரப்படும்.

இச் சலுகை **12.04.2019 - 20.04.2019** வரை மட்டுமே!

மேலும் 3 000 ரூபாவிற்கு மேல் கொள்வனவு செய்யப்படும் வாடிக்கையாளர்களுக்கு கொக்குவில் மஞ்சவனபதி தீர்த்த திருவிழாவின் போது (14.09.2019) பிற்பகல் 4.00 மணியளவில் சீட்டெடுப்பு இடம்பெறும்.

**1ஆம் பரிசு -**
எலக்ரிக்கல் மோட்டார் சைக்கிள்
**2ஆம் பரிசு -**
இரண்டு அடுப்பு கொண்ட ஹாஸ் குக்கர்
**3ஆம் பரிசு -**
றயிஸ் குக்கர்

**ஆறுதல் பரிசாக** 10 வெற்றியாளர்களுக்கு 500 ரூபா பெறுமதியான A to Z mart வவுச்சர் வழங்கப்படும்.

**குறிப்பு** : கடன் அட்டைகள், ATM அட்டைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

இல. 100, அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில்)

021 205 3077, 0777 474 111


## 45 ஆம் நாள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 30 . 03 . 1990



உதிர்வு 27 . 02 . 2019

### அமரர் நிஷானி திருச்செல்வம்

பூமியிலே புகலிடமாய் மலர்ந்தாய்
சிரித்த முகத்துடன் திட்டங்கள் வகுத்து
திடமாய் வாழ்வதற்கு முன்
திசைமாறிப் போனது உன்கதை
45 ஆம் நாள் ஆனாலும்
மாறாது உன் நினைவு

எமது அன்புத் தெய்வத்தின் மரணச் சடங்கில் பங்குபற்றி உதவிகள் புரிந்தவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (12.04.2019) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உரும்பிராய் வடக்கு. குடும்பத்தினர்.


## விசேட வகுப்புக்கள்

சகல போட்டிப்பரீட்சைகளுக்குமான இவ்வார வகுப்புக்கள் சனி (13/4), திங்கள் (15/4) நடைபெறும்

நேர விபரங்களுக்கு 076 688 3394

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதியில் பஸ்நிலையத்திலிருந்து 100m தூரத்தில்)

## விசேட கருத்தரங்கு

P.உமாசங்கர் & வளவாளர்களின்

- SLAS,SLEAS (open/Limited)
- நீதிமன்றபதிவாளர் (open/Limited)
- புள்ளிவிவரவியலாளர் & அலுவலர்
- பாராளுமன்ற - உத்தியோகத்தர்
- சிறைச்சாலை உத்தியோகத்தர்
- பட்டதாரி ஆசிரியர்
- சட்டக்கல்லூரி தெரிவு

P.உமாசங்கர் & Guest Lecture - Tbr

பொது அறிவு, நுண்ணறிவு/ உளச்சார்பு, முகாமைத்துவம், முகாமை உளச்சார்பு

**15.04.2019 திங்கள்**
9am to 4.30 pm

நவீன மாற்றத்திற்கு அமைய முற்றிலும் எதிர்பார்க்கை விடயங்களுடன்
தொடர்ந்து பிரதி ஞாயிறுக்கிழமைகளில்

நாவலர் கல்வி நிறுவனம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
076 166 1986, 077 741 7143,
077 394 2964, 071 813 0390


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.04.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.